E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

ஜூலை 2020
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



கொல்லத்தில்
கொரோனா தேவி கோவில்

குமரகுரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு

"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்

KCLAS KUMARAGURU

குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்படையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

KCT BUSINESS SCHOOL

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

KUMARAGURU institute of agriculture

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate • Incubate • Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE

போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in

பொதுத்துறை நிறுவனங்களை இன்றைய மத்திய ஆட்சி தனியார் துறைக்குத் தடம் மாற்றுவதை, மக்கள் விரோதப் போக்கு என்று அரசியல் கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன.

24 ஆண்டுகளுக்கு முன்பே (1996) பொதுத்துறை நிறுவனங்கள் பொதுமக்களுக்கு நன்மை செய்கிற நிறுவனங்களாகவும் லாபகரமான நிலையிலும் இல்லை என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

அரசுக்கு இழப்பு இல்லாமல் செய்யும் நல்ல நோக்கத்தில் இதைப் பரிசீலித்தால்தான், நாம் வளம் பெற முடியும் என்ற இக்கருத்தை இந்த மாத அருட்செல்வரின் சுரங்கத்தில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

– இ.ஆர்.

டாக்டர் நா. மகாலிங்கம்

ஆட்சிக்கு மட்டும்தான் சுதேசியமா?

இந்தியாவின் இன்றைய சுமை நமது வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன் தொகைதான். ரூ. 7.20 லட்சம் கோடி. இதற்காக நாம் பல்வேறு நாடுகளுக்குச் செலுத்துகின்ற வருட வட்டி எவ்வளவு தெரியுமா? ரூ. 62 ஆயிரம் கோடி!

இவ்வளவு பெரிய வட்டித் தொகையைச் செலுத்திவிட்டு மேலும் மேலும் கடன் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறோம்.

ஒரு பெரிய குடும்பத்தில் கடன் அதிகரித்துவிட்டது என்றால் அக்குடும்பத்தார் முதலில் தங்களுடைய பெரிய செலவுகளைக் குறைத்துக் கொள்வார்கள். அதன் மூலம் மேலும் கடன் வாங்காத அளவிற்குத் தங்களை ஆக்கிக் கொள்வார்கள்.

அதன் பிறகும் கடன் தீரவில்லை என்றால், தங்களுடைய சில முக்கியச் சொத்துக்களை விற்றாவது கடனை அடைப்பார்கள். காரணம், மேலும் மேலும் வட்டி அதிகரித்துவிட்டால் கடன் தொகையைவிட வட்டித் தொகை அதிகரித்துவிடும். இதை எல்லாம் தவிர்க்க, பொறுப்புள்ள குடும்பத்தார் மேற்கண்டவாறு திட்டமிடுவார்கள். இன்றைய நமது நாட்டின் நிலையும் இதுதான்.

சென்ற பொதுத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் போட்டியிட்டன. மத்தியில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற உணர்வு அத்தனை கட்சிகளுக்கும் இருந்தது. 14 கட்சிகள் சேர்ந்து ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டு மத்திய ஆட்சி நடந்து வருகிறது.



காந்திஜி

பொறுப்புள்ள குடும்பத்தார் எப்படிக் கடனைக் கட்டுவதற்கு வழி காண்பார்களோ, அதுபோல இவர்களும் கடனைக் கட்டி முடிக்க முன்வந்திருக்க வேண்டும். வெளிநாட்டுக் கடனை விமர்சனம் செய்துதான் இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால், ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் கடனைத் திருப்பிக் கட்டுவதற்கான அடையாளங்கள் தெரியவில்லை.

ரூ. 7.20 லட்சம் கோடிக் கடன் தீர்க்கப்படுமானால் அதன் மூலம் ரூ. 68 ஆயிரம் கோடி வட்டியிலிருந்து நாடு விடுதலை பெற முடியும். தென்னிந்தியாவில் உள்ள 4 மாநில அரசுகளின் மொத்த 'பட்ஜெட்' தொகையைவிட, இக்கடன் தொகை அதிகமாகும்.

இந்தக் கடன் எப்போது ஏற்பட்டது?

லால்பகதூர் சாஸ்திரி சுமார் 2 ஆண்டுக்காலம் பிரதமராக இருந்து மறைந்த பிறகு, அடுத்து 1966 வாக்கில் திருமதி இந்திராகாந்தி பிரதமர் ஆனபோது நமது தேசக் கடன் ரூ. 5 ஆயிரம் கோடிதான். அதையே கடுமையாக அப்போது விமர்சனம் செய்தார்கள்.

இந்திராகாந்தி

நேருஜி

இந்திராகாந்தியின் 11 ஆண்டு ஆட்சி முடிந்த போது கடன் ரூ. 1.25 லட்சம் கோடி. ராஜீவ்காந்தி ஆட்சியில் இக்கடன் ரூ. 2.25 லட்சம் கோடியாகியது. சந்திரசேகர் ஆட்சிக்காலத்தில் ரூ. 3.75 லட்சம் கோடியாகியது. மொரார்ஜி ஆட்சிக் காலத்தில் புதிய கடன் இல்லை. ஆனால் நரசிம்மராவின் 5 ஆண்டு ஆட்சியில் இது ரூ. 7.2 லட்சம் கோடியாக உயர்ந்துவிட்டது.

ரூ. 68 ஆயிரம் கோடி வட்டி செலுத்துவதிலிருந்து நாம் எப்படி விடுதலை பெறுவது? இது தான் நம் முன்புள்ள இன்றைய சவால்.

நமது இந்திய ரயில்வேயில் சுமார் 20 லட்சம் பேர் பணிபுரிகிறார்கள். நமது டெலிபோன் மற்றும் தகவல் தொடர்புத் துறையிலும், மத்திய அரசின் பல்வேறு பிரிவுகளிலும் 25 லட்சம் பேர் வேலை செய்கிறார்கள். ரயில்வே, இந்தியன் ஏர்லைன்ஸ் முதலிய துறைகளை அரசுதான் நடத்திக் கொண்டிருக்கிறது.

இத்துடன், அரசுத்துறைத் தொழில் நிறுவனங்களான எஃகுத் தொழிற்சாலைகளும், கனரகத் தொழிற்சாலைகளும் பல உள்ளன. இவற்றிலும் பல லட்சக்கணக்கான பேர் வேலை செய்கின்றனர். இவ்வாறு அரசுத்துறைத் தொழில்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன.

இவற்றை அரசுதான் நடத்த வேண்டும் என்று இல்லை, தனியார் நடத்தினாலும் தவறு வந்து விடாது. பிறகு எதற்காக அரசாங்கம் தொடர்ந்து விடாப்பிடியாக நஷ்டம் ஏற்பட்டாலும் இவற்றை நடத்திக் கொண்டிருக்கிறது?

இந்தக் கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கேட்டாக வேண்டும்.

இந்திய அரசாங்கத்தை நான்கு பிரிவினர்கள் தங்கள் வசப்படுத்திக் கொண்டுள்ளனர். யார் அந்த 4 பிரிவினர்? 1. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் (Bureaucracy), 2. அரசுத்துறைத் தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் (Public Sector Units), 3. வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணிபுரிவோர் (Banking and Insurance) 4. நாமே தேர்ந்தெடுத்த நமது பிரதிநிதிகளான அரசியல்வாதிகள்.

இந்த 4 பிரிவினருக்கும் அரசுத் தொழில் நிறுவனங்கள், இன்சூரன்ஸ், ரயில்வேக்கள், விமானங்கள், டெலிபோன்கள், அரசுத்துறை வசம் இருந்தால்தான் அனுபவிப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்.

இவர்களுக்கு இவற்றில் சலுகைகள் அதிகம். டெலிபோனில் பேசவும், விமானத்தில் பறக்கவும், ரயிலில் பயணம் செய்யவும் இந்த 4 பிரிவினருக்கும் விசேஷ சலுகைகள் உள்ளன.

இவை எல்லாம் தனியார் துறையிடம் இருந்தால் நிர்ணயக் கட்டணத்தைக் கட்டினால்தான் இவர்கள் அவற்றைப் பயன்படுத்த முடியும்.

ஆகவே, அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், அரசுத்துறை நிறுவன மேலாளர்கள் இவர்கள் எல்லாம் இத்துறைகள் அரசின் கையைவிட்டுப் போகாமல் இருக்கவே ஆசைப்படுகிறார்கள்.

வங்கிகளையும், இன்சூரன்ஸ் கழகங்களையும் எடுத்துக்கொண்டால் அங்குள்ள சம்பள விகிதமும், பிற சலுகைகளும் மிக மிக அதிகம். அதில் பணியாற்றுபவர்கள் அமைத்துள்ள தொழிற் சங்கங்கள் பலம் வாய்ந்தவை.

அதன் காரணமாக, அவர்களுடைய கோரிக்கை எதுவாக இருந்தாலும் அரசாங்கம் அவர்களை எதிர்த்து ஜெயிக்க முடிவதில்லை. காரணம், அவர்கள் வங்கிகள் செயல்படுவதையே நிறுத்தி, பொருளாதாரத்தையே முடிக்க முடியும். இதைத்தான் இன்றைக்குத் தொலைத்தொடர்புத்

துறையில் நாம் அனுபவித் தோம்.

இந்த நிலையில், நாம் தொடர்ந்து வாங்கிக் கொண்டி ருக்கும் கடனோ ரூ. 7.25 லட்சம் கோடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ராஜீவ்காந்தி

நரசிம்மராவ்

இந்தக் கடன்களை அடைக்க வேண்டுமானால், அதற்கு ஒரே வழி, நட்டத் தில் நடந்து கொண்டிருக்கிற அரசுத்துறைத் தொழில் நிறுவனங்களில் உள்ள மூலதனப் பங்குகளை, மொத்தமாக விற்பனை செய்துவிட வேண்டும் அல்லது அந்த ஆலைகளை 50 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விட்டுவிடலாம்.

அதன் மூலம் அந்த நிறுவனங்கள் தனியார் வசமாகும். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளால் அது மீண்டும் நியாயமான லாபத்தைச் சம்பாதிக்கத் தொடங்கும்.

ரயில்வேயை விற்பனை செய்யலாம். நமது மாநில அரசின் பல்லவன், பாண்டியன் முதலிய போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 7 ஆயிரம். இவை அனைத்தும் அரசால் அனுமதிக் கப்பட்ட நெடுந்தூர வழித்தடங்களில் ஓடிக் கொண்டிருப்பவை. நல்ல வசூல் தரக்கூடியவை.

வழித்தட உரிமத்தோடு ஒரு பேருந்தை விற் பனை செய்தால், ஏறக்குறைய ரூ. 20 லட்சம் கிடைக்கும். 7 ஆயிரம் பேருந்துகளையும் ரூட்டு டன் சேர்த்து விற்றால், சுமார் ரூ. 1,400 கோடி தமிழக அரசுக்குக் கிடைக்கும்.

5 பேருந்துகளுக்கும் அதிகம் இல்லாத சிறிய பஸ் கம்பெனிகளுக்கு அவற்றை விற்கலாம். தனியார் பஸ் கம்பெனிகள் மூலம் அரசுக்கு வரியும் கிடைக்கும். ரூட்டோடு சேர்த்து பஸ்களை வாங்கி நடத்தப் பல தனியார் நிறுவனங்கள் முன்வரும்.

இதேபோல நமது ரயில்வேயை 200 கி.மீ., 500 கி.மீ. என்ற தூரங்களைப் பிரித்து விற்றால், போட்டி போட்டுக்கொண்டு வாங்கி நடத்தப் பல நிறுவனங்கள் முன்வரும். பேருந்துகளின் மூலம் கிடைப்பதைவிட, அரசுக்கு ரயில்வே மூலம் பல்லாயிரம் கோடிப் பணம் கிடைக்கும்.

மத்திய அரசு தனது கடன் சுமையைத் தீர்க்க அத்தொகையைப் பயன்படுத்தலாம்.

இதேபோல, மின்சார நிறுவனங்கள், அரசுத் துறை எஃகுத் தொழிற்சாலைகள் ஆகிய பல வற்றையும் மத்திய அரசு விற்றுக் கடன்களை முழுக்கத் தீர்க்கலாம்.

இப்படி விற்றுவிட்டால் ரூ. 7.25 லட்சம் கோடிக் கடனை ஒரே ஆண்டில் கட்டி விடலாம். அதனால் ரூ. 62 ஆயிரம் கோடி வருட வட்டியும் நீங்கிவிடும்.

தாராளமயக் கொள்கைப்படி வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்கள் இந்தியாவுக்குள் தொழில் செய்தால், நிச்சயமாகத் தொடக்கத்தில் சிறிது காலத்திற்குப் பொருள்களை மலிவான விலையில் தரமுடியும். இங்கே உள்ள இந்தியத் தொழில்களைப் போட்டி போட்டு அழிப்பதற் காகவே அந்நிறுவனங்கள் அவ்வாறு செய்யலாம். அதன் பிறகு அவை ஏகபோகத் தொழில் நிறு வனங்களாக மாறிவிடும். இதுதான் அனுபவம்.

பெப்சி, கோகோ கோலா குளிர்பானங்களை உற்பத்தி செய்யும் அமெரிக்கக் கம்பெனி, இந்தியாவின் பார்லே கம்பெனியை ரூ. 170 கோடி கொடுத்து ஒரே நாளில் கபளீகரம் செய்துவிட்டது.

மேல்நாட்டில் உற்பத்தியாகும் 'கண்டங்கி' சிக்கன் இங்கு இறக்குமதியாகப் போகிறதாம். டூத் பேஸ்டுக்கு வெளிநாட்டுக் கம்பெனியா? சென்ற 3 மாதங்களில் மட்டும் 300 புதிய வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அனு மதி தந்துள்ளதாகத் தகவல்.

இந்தியப் பொருளாதாரத்தைத் துரிதமாக

அபிவிருத்தி செய்வதற்கு இதுதான் ராஜதந்திரம் என்றால், மத்தியில் ஆட்சி செய்வதற்குக்கூட வெளிநாட்டு நிபுணர்களை அழைக்கலாமே? ஏன் அழைக்கவில்லை?

ஆட்சி மட்டும் சுதேசியாக இருக்க வேண்டும். நாமே ஆள வேண்டும். ஆனால் பொருளாதாரம் சுதேசியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றால் இது என்ன சுதந்திரம்?

இன்றைக்கு நம் முன்புள்ள கேள்வி, நாம் எந்தத் திசை வழியில் செல்ல வேண்டும் என்பதுதான்.

1934 – 39 வரை மகாத்மா காந்தியடிகள் 'யங் இண்டியா', 'ஹரிஜன்' பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளை இன்றைய அரசியல்வாதிகள், அமைச்சர்கள், ஆசிரியர்கள் அனைவரும் படித்தாக வேண்டும். அவர் சொன்ன கருத்துக்களை அமல் செய்தால் போதும். விடுதலை பெற்ற நமது நாடு விருத்தி அடைந்துவிடும்.

நம் நாட்டில் கிராம மக்களுக்கு ஆண்டின் 365 நாட்களில் 150 நாட்களுக்குத்தான் விவசாய வேலை கிடைக்கிறது. அதற்குப் பிறகு பருவ மழை இல்லை. பாசன வசதி இல்லை. ஆகவே, கிராம மக்களுக்கு வேலைகளும் இல்லை.

காந்திஜி கிராமங்களில் இதைத்தான் கண்டார். வேலை இல்லாத கிராம விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலை தர வேண்டும். அப்போதுதான் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அதைச் சிந்தித்தார்.

கிராமங்களில் பெரிய தொழில்கள் தொடங்க வேண்டுமானால் மூலதனத்திற்கு எங்கே போவது? ஆகவேதான் குறைந்த மூலதனம் உள்ள கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்ய அவர் திட்டமிட்டார். சோப்பு உற்பத்தி, நெசவு, மண்பாண்டம், தோல், காலணிகள், கூடை முடைதல், அம்பர் ராட்டையில் கதர் நூல் இவ்வாறு பலவற்றைக் கிராமங்களில் அமைக்க விரும்பினார். இதன் மூலம் ஆண்டு முழுவதும் கிராம மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

நகரங்களில் இவற்றை எந்திரங்கள் மூலம் செய்தால் அதிகமான பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியாது. ஆகவேதான் எந்திரங்களைக் குறைத்துக் கொண்டு, கைத்தொழில் மூலமாக வேலை வாய்ப்பை கிராமங்களில் உருவாக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

1948–இல் காந்திஜி மறைவுக்குப் பிறகு இந்தச் சிந்தனைக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் தரவில்லை. தேசத்தை வேகமாகத் தொழில்மயப்படுத்த வேண்டும் என்று அவர்கள் பாடுபட்டது உண்மைதான். ஆனால், நகரங்களில்தான் அந்தத் தொழில்கள் அமைந்தன. கிராமங்களில் அமையவில்லை.

இதில் காந்திஜிக்கும் நேருஜிக்கும் அணுகுமுறையில் அபிப்பிராய பேதம் இருக்கத்தான் செய்தது. காந்திஜியின் கிராமக் குடியரசு, கிராம அளவில் சுயதேவை பூர்த்தியாக இருந்தது. நேருஜியின் கண்ணோட்டமோ, இந்திய தேசத்தை ரஷ்யாவைப்போல் ஒரு வல்லரசு தேசமாக்கத் திட்டமிடும் அணுகுமுறையாக இருந்தது.

ஆகவே, காந்திஜிக்கு நேருஜி எழுதிய ஒரு கடிதத்தில், இருவருக்கும் இத்தகைய அபிப்பிராய பேதம் இருந்து வருவதை மக்களுக்குச் சொல்லிவிடுமாறு அந்தக் கடிதத்தில் நேருஜியே குறிப்பிட்டிருந்தார். ஏனோ காந்திஜி அந்த அபிப்பிராய பேதத்தை வெளியிடவில்லை.

நமது நாட்டில் இதுவரை ஏழு ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் ரூ. 20 லட்சம் கோடி மதிப்புள்ள முதலீடுகளைச் செய்துள்ளோம். அந்த முதலீட்டின் காரணமாக, ரசாயனத் தொழிற்சாலைகள், கனரகத் தொழிற்சாலைகள், அணைகள், அலுவலகங்கள், கல்லூரிக் கட்டடங்கள், நெடுஞ்சாலைகள் நாடு முழுவதிலும் தோன்றியுள்ளன.

இவை எல்லாம் 1947 ஆகஸ்ட் 15–க்கு முன்பு இந்தியாவில் இல்லை.

ஆகவே, சென்ற 50 ஆண்டுக் காலத்தில் நமது நாட்டில் ரூ. 20 லட்சம் கோடி மதிப்புள்ள சொத்துக்களை நாம் உருவாக்கி இருக்கும்போது, வெளிநாட்டுக் கடன்தொகையான ரூ. 7.25 லட்சம் கோடியை நினைத்து அச்சப்படத் தேவையில்லை.

நாம் அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துகிற சக்தி உள்ளவர்களாகத்தான் வளர்ந்திருக்கிறோம். இப்போது நம் முன்புள்ள கேள்வி, ஆண்டுதோறும் ரூ. 62 ஆயிரம் கோடி வட்டியைத் தொடர்ந்து கட்டிக்கொண்டே இருப்பதா? அல்லது முழுக்கடனையும் அடைத்துவிடுவதா?

நமது நாட்டுக்குள்ளேயே நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தொழில்களைத் தாராளமயக் கொள்கையின் மூலம் லாபகரமான தொழில்களாக மாற்றினால், மேலும் கடன் வாங்கவேண்டிய அவசியமே இருக்காது.

இதற்குத் தேவை மத்திய அரசுக்குத் தைரியமும், நமது தலைவர்களுக்குத் தன்னம்பிக்கையும் தான்.

NEWS 7 TAMIL தொலைக்காட்சிக்கு

டாக்டர் ம. மாணிக்கம் பேட்டி

கொரோனாவிற்குப் பிறகு தேசம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

கொரோனாவிற்குப் பிறகு என்பது பற்றிய அனுபவம் இன்னும் வரவில்லை. இன்னும் நாம் கொரோனாவில்தான் இருக்கிறோம். கொரோனாவிற்குப் பிறகு எப்பொழுது அது வரும் என்று நமக்கு இன்னும் தெரியவில்லை. கொரோனாவிற்குப் பிறகு என்று சொல்லும்போதே, அது எப்போது வரப்போகிறது, என்ன மாதிரி வரப்போகிறது என்று தெரிந்தால்தான் நாம் அதைப்பற்றிச் சொல்ல முடியும்.

அது இந்த ஜூன் மாதத்திற்குப் பிறகு வரைக்குமா? அல்லது டிசம்பர் வரைக்குமா? தெரியவில்லை.

வடமாநிலத் தொழிலாளர்களெல்லாம் திரும்பிப் போய்விட்டனர். வேலை செய்வதற்கு ஆட்கள் இல்லை. அது மட்டுமில்லை, இன்று விவசாய விளை பொருள்களை வாங்குவதற்கும் மக்கள் இல்லை. இவற்றை எல்லாம் பார்க்கும்போது, சமுதாயத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் இந்தப் பாதிப்பு வந்திருக்கிறது.

கிட்டத்தட்ட இது பத்தாண்டுகளுக்கு வளர்ச்சி இல்லாத மாதிரிதான். எங்களைப் பொறுத்தவரை ஆட்டோமொபைல் இண்டஸ்ட்ரியில் மாதம் ரூ. 70 கோடி அளவில் வியாபாரம் செய்வோம். அதில் மாருதி கார் தொழிற்சாலை மட்டும் ரூ. 35 கோடிக்கு எங்கள் சக்தி ஆட்டோ காம்பொனெட்டில் சாமான்களை வாங்கிக் கொண்டிருப்பார்கள். இந்த மாதம் மாருதி ரூ. 3 கோடிக்குத்தான் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்.

இந்நிலையில், நாங்கள் ரூ. 15 கோடி வியாபாரம் செய்தாலே பெரிது. ரூ. 10 கோடி அல்லது ரூ. 12 கோடிதான் வியாபாரம் வரும்போல் இருக்கிறது.

ரூ. 70 கோடி வியாபாரம் நிச்சய

மாக வரப்போவதில்லை. ரூ. 30 கோடி முதல் ரூ. 40 கோடி வரை செய்தால், அதுவே பெரிய சாதனை. அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். ரூ. 35 கோடி என நினைக்கும்போது, அது பாதிக்குப் பாதிதான்.

ஸ்திரமில்லாத இந்த நிலையில், எப்போது பழைய நிலைக்குத் திரும்பி வருவோம் என்று எதிர்பார்க்க யாரா லும் முடியாது. இது எப்படி என்றால், திடீரென்று ஸ்விட்ச் ஆஃப் செய்து விட்டு, உடனே ஸ்விட்ச் ஆன் செய்வது போன்றது. நமது அரசாங்கம் மட்டும் இதைச் செய்யவில்லை. எல்லா நாடு களின் அரசாங்கங்களும் செய்திருக்கின்றன.

இந்த அளவிற்குப் பயந்திருக்க வேண்டுமா? அல்லது வேறு மாதிரி இந்த நிலைமையைக் கையாண்டிருக்க வேண்டுமா என்பது ஒரு கேள்விக்குறி.

உலகமெங்கும் இந்த நிலை வந்தத னால், டிமாண்ட் டிஸ்ட்ரக்ஷன் (Demand Destruction) என்ற ஒருவிதப் (ஃபினோமினா) போக்கு வந்திருக்கிறது. அதனால், எந்தப் பொருளை உற்பத்தி செய்ய முடிந்தாலும், அதை வாங்கு வதற்கு இப்போது ஆள்கள் இல்லை. நாம் முந்தைய சகஜ நிலைக்கு வந்தால் கூட, யார் எவ்வளவு வாங்கப் போகி றார்கள் என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாக இருப்பதால், பழைய நிலைக்கு வர முடியுமா என்பது ஒரு பெரிய ஐயப் பாடாக இருக்கிறது. இதுதான் இப்போதைய பிரச்சனை.

இக்ரா (ஐ.சி.ஆர்.ஏ.) ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆட்டோ மொபைல் சேல்ஸ் என்று பார்த்தால், 2018–இல் எவ்வளவு விற்றோமோ, அந்த விற்பனை வருவதற்கே இன்னும் நான்கு ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள். அதா வது இன்று முதல் நான்கு ஆண்டுகள் என்றால், 2024–இல்தான் நமக்கு 2018–இல் விற்பனை செய்த நிலைமை வரும்.

எல்லாத் தொழிலதிபர்களுக்கும் இப்போது என்ன ஆயிற்று என்றால், கடந்த 15 – 20 ஆண்டுகளாக இருந்த வங்கிகளின் கெடுபிடி மற்றும் அரசாங் கத்தின் கெடுபிடி இப்போது இல்லை. இப்போது பிரச்சனையே கடனை வாங்க வேண்டுமா என்பதுதான்.

இன்றைக்கு அரசாங்கம் கடன் கொடுக்கிறேன் என்பது, வேண்டாத ஆளுக்குப் பணம் கொடுப்பது போன் றதுதான். இதை யாரும் வாங்கப் போவ தில்லை. இந்தக் கடனை வாங்கினால், எப்படி அதைத் திருப்பிக் கொடுப்பது? அதைப் பற்றி அவர்கள் பேசவில்லை, வட்டி விகிதம் எவ்வளவு என்பது பற்றிப் பேசவில்லை. கடன் மட்டும் கொடுக்கிறேன் என்கிறார்கள். கடன் கொடுப்பதனால், அதை வாங்கிவிட் டால் பிரச்சனைதான் வரும். அதனால், யாருமே அந்தக் கடனை வாங்கும் மன நிலையில் இன்றைக்கு இல்லை.

வெறும் கடன் கொடுப்பதனால் மட்டுமே மக்கள் பொருளை வாங்கு வார்கள் என எதிர்பார்க்க முடியாது.

டிரான்ஸ்போர்ட் வசதி எப்படி?

அது ஒரு பிரச்சனைதான். ஆனால் அது ஒரு குறுகிய காலப் பிரச்சனை (Short term problem).

இப்போது என்ன ஆயிற்று என் றால், திடீரென்று ஆதியே ஆடியது போல எல்லோருக்கும் ஒரு பயம் வந்துவிட்டது.

கையில் பணமிருந்தால் நல்லது என்று இனிமேல் செலவு செய்ய மாட் டார்கள். கடன் வாங்குவதற்கோ அல் லது புதிதாகச் செலவு செய்வதற்கோ எல்லோருமே யோசிக்கும்போது, வாங்குவது (டிமாண்ட்) குறையும். டிமாண்ட் டிஸ்ட்ரக்ஷன் என்பதுதான் இப்போது முக்கியப் பிரச்சனையாகும்.

நாங்கள் எதிர்பார்ப்பது, நிச்சயமாக இன்னும் இந்தப் பிரச்சனை நான்கு – ஐந்து ஆண்டுகளுக்குத் தொடரும். இந்த நிலையைத் தாண்ட வேண்டுமானால், மக்களுக்கு தைரியம் வரவேண்டும். யாருக்குமே பொருளாதாரத்தின்மீது நம்பிக்கையில்லாத இன்றைய நிலையில், அந்த நம்பிக்கை வந்தால்தான் மறுபடி யும் அந்த வளர்ச்சி வரும்.

அந்த நம்பிக்கை இல்லாத வரைக் கும் என்னதான் கடன் கொடுத்தாலும், என்னதான் சும்மாவே கொடுத்தாலும், நல்ல நிலை வரும் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது.

●

சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 9

இறைவன் தாயைவிடக் கருணை மிக்கவன். அவன் பால் நினைந்தூட்டும் தாயிற் சிறந்த தயாவான தத்துவன். தாய் ஆரோக்கியமான குழந்தைக்கு உணவளிப்பாள். நோயுற்ற குழந்தைக்கு மருந்து ஊட்டுவாள். இறைவன், இப்பொழுது நம்முடைய நோய்க்கு மிகக் கடுமையான மருந்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். நோய் அதிகமானால் மருந்தும் கடுமையாகத்தானே இருக்கும்!

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று அளவுக்கதிகமான தவறுகளைச் செய்தது மனித சமுதாயம். உலக உயிர்கள் அனைத்தும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை என்று எண்ணி, நம்முடைய வாழ்வுக்காகப் பிற உயிர்களைத் துன்புறுத்தினோம். இயற்கையோடு இசைந்த வாழ்வை மாற்றினோம். உயிர்க்கொலை செய்தோம். புலால் உண்டோம். பாம்பு, பல்லி, எறும்பு தின்னி என்று எல்லா உயிரினங்களையும் உண்ணத் தொடங்கினோம். வாய் வழியாகவே உணவை உண்டு, வாய் வழியாகவே மலம் கழிக்கும் வௌவாலை உண்டோம்.

இந்தப் பாவம், கொரோனா தீநுண்மியாக வடிவெடுத்தது. இது உலகம் முழுவதும் பரவி விட்டது. இது பரவியதா அல்லது பரப்பப்பட்டதா என்பது இன்னும் தெரியவில்லை. இந்தக் கிருமி கண்ணுக்குத் தெரியாமல் பரவிவிட்டது. ஏறத்தாழ நான்கு லட்சம் பேர் இறந்துவிட்டார்கள்.

சந்திரமண்டலம் சென்றவர்கள்கூட இந்தக் கிருமிக்குத் தப்ப முடியவில்லை. உலகம், வீட்டிலேயே சிறைவைக்கப் பட்டுவிட்டது. பொருளாதாரம் முடங்கிவிட்டது. மருந்துக்கடைகள் மூடப்பட்டாலும், மருத்துவ வசதி கிடைக்காவிட்டாலும், நம் முன்னோர் பயன்படுத்திய பழைய மருந்துகளைக் கொண்டு வாழ்வதற்கு மக்கள் பழகி விட்டார்கள்.

கொரோனா இறப்புகளைத் தவிர மற்ற வகையான இறப்புகள் குறைந்து விட்டன. இது மிகப்பெரிய நன்மை. மிளகு, மஞ்சள்பொடி, இஞ்சி, சுக்கு, கடுக்காய், நிலவேம்பு, கபசுரக்குடிநீர், சித்த மருத்துவ மருந்துகள் ஆகியவற்றை மக்கள் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். காற்றும் தண்ணீரும் தூய்மையடைந்துவிட்டன. மரங்களைத் தேடிவந்த பறவைகள், காலை நேரத்தில் இனிய ஒலிகளை எழுப்பி இறைவனை வணங்குகின்றன. இது இறைவன் நம்மைத் திருத்துவதற்காகக் கொடுத்த கருணை வடிவமான தண்டனை.

திருமூலர்

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

தொடர்ச்சி : 13-ம் பக்கம்

கட்டுரை

16

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

டி.என். சுகி சுப்பிரமணியம்

டி.என். சுகி சுப்பிரமணியம்

புகழ்பெற்ற தந்தைக்கு மகனாகப் பிறந்து தங்கள் திறமையை நிரூபிப்பது ஒருவகை சவால். தான் புகழோடு திகழ்ந்து, தன்னுடைய மகன் தன்னை விடப் புகழ் பெற்றவராய் வளர்வதைப் பார்க்கக் கிடைப்பது ஒருவகை சுகம்.

அத்தகைய பெருமைக்குரியவர் எழுத்தாளர் டி.என். சுகி சுப்பிரமணியம். சொல்வேந்தர் திரு. சுகி சிவம் அவர்களின் தந்தை என்னும் அடையாளத்தைப் பெறுவதற்குப் பல்லாண்டுகள் முன்னதாகவே எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் புகழ் முத்திரை பதித்தவர். அவருடைய மனைவி திருமதி கோமதி சுப்பிரமணியம் அவர்களும் ஓர் எழுத்தாளர்.

பள்ளி மாணவனாக இருக்கும் பொழுது, இலக்கிய ஆர்வத்தால் திரு. சுகிசிவம் அவர்கள் இல்லத்தைத் தேடிச் சென்று அறிமுகத்தை உருவாக்கிக் கொண்டேன். கோவை ராம்நகரில் கோகலே வீதியில் அவர்கள் குடியிருந்த வீட்டுக்குள் முதன்முதலாக நுழைந்தபோது, எனக்கு அறிமுகமான முதல் முகம் திரு. சுகி சுப்பிரமணியம் அவர்களின் திருமுகம்.

மரபின் மைந்தன் முத்தையா

சுகி சிவம்

அதன் பிறகு அங்கே செல்லும் போதெல்லாம் அவருடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருக்கும் வாய்ப்புகள் வளர்ந்தன. அப்போது அவரது அனுபவங்களை நேரில் கேட்டறிய வாய்த்தது.

திரு. சுகி சுப்பிரமணியம் அவர்கள் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்த போது, திறமைமிக்க ஒரு கலைஞர் வறுமையில் உணவுக்குக்கூடப் போதிய வசதி இல்லாமல் சிரமப் படுவதைக் கண்டார். அவருக்கு ஒலிப் பதிவின் போதே உணவு கிடைக்கும் விதமாக வாய்ப்புகளை வழங்கினார்.

வானொலி நிலைய விதிகளின்படி, ஒரே கலைஞருக்குத் தொடர்ந்து வாய்ப்புகள் வழங்கச் சிறப்பு அனுமதி பெற வேண்டும். என் ஆயுளில் இப்படி ஒரு கலைஞனை நான் பார்த்ததே இல்லை என்று கடிதம் எழுதி, அனுமதி பெற்றுத் தொடர்ந்து வாய்ப்புகள் வழங்கினார்.

நடிகர் நாகேஷ்

அந்தக் கலைஞர்தான் நகைச் சுவையில் இமயமாகப் பின் னாளில் உயர்ந்த திரு. நாகேஷ்.

இலக்கியவாதிகள் பொது விஷயங்களை விவாதிக்கலாமே தவிர, அது தனிப்பட்ட பகையாக மாறிவிடக் கூடாது என்பதற்குப் பல சம்பவங்களை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம், சொல் வார்.

ஏதோ ஒரு விவாதம் காரண மாய் எழுத்தாளர் சாண்டில் யன் உடன் இவருக்குக் கருத்து வேறுபாடு வந்திருக்கிறது. ஒருமுறை பொது இடம் ஒன் றில் இவரைப் பார்த்ததும் சாண்டில்யன் திரும்பி நின்று கொண்டாராம். உடனே இவர், சாண்டில்யன் முகத்துக்கு முன் னால் போய் நின்றுகொண்டு "என்ன சாண்டில்யன், எப்படி இருக்கீங்க" என்று கைகளைப் பற்ற, சற்று நேரத்தில் இருவரும் சேர்ந்த கைகள் சேர்ந்தவண்ணம் காபி சாப் பிடச் சென்றிருக்கிறார்கள்.

சாண்டில்யன்

பள்ளி விடுமுறைக் காலத்தில், இரண்டு நாள்கள் அவருடன் தொடர்ந்து அலமாரியில் புத்தகங் களை அடுக்குவதற்கு உதவச் சென் றேன். மூன்றாவது நாள் விளை யாட்டுப் புத்தி வந்துவிட்டது. போக வில்லை. அத்துடன் விட்டிருக்கலாம்.

கால் அடிபட்டு விட்டதாகவும் அதனால் வர இயலவில்லை என்றும் ஓர் அஞ்சல் அட்டையில் அவருக்கு எழுதிப் போட்டுவிட்டேன். கடிதம் போய்ச் சேர்ந்த மறுநாளே அவரி டமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"உன் கடிதம் பார்த்து மிகவும் வேதனை அடைந்தேன். உனக்கு ஏற் பட்ட காயம், வேதனை – இவற்றுக்கு மத்தியில் நீ எனக்கு எழுதிய கடிதம், உன் மனதின் பெரிய தன்மையைக் காட்டுகிறது. என்னைக் காண்பது பெரிதில்லை. உன்னை நீ பேணிக் கொள். எல்லா நலன்களும் விரைவில் உண்டாகுக" என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார்.

சிறுபிள்ளைத்தனமாகப் பொய் சொல்லிவிட்டு, இன் றளவும் அதற்காக வெட்கப் படக் கூடிய மனநிலையை அந்தக் கடிதம் ஏற்படுத்திவிட்டது. கண்ணதாசன் பொன்விழா மலரில் திரு. சுகிசிவம் 'சாதனைப் பிரார்த் தனை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருப்பார்.

அந்தக் கட்டுரையை வாசித்ததாக திரு. சுகி. சுப்பிரமணியம் அவர் களிடம் மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டிருந்தேன். "அந்த மலரில் நானும் ஒரு கட்டுரை எழுதி இருக் கிறேன் தெரியுமா?" என்றார். "பார்க்கவில்லையே" என்றேன்.

குறும்புச் சிரிப்புடன் "சரி, எனக்கு வேண்டியவர்கள் அதைப் பார்த் திருப்பார்கள்" என்றார்.

மேடைப் பேச்சுக்குப் பாடல்களை மனப்பாடம் செய்வது மிகவும் முக் கியம். அதைப் பற்றி ஒருமுறை என் னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போது நான் ராமாயண மேடைகளில் பேசத் தொடங்கியிருந்த காலம்.

“ராமாயணப் பாடல்கள் தெரியுமா?” என்று கேட்டார்.

“ஓரளவு தெரியும்” என்றேன்.

“ஓரளவுதான் என்றால் ஒரு ஆயிரம் பாடல்கள் தெரியுமா?” எனக் கேட்டார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ராமாயணத்தில் குறைந்தது ஆயிரம் பாடல்கள் மனப் பாடமாக இருக்க வேண்டும் என்பார்.

தன் மகனின் சொற்பொழிவுகள் அனைத்திற்கும் ஒன்றுவிடாமல் வருகை புரிந்து ஆர்வத்துடன் கேட்டு ரசிப்பார்.

"உங்களுக்குப் பேச்சில் ஆர்வமில்லையா?" என்று கேட்டேன்.

“தொடர்ந்து எழுத்தில் இயங்குபவர்கள் பேச்சில் ஈடுபடுவது அரிது” என்றார்.

ஒருமுறை, இவர் கூட்டத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்து திருக்குறளார் என அழைக்கப்பட்ட திருக்குறள் முனுசாமி " இப்போது எழுத்தாளர் சுகி பேசுவார்" என்று திடீரென அறிவித்து விட்டாராம்.

இவர் மேடைக்குச் சென்றவர், "திருக்குறளார், வாசுகி வாசுகி என அழைத்தால் வாராதிருக்க முடியுமா?” என்றதும் எழுந்த கலகலப்பின் இடைவெளியில் சுதாரித்துக் கொண்டு ஒரு திருக்குறளைப் பற்றிப் பேசிவிட்டு "ஆளை விடுங்கள்" என இறங்கிக் கொண்டாராம்.

கோவை சிரவை ஆதீனம் வெளியிட்ட ‘அமுதம்’ இதழில் திருமந்திரம் குறித்துச் சின்னச்சின்னக் கட்டுரைகளை எல்லோருக்கும் புரிகிற விதமாக எழுதிவந்தார்.

அவர், அவருடைய மனைவி உட்படக் குடும்பத்தில் ஏறக்குறைய எல்லோருமே எழுத்தாளர்கள். மூத்த மகன் திரு. எம்.எஸ். பெருமாள் ‘அவள் ஒரு தொடர்கதை’ படத்தின் கதை ஆசிரியர். வீட்டில் இருக்கும் அனைவரும் கதைகள் எழுதி ‘ஒரே குடும்பம்’ என்ற தலைப்பிலேயே ஒரு நூலாக வெளியிட்டு இருந்தார்கள்.

ஒருமுறை அவர் வீட்டுக்குச் சென்றபோது, கொஞ்ச நாட்கள் சென்னையில் சென்று இருக்கப் போவதாகத் தெரிவித்தார். என்னிடம் அவர் வாங்கியிருந்த பெரியபுராணம் உரை நூல்களைத் திரும்பக் கொடுத்தார்.

நான் பதினொன்றாம் வகுப்போ, பன்னிரண்டாம் வகுப்போ படித்துக் கொண்டிருந்தபோது, உடன் பயின்ற நண்பன் ஒருவன் வானொலியில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் மறைந்த செய்தி அறிவிக்கப்பட்டதாகச் சொன்னான். (அந்த நண்பன் இன்று கோவையில் முன்னணி வழக்கறிஞரான என்.வி. என். ஸ்ரீதர்).

இதயத்தில் வலி என்று மருத்துவரிடம் அழைத்துச் சென்றிருக்கின்றனர். அந்த மருத்துவர் டாக்டர் மு. வரதராசன் அவர்களின் புதல்வர் திரு. நம்பிராஜன்.

சிகிச்சை நடந்து கொண்டிருக்கும் போது, “விட்டுவிடுங்கள் டாக்டர், நான் விடைபெற விரும்புகிறேன்” என்று ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு மறைந்தாராம்.

இன்றளவும் சுகி குடும்பம் சார்பில், அவர் நினைவாக விழாக்கள் நடப்பதுடன் விருதுகளும் வழங்கப் பட்டு வருகின்றன. ஓர் இலக்கியப் பரம்பரையின் ஆணிவேராக அவர் அன்புடன் நினைவு கூரப்படுவார்

●

9-ம் பக்கத் தொடர்ச்சி

என்ற வள்ளுவம் இப்பொழுது நமக்கு நன்றாக விளங்கிவிட்டது. இப்பொழு தாவது நாம் முழுமையாகத் திருந்த வேண்டும். திருமூலர் இருமலும், சோகையும், ஈளையும், வெப்பும் தருமம் செய்யாதவர்க்கு வரும் என்கிறார்.

“காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்” என்றும், புலால் உண்டால் நரகில் வருந்த வேண்டும் என்றும் குறிப் பிடுகிறார். இதையுணர்ந்து நாம் இனி மேலாவது கள்ளுக்கடைகளை மூட வேண்டும்.

திருமூலர், “முழுநீர்க் கள்ளுண் போர் முறைமை அகன்றோர்” என் கிறார். கள்ளின் கொடுமையை,

“மயங்கும் தியங்கும் கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமோ?” (328)

என்று பேசுகிறது திருமந்திரம்.

“தடுமாற்றத்துக்கும் அறியாமைக்கும் காரணமானது கள். அது வாய்மை முதலிய நல்லொழுக்கங்களைக் கெடுக் கும். அதை உண்பவர், தெருவில் திரியும் பொது மகளிர் இன்பத்தைப் பெறுவர். வீட்டில் தன் மனைவியோடு இணங்கி இருந்து பெறக்கூடிய இன்பத்தைத் தரும் அறிவைப் பெறமாட்டார்கள். இவர்களுக்கு என்றும் நீங்காத இடை யீடில்லாத இன்பம் உண்டாகுமா?” என்று வருந்துகிறார் திருமூலர்.

எனவே, இப்பொழுதாவது டாஸ்மாக் கடைகளை மொத்தமா கவும், நிரந்தரமாகவும் மூட வேண்டும். இல்லையென்றால், தன்னலமற்ற தியாக உள்ளம் கொண்ட மருத்துவர்கள், செவிலிகள், காவல்துறைப் பணியாளர்கள் எல்லோரும் இத்தனை நாட்களாகப் பட்ட பாடு வீணாகிவிடும்.

“கற்புடைய மகளிர், இறைவன் அடியார்கள், தத்துவ ஞானமுடைய சான்றோர்கள் ஆகியோர் மனம் வருந்தும்படி அறநெறிக்கு மாறாக நடந்து, அழிவு செய்தவர்கள் செல்வமும் வாழ்நாளும் ஓராண்டுக்குள் மறைந்துவிடும். இது சத்தியம். எங்கள் நந்தியெம்பெருமான் மேல் ஆணை” என்று கடுமையாக எச்சரிக்கிறார் திருமூலர்.

“பத்தினி, பத்தர்கள், தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே” (532)

என்பது திருமந்திரம். நமக்கு அறிவூட்டு வதற்காகவே இந்த நோய் வந்திருக்கிறது. இதையுணர்ந்து திருந்தினால் நல்லது. இல்லையேல், அடுத்த அடி இன்னும் பலமாக அல்லவா இருக்கும்!

இந்தக் கொரோனா தீநுண்மி நமக்கு ஒரு கசப்பு மருந்தாகவும் செயல்பட்டி ருக்கிறது. நம்முடைய கூட்டுக்குடும்ப வாழ்க்கை தழைத்திருக்கிறது. தாத்தாவின் அன்பும், பாட்டியின் அறி வும் தெளிவாகத் தெரிந்திருக்கின்றன. ஆடம்பர வாழ்க்கை குறைந்துவிட்டது. இருப்பதை வைத்து இன்பமாய் வாழும் இல்லற வாழ்க்கை நல்லற வாழ்க்கை யாகிவிட்டது. அஞ்சறைப்பெட்டி அருமருந்தாகிவிட்டது.

ஏழைகள் பசிக்கு உணவு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இதயக் கதவு களைத் திறந்துவைத்துவிட்டது. வசதிக் கேற்றபடி பலரும் பசிப்பிணி தீர்க்கும் அமுதசுரபியாக மாறிவிட்டார்கள். பயன்மரங்கள் ஊரெல்லாம் பழுத்து விட்டன. அலுவலகங்களுக்குப் போகாமல் வீட்டிலேயே இருந்து வேலை பார்ப்பதால், இனி அலுவலகங்களே வேண்டாமோ என்ற எண்ணம் தோன்றிவிட்டது.

திருவள்ளுவர்

நேரமறிந்து நோயைக் கட்டுப்படுத்திய இந்திய நாடு, உலக வரைபடத்தில் உயர்ந்த இடம் பெற்றுவிட்டது. ஆலயங் கள் அடைக்கப்பட்டாலும், மனக்கோயில்கள் திறந் திருக்கின்றன. இறைவன் கருணையை வேண்டி எல்லோரும் தெரிந்தோ,

தெரியாமலோ பிரார்த்தனை செய்யத் தொடங்கிவிட்டார்கள். கோவில்களில் ஆடம்பரமாக நடந்த திருவிழாக்கள், அடியார் மனங்களுக்கு அமைதியாக மாற்றப்பட்டுவிட்டன. இவையெல்லாம் திருமூலர் கண்ட கனவுகள்.

நாம் எதையெல்லாம் செய்ய வில்லை என்று அவர் வருந்தினாரோ, அதையெல்லாம் காலத்தின் நெருக்கடி யால் நாம் செய்யத் தொடங்கிவிட் டோம். "எல்லோராலும் போற்றத்தக்க இறைவனை வணங்காமல் இருக்கிறீர் களே; உங்களிடம் வந்து யாசிப்பவர்க்கு ஈயின் தலையளவுகூட ஈயாமல் இருக் கிறீர்களே; குடத்தால் தண்ணீர் எடுத்து ஊற்றிச் சோலைகளை வளர்த்து இயற் கையைப் பேணாமல் இருக்கிறீர்களே; இறந்தபின் நரகத்தில் அல்லவா நீங்கா மல் இருக்கப் போகிறீர்கள்; ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்க்கை வீணாய்ப் போகின்றதே" என்று ஏங்கும் திருமூலர்,

"பரவப் படுவான் பரமனை ஏத்தீர்
இரவலர்க்கு ஈதலை யாயினும் ஈயீர்
கரகத்தால் நீர்அட்டிக் காவை வளர்க்கீர்
நரகத்தில் நின்றிரோ நாள்எஞ்சி னீரே" (263)

என்று கவலையோடு கேட்கிறார். நமக்கு இன்பமும் வருகிறது, இடரும் வருகிறது. எந்தப் பொருளால் இன்பம் கிடைத்ததோ, அந்தப் பொருளாலேயே துன்பமும் வருகிறது. முன்பு நல்வினை செய்தவன் இப்பொழுது இன்பத்தை அறுவடை செய்கிறான். முன்பு தீவினை செய்தவன் இன்று துன்பம் அடை கிறான்.

இவை எல்லாம் முன்பு நாம் செய்த செயல்களினாலே முடிந்துவிட்டன. இனிமேல் இன்பம் பெற வேண்டுமா னால், இப்பொழுது நல்வினை செய்ய வேண்டும். இதை அறியாத மக்கள், இந்தப் பிறவியிலும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பாமல் வாழ்கிறார்களே! எல்லா உயிர்களின் மீதும் நாம் அன்பு செலுத்தினால், எல்லா உயிர்களும் நம் மீது அன்பு செலுத்துமே. இந்த அறம் தெரியாமல், உலக மக்கள் துன்பம் அடைகிறார்களே என்று நமக்காக இரக்கப்படுகிறார் திருமூலர்.

"இன்பம் இடம் என்று இரண்டுற வைத்தது
முன்பு அவர் செய்கையினாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே" (266)

என்பது அவர் பாடல்.

இல்வாழ்க்கையின் பண்பு அன்பு. பயன் அறம். இந்த இரண்டும் இல்லா விட்டால், அந்த வாழ்க்கை பாலை வனத்தில் நடப்பட்ட செடிபோலப் பட்டுப்போகும். அன்போடு வாழ்ந்து பசித்தவர்க்கு உணவிட்டு அறம் செய்தால், அவர்களுடைய கனிவான நெஞ்சம் அவர்களை ஈசன் கழலடி களில் சேர்க்கும். அவர்களுக்கு எந்தப் பிணியும் துன்பம் தராது.

எவ்வுயிர்க்கும் அன்பாய் இருப்பவர் கள் வானோர்க்கு உயர்ந்த உலகமாகிய இறைவன் திருவடிப் பேரின்பத்தை அடைவர். ஈயாத புல்லர்கள் இறுதிநாள் வரை துன்புறுவார்கள். அவர்களைப் பார்த்து யாராவது மற்றவர்க்குக் கொடுத்துண்டு வாழ்க என்று சொன் னால், அவர்கள் மீது அதிகக் கோபம் கொள்வார்கள். அந்தச் சினத்தீயில் அவர்களே விட்டில் பூச்சிகளாய் விழுந்து இறந்து போவார்கள்.

"கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளும் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்து ஒழிந்தாரே" (268)

என்கிறார் திருமூலர்.

தன்னை முன்னிலைப்படுத்தி வாழாமல், எவ்வுயிர்க்கும் உதவி செய் யும் கனிந்த மனத்தராய் நாம் வாழ வேண்டும். ஐந்து பூதங்களையும் அழுக் காக்கிவிடாமல் இயற்கையோடு இசைந்து வாழ வேண்டும். ஆணவம் அகன்று இறைவன் பெருமைக்கு முன் னால் நாம் தூசு என்று எண்ணும் மனம் வேண்டும். பாலுக்கு அழும் குழந்தை போல் பரமன் கருணைக்கு அழும் கனிவு வேண்டும். இவை இருக்குமா னால், கொரோனா நமக்குக் கைகட்டிச் சேவகம் புரியும். அஞ்சுவது யாதொன் றுமில்லை. இனி அஞ்ச வருவது மில்லை. ●

தலைவிதியை மாற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோவில்

வாழ்வில் தொடர்ந்து பெரும் துன்பங்களை அனுபவித்துத் துயர்ப் படும் மனிதர்கள் தங்கள் விதியை நொந்து கொள்வதுண்டு. ஊழ்வினைப் பயன் என்று வருந்துவோர், அந்த ஊழ் வினையை மாற்றும் வழி அறிந்தால் எத்தனை மகிழ்ச்சியடைவார்கள்!

விதி வலியது. அதை மாற்ற யாராலும் இயலாது என்பர். ஆனால், அந்த விதியையே உண்டாக்கிய இறை வனால் விதியை மாற்றவும் இயலும். அதனால்தான் பெரும் துன்பங்களுக்கு ஆட்பட்டுத் துயருறுவோரைக் குறிப் பிட்ட சில கோவில்களுக்குச் சென்று இறைவனைத் தொழுது, துன்பங்களை நீக்க வேண்டி வருமாறு சோதிடர்களும், சான்றோர்களும் கூறுவர்.

கோவில்களுக்குச் சென்றால் இறை வனிடம் நம் துயர்களை முறையிடலாம். அந்த இறைவன் நம் துயர்களை நீக்கி, நம் தலைவிதியையும் மாற்றினால் நாம் துன்பங்களிலிருந்து விடுபடலாம்.

அப்படி ஊழ்வினையை மாற்றும் திருத்தலம் என்று நம்பப்படும் ஒரு திருக்கோவில், திருச்சி மாவட்டத்தி லுள்ள திருப்பட்டூரில் உள்ளது. அது, திருமால், சிவன், பிரம்மா என மும் மூர்த்திகளும் அருளும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோவில். சிவபெருமானைப் பிரம்மதேவர் துவாதசலிங்கம் எனப் படும் 12 பட்டைகளுடன் கூடிய சிவலிங்கமாக இங்கே வழிபட்டதால், இத்திருக்கோவில் பிரம்மபுரீஸ்வரர் கோவில் என்னும் பெயரைப் பெற்றது.

இது குறித்து, இக்கோவிலின் தல வரலாறு சில செய்திகளைத் தெரிவிக் கிறது. பிரம்ம தேவர் ஐந்து தலை களுடன் படைப்புத் தொழிலைச் செய்து வந்தபோது, சிவனைப் போல ஐந்து தலைகளுடன் தான் இருப்பது குறித்து ஆணவம் கொண்டார். அத னால் சிவபெருமான் பிரம்மனின் ஒரு தலையைக் கொய்து நான்கு தலை களைக் கொண்டவராக்கினார்.

ஒரு தலையையும், படைப்புத் தொழிலையும் இழந்த பிரம்மா, சிவ பெருமானிடம் சாப விமோசனம் கேட்க, இந்தத் திருப்பட்டூரில் குடி கொண்டிருக்கும் தன்னை, 12 லிங்க வடிவில் வணங்கிச் சாப நீக்கம் பெறு மாறு அறிவுறுத்தினாராம். அதன்படி பிரம்மா இங்கு வழிபாடு செய்து சாபம் நீங்கப் பெற்றதோடு, படைப்புத் தொழி லையும் மீண்டும் பெற்றாராம்.

"என்னை மகிழ்வித்த உன்னை வழி படுபவர்களின் தீய தலையெழுத்தை மங்களகரமாக மாற்றுவா யாக" என்று சிவபெரு மான் பிரம்மாவிற்கு வரம் கொடுத்தாராம். அதிலிருந்து தலைவிதி மோசமானதாக இருப்

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்

பவர்கள் இங்கு வந்து பிரம்மதேவரையும், பிரம்மாவிற்கு அருள் செய்த பிரம்மபுரீஸ்வரரையும், காக்கும் கடவுளான திருமாலையும் ஒரே இடத்தில் வழிபட்டுத் தங்கள் ஊழ்வினையை நீக்கிக் கொள்வதாக இக்கோவிலின் தல வரலாறு கூறுகிறது.

இந்தத் திருக்கோவிலுக்கு ஒரு முறை செல்வதற்கே கொடுப்பினை இருக்க வேண்டும். எல்லோர்க்கும் இது வாய்க்காது. யாருக்குத் தலையெழுத்து மாற வேண்டும் என்ற விதி இருக்கிறதோ, அவர்களே இக்கோவிலில் பிரம்மதேவர் பார்வையில் படுவார்கள் என்பது நம்பிக்கை.

அப்படித் தலையெழுத்து மாறத் தகுதியுடையவர்கள், குறைந்த பாவக் கணக்கு உள்ளவர்கள், பக்திநெறியில் நின்று வாழும் அறவோர் ஆகியோரின் தலையெழுத்து மாற்றப்படும் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர். இங்கே, ஒரு முறை சென்றால் மீண்டும் செல்லும் வரம் கிட்டும் என்று சொல்லப்படுகிறது.

முருகப்பெருமான் அசுரர்களை அழிக்கச் செல்வதற்கு முன்பாக, இத் தலத்தில் சிவபெருமானை வணங்கி, அதன்பிறகே படையைத் திரட்டிச் சென்றாராம். அதனால் இது 'திருப் படையூர்' என்று அழைக்கப்பட்டு, பின்னர் 'திருப்பட்டூர்' என்று மருவியதாகச் சொல்லப்படுகிறது.

பிரம்மா, திருமால், சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் ஒருங்கே அருளும் திருத்தலங்கள் தமிழகத்தில் ஒரு சில இருக்கின்றன. திருச்சியில் உத்தமர் கோவில், கொங்கு நாட்டில் கொடுமுடி முதலியவற்றின் வரிசையில் இந்தத் திருப்பட்டூர்த் திருத்தலமும் சேர்கிறது.

இங்கே பிரம்மதேவர் தம்மை வழிபடுவோர்க்கு மங்கலம் தந்து அவர்களது வாழ்க்கை மேம்படச் செய்வதால், அவருக்கு மஞ்சள் காப்பிட்டுப் புளியோதரை படைத்து, மஞ்சள் பிரசாதம் தருகின்றனர். மற்ற சன்னதிகளிலும் மஞ்சள் நிற ஆடைகளைப் பயன்படுத்துகின்றனர்.

பிரம்மாவிற்கென்று தனியே சன்னதி உள்ளது. பத்மபீடத்தில் பத்மாசனத்தில் பிரம்மா காட்சியளிக்கிறார். பிரம்மாவின் பெரிய முகம் முன்னோக்கியும், இரு பக்கங்களிலும் இரண்டு முகங்களும், பின்பக்கம் ஒரு முகமும் உள்ளன.

பிரம்மதேவர் குருபகவானுக்கு அதி தேவதை ஆவார். எனவே, வியாழக் கிழமைகளில் இங்கே பிரம்மாவிற்கு மஞ்சள் காப்பு அலங்காரம் செய்யப்படுகிறது.

வியாழன், திங்கள் கிழமைகள், திருவாதிரை, புனர்பூசம், சதயம் மற்றும் அவரவர் பிறந்த நட்சத்திர நாட்களில் பக்தர்கள் பிரம்மாவை இங்கே வழிபடுவது சிறப்புப் பலன் தரும் எனப்படுகிறது. குருப்பெயர்ச்சியன்று பிரம்மாவிற்குப் பரிகார வேள்விப்பூசைகள் நடத்தப்படுகின்றன. திருமணத்தடை, பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்தல், தொழில், வியாபாரம், பணி ஆகியவற்றிற்காக பிரம்மாவிடம் வேண்டுதல்கள் வைக்கலாம்.

பிரம்மா படைப்புக் கடவுள் என்பதால், குழந்தை இல்லாதவர்கள் இங்கு மகப்பேற்றுக்காக வேண்டுதல் வைப்பது முதன்மையானதாக உள்ளது. மேலும், இங்கே அவரவர் ஜாதகத்தை பிரம்மாவின் சன்னதியில் வைத்துப் பிரார்த்திக்கிறார்கள். பின் தங்கள் பிரார்த்தனை நிறைவேறியதும் ஆடை சார்த்தி நேர்த்திக்கடன் செலுத்தி வழிபடுகின்றனர்.

வெள்ளைத் தாமரை சார்த்தி பிரம்மாவை வழிபட்டால் உடனடிப் பலன் கிடைக்கும் என்பதும், அவரவர் பிறந்த நட்சத்திர நாளில் இத்தலத்தில் வழிபட்டால் பெரும் புண்ணியம் கிடைக்கும் என்பதும் நம்பிக்கை. ஆடி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் வந்து மும்மூர்த்திகளையும் வழிபட்டால் நற்பலன்கள் கிடைக்கும் எனப்படுகிறது.

பிரம்மாவைத் தனிச்சன்னதியில் வணங்கியபின், தட்சிணாமூர்த்தியை வணங்கலாம். அடுத்து, கோஷ்டத்தில்

பிரம்ம தேவர்

திருமாலை வணங்கலாம். பின்னர் பிரம்மாவிற்கு அருள்செய்த பிரம்மபுரீஸ்வரரைக் கண்டு வணங்கலாம்.

சிவன் கோவிலுக்குத் தென்மேற்கில் ஏறத்தாழ 100 மீட்டர் தொலைவில் திருமாலுக்கென்று தனிக் கோவில் உள்ளது. இங்கேயும் பக்தர்கள் தங்கள் ஜாதகங்களைப் பெருமாள் திருவடிகளில் வைத்துப் பூசை செய்து வணங்கி வாங்கிச் செல்வதைக் காண முடிகிறது.

பதஞ்சலி முனிவர்

இதுபற்றி அங்குள்ள அர்ச்சகரிடம் கேட்ட போது, 'இங்கு ஜாதகத்தை வைத்துப் பூசை செய்து வணங்கினால், தீய விதிப்பயன்கள் மாறி நன்மை உண்டாகும்' என்று கூறினார்.

பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும் இங்கு தங்கித் தவம் செய்து வழிபட்டுள்ளனர். பதஞ்சலி முனிவர் பத்து இடங்களில் ஜீவசமாதி அடைந்ததாக ஒரு செய்தி உண்டு. அதில் ஒரு ஜீவசமாதி இந்தத் திருப்பட்டூர் என்று கூறப்படுகிறது. இங்கு வரும் பக்தர்கள் பலரும் பதஞ்சலி முனிவர் சன்னதியில் அமர்ந்து அமைதியாகத் தியானம் செய்கின்றனர்.

வியாக்கிரபாத முனிவர் இங்கேதான் உருவாக்கிய 'புலிப்பாச்சிக் குளத்தின்' தீர்த்தத்தைக் கொண்டு வழிபாடு செய்தாராம். இந்தக் குளத்தில் கோடைக் காலத்திலும் நீர் வற்றுவதே இல்லை என்கின்றனர்.

இங்குள்ள அன்னையின் பெயர் 'பிரம்மநாயகி.' அழகிய திருக்கோலத்தில் காட்சி தரும் அன்னை திருமணத் தடைகளை நீக்குவதாகக் கூறுகின்றனர். மேலும் இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் விதைகளை அன்னையின் திருவடியில் வைத்து வணங்கி, அதைக் கொண்டு போய் விதைத்தால் பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல விளைச்சல் தருவதாகக் கூறுகின்றனர்.

இரவில் சரியாகத் தூங்காமல் அழுது கொண்டிருக்கும் குழந்தைகளுக்காக இங்குள்ள பைரவரை வேண்டிக்கொண்டு, அவருக்கு அர்த்தசாமத்தில் நடைபெறும் பூசையின் போது தரும் திருநீறை வாங்கிச் சென்று அக்குழந்தைகளுக்குப் பூசினால் நன்கு தூங்கும் என்றும், அக்குழந்தைகளுக்குப் பைரவர் காவலாக இருப்பார் என்றும் ஒரு நம்பிக்கை உள்ளது.

சுந்தரர் பெருமானுடன் சேரமான் பெருமாள் நாயனார் கயிலாயம் சென்றபோது, அங்கே 'திருக்கயிலாய ஞான உலா' பாடியுள்ளார். அதனை, இத்தலத்திலுள்ள ஐயனார் இங்கு வந்து அரங்கேற்றம் செய்ததாகக் கூறுகிறார்கள். இதனால், ஆடி மாதம் சுவாதி நட்சத்திரத்தன்று, 'திருக்கயிலை ஞான உலா' விழா கொண்டாடப்படுகிறது. அன்று சுந்தரருக்கும், சேரமானுக்கும் பூசைகள் செய்யப்படுகின்றன. சேரமானின் கையில் ஞான உலா நூலை வைத்து அரங்கேற்றம் செய்கின்றனர்.

பங்குனி மாதத்தில் மூன்று நாட்கள் சிவலிங்கத்தின்மீது சூரிய ஒளி படுகிறது. ஏழு நிமிடங்கள் இந்தச் சூரிய ஒளி சிவபெருமான் மீது படர்ந்திருக்கும்.

திருக்கோவில் காலை 7.30 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7.30 மணி வரையிலும் திறந்திருக்கும். திருச்சி – பெரம்பலூர் நெடுஞ்சாலையில் சிறுகனூரில் இறங்கி, அங்கிருந்து 5 கி.மீ. சென்றால் இத்திருக்கோவிலை அடையலாம். திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து திருச்சி – வாழையூர் செல்லும் பேருந்தில் செல்லலாம். ●

சக்தி பைனான்ஸ்

நம்பிக்கையின் நிகரற்ற கட்டமைப்பு

H.O. : கோயமுத்தூர் - 641 018. போன் : 0422-2231471-4

புதிய மற்றும் பழைய
"வாகனங்களுக்கு கடனுதவி திட்டம்"

உங்கள் வளர்ச்சியே எங்கள் மகிழ்ச்சி

20* வருடங்கள் வரையிலான சிறிய மற்றும் கனரக லாரிகள் JCB, Excavator வாகனங்களுக்கும் கடனுதவி அளிக்கப்படும்.

எங்கள் சேவைகளைப் பற்றி சில தகவல்கள்

✓ புதிய மற்றும் பழைய வாகனங்களுக்கு கடனுதவி வழங்குதல்

✓ மிகப்பழைய மாடல் சரக்கு வாகனங்களுக்கு நிதியுதவி

✓ வாகன சீரமைப்பு Tyre, FC, உதிரி பாகங்கள் மற்றும் செலவினங்களுக்கும் கடன் உதவி

✓ தேர்டு பார்ட்டி செட்டில்மெண்ட் (Third Party Settlement)

✓ பழைய வாகனங்களுக்கும் இன்சூரன்ஸ் சேவையுடன் கூடிய நிதியுதவி

✓ வாடிக்கையாளர்களின் தேவைகளை அறிந்து 24 மணிநேர துரித சேவை

✓ துரித சேவைக்கு பிரதான இடங்களில் வாடிக்கையாளர் சேவை மையங்கள்

✓ எளிய விதிமுறைகள், நம்பிக்கை, நாணயம் மற்றும் கனிவான சேவை.

கட்டுரை

வடுவூர் கோதண்டராமசுவாமி திருக்கோவில்

வடுவூர் என்றாலே பழைமையில் ஊறிய ஆன்மிக, இலக்கியவாதிகளுக்கு அங்குள்ள பிரசித்தி பெற்ற கோதண்ட ராமசுவாமி கோவிலும், ஆயிரம் பக்கங் களுக்கும் அதிகமான துப்பறியும் நாவல் களை எழுதிப் பிரசித்தி பெற்ற வடுவூர் கே. துரைசாமி ஐயங்காரும் ஞாபகத் திற்கு வருவதுண்டு.

திருவாரூர் மாவட்டம் நீடா மங்கலம் வட்டத்திலுள்ள இந்த வகுளா ரண்ய க்ஷேத்திரம் தஞ்சை மாநகருக்குத் தென்கிழக்கில் 24 கி.மீ. தொலைவிலும், மன்னார்குடியிலிருந்து மேற்கே 15 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இது தன்னரசு நாடு என்று கள்ளர்குல மக்களால் கூறப் படும்.

இவ்வூர் நீர்வளம் மிகுந்த பகுதியாத லால், கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் படாம் விரித்தது போன்று பசுமை தவழும் வயல்களும், தோப்புத் துரவுகளும், தெள்ளிய நீரோடைகளும் காண்போர் கண்களையும், நெஞ்சினை யும் குளிர்விப்பன.

இத்தகைய வடுவூருக்கு மேலும் பெருமை சேர்ப்பது அதன் மேற்புறம் அமைந்துள்ள அருள்மிகு கோதண்ட ராமசுவாமி திருக்கோயில். ஐந்து நிலை களுடனான கீழ்த்திசை நோக்கிய வாறுள்ள கோபுரம். இக்கோபுரத்தின் முன்னருள்ள மண்டபத்தின் இருபுறங் களிலும் பக்கத்திற்கு இரண்டாக நான்கு சிறிய மண்டபங்கள். இங்கு தேவஸ்தான அலுவலகம் ஒருபுறமும், அகோபில மடத்தினைச் சேர்ந்த அலுவலகம் மறுபுற முமாக உள்ளன.

கோபுர வாயிலைக் கடந்ததும் தெரி வது வெளிப்பிரகாரத்திலுள்ள துவஜ ஸ்தம்பமும், பலிபீடமும். இத்திருச் சுற்றின் முதலில் மடைப்பள்ளியும், தென்புறம் பெரிய மூடுமண்டபமும், கல்யாண ஊஞ்சல் மண்டபமும் உள்ளன. இங்கு வடக்கு நோக்கிய சந்நதி யில் ஹயக்கிரீவரும், தேசிகனும் சேவை சாதிக்கிறார்கள். அருகில் அழகிய கண் ணாடி மாளிகை. தொடர்ந்து சென் றால், பரமபதவாசல், வாகன மண்டபம், சிறு தேர் ஆகியவற்றினைக் காணலாம்.

கருவறை முன்னருள்ள நூதன வசந்த மண்டபத் திறப்புவிழா 2011 நவம் பரில் இராமபிரானுக்குகந்த தனுசு இலக்கினத்தில் நடந்தேறியுள்ளது. இம் மண்டபத்தின் முன்புறம் துவஜஸ்தம்பத் திற்கு மேலுள்ள கூரையில் இராம பிரான் பிறப்பிலிருந்து இராவண யுத்தம் வரையி லான வண்ண ஓவியங்கள்

மு. சண்முகம்

காணப்படுகின்றன. மண்டப முகப்பின் மேற்பகுதியில் இராமபிரான் சிதா பிராட்டியுடன் தேவர்கள், நாரதர் புடைசூழ அமர்ந்திருக்கும் திருக்கோலத்தில் வண்ணச் சுதையுருவங்கள் உள்ளன.

பின்னர் மண்டபத்திற்குள் சென்று கருவறையில் நுழைந்ததும் மூலவர் இராமபிரான் சீதாபிராட்டி சமேதராக இலக்குவனுடன் நிற்கும் திருக்கோலத்தில் அழகிய சிலையுருவங்களில் காட்சி தருகின்றனர். இவர்களுக்கு முன்னருள்ள பீடத்தில் காணும் செப்புப் படிமங்கள் கலையுலகச் சாதனை என்று கூறலாம். அத்தனை அழகு! சந்திர வதனத்துடன் இடது கரத்தில் வில்லும், வலது கரத்தில் கோதண்டம் என்ற அம்பும் ஏந்தியவாறு வலப்புறம் சீதா பிராட்டியும், இடப்புறம் இலக்குவனும் நிற்க உதடுகளில் முறுவல் தவழக் காட்சி தரும் கோதண்டராமரது அழகினைக் காண்கிறபோது,

“இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளுமே அல,
முந்தி என் உயிரை அம்முறுவல் உண்டதே”

என்று சீதை கூறுவதாக வரும் கம்பரது பாடல் வரிகள் நினைவிலூறும். சீதையின் ஒயிலான தோற்றம் ‘அழகோ அழகு’ என்னும்படி உள்ளது. அருகிலிருக்கும் அஞ்சலியஸ்தனான அனுமன், கோதை ஆண்டாள் ஆகியோரது அழகு வடிவங்கள் கண்டின்புறத்தக்கவை.

தெற்கு நோக்கிய சந்நிதியில் கோபாலன் தரிசனம் கிடைக்கிறது. இவர்தான் இக்கோயிலில் முதன் முதலாக மூலவராக இருந்ததாக வரலாறு. இச்சந்நிதியிலேயே உற்சவர் விக்கிரகங்களும் உள்ளன. நடு மண்டபத்தில் விக்னேஸ்வரர், நாகர், விஷ்வக்சேனர், திருக்கச்சிநம்பி, பாஷ்யக்காரர், தேசிகன் ஆகியோருடன் பன்னிரு ஆழ்வார்களும் சிலை வடிவங்களில் காட்சி தருகின்றனர்.

இத்திருக்கோயிலின் அழகுமிகு இயற்கைச் சூழலில் சரயு புஷ்கரணி என்னும் திருக்குளம் உள்ளது. தெப்போற்சவம் இங்கு நடைபெறுகிறது. இத்தலத்தில் இராமநவமி உற்சவமும், திருக்கல்யாண மகோற்சவமும் வெகு சிறப்பானவை.

வடுவூர் என்ற பெயர்க் காரணம் குறித்தும், இராமர் முதலான விக்கிரகங்கள் இத்திருக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டதற்கும் வழக்கில் இருந்து வரும் சுவையான வரலாறு :

“தஞ்சையில் நாயக்க மன்னர்களது ஆட்சிக்குப் பின்னரான மராட்டிய மரபினர் ஆட்சியில் அப்போதிருந்த துளுஜா மகாராஜா சிறந்த வைணவ பக்தர். ஒருநாள் அவரது கனவில் தோன்றிய இராமபிரான், திருத்துறைப் பூண்டியையடுத்த தலைஞாயிறு என்னும் ஊரிலுள்ள வில்வமரத் தோப்பில் நெடுங்காலமாக மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் தம்மையும், சீதாபிராட்டி, இலக்குவன் ஆகியோரையும் வெளியில் எடுத்துப் பூசை புனஸ்காரங்கள் மேற்கொள்ள ஆணையிட்டதன் பேரில், அம்மன்னன் தனது பரிவாரங்களுடன் அவ்விடத்திற்குச் சென்று நிலத்தைத் தோண்டியபோது கிடைத்த உலோக வடிவிலான கோதண்டராமர் சிலையின் நெற்றியில் ஒரு வடுவும் தெரிந்திருக்கிறது.

சரயு புஷ்கரணி திருக்குளம்

முகப்புக்கூரை ஓவியங்கள்

மன்னர் தன்னுடன் கொண்டு சென்ற நெற்றித் திலகத்தை வைத்து அழுத்திய பின்னர் சீதாதேவி, இலக்குவன், அனுமன் ஆகியோரது செப்புத் திருமேனிகள் வெளிக் கொணரப்பட்டன. இவற்றைத் தலைநகரான தஞ்சைக்கு எடுத்துச்செல்ல மன்னன் முற்பட்டபோது, கிராம மக்கள் தடை செய்ததைத் தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தையின் முடிவில், இலக்குவன் சிலையை மட்டும் அவ்வூரிலேயே விட்டுவிட்டு இராமன், சீதை, அனுமன் சிலைகளை எடுத்துச் செல்ல அனுமதித்தனர் தலைஞாயிறு மக்கள்.

அனுமதிக்கப்பட்ட சிலைகள் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி வழியாக வடுவூரை அடைந்தபோது அங்கு தரிசனத்திற்குக் காத்திருந்த அவ்வூர் மக்கள், அத்தெய்வ வடிவங்களைத் தங்கள் ஊரிலேயே விட்டுச் செல்லுமாறும், இல்லையெனில் தாங்கள் உயிர்த்தியாகம் செய்ய நேரிடும் என்றும் கூறினர்.

இராமர், சீதை, இலக்குவன் சிலைகள்

மன்னனும் வேறு வழியின்றிச் சம்மதிக்க, வடுவூர்க் கோயிலின் கருவறையில் பிரதானமாக இருந்து அருள் பாலித்துக் கொண்டிருந்த கோபாலனை அருகிலுள்ள சந்நிதியில் மாற்றி அமர்த்தி விட்டு, இராமபிரானைச் சீதாபிராட்டி, அனுமன் ஆகியோருடன் பிரதிஷ்டை செய்ததாக வரலாறு நீள்கின்றது. எப்படியோ அழகே வடிவான நெற்றியில் வடு தெரிந்த நிலையில் இராமபிரான் வந்ததனால், இவ்வூருக்கு வடுவூர் என்னும் காரணப் பெயர் ஏற்பட்டுவிட்டது.

“இலக்குவன் இல்லாத இராமனா?” என்ற கேள்விக்கும் வழி கண்டனர் இவ்வூர் மக்கள். அவர்கள் ஏகோபித்து இலக்குவனுக்குத் தனியே சிலை வடித்தபோது அது பெண் சிலையாக அமையக்கண்டு, வால்மீகி இராமாயணத்தின்படி ஸ்ரீராமருக்கு ‘சாந்தா’ என்ற சகோதரி உண்டென்ற சேதியைத் தேடிப்பிடித்து, அப்பெண் சிலையை ஊருக்கு வடக்கே செல்லும் ஆற்றங்கரையில் நிறுவியுள்ளனர். பின்னாளில் இலக்குவன் விக்கிரகமும் உருவாக்கப்பட்டுக் கருவறையில் சேர்க்கப்பட்டுவிட்டது.

இத்திருக்கோவில், குடமுழுக்கு விழா, இறுதியாக 3.1.2001–இல் நடைபெற்றுள்ளது. தற்போது அகோபில மடத்தின் உதவியுடன் பெருமளவிலான திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

“மூவுலகும் ஈர் அடியால்
முறை நிரம்பா வகைமுடிய
தாவிய சேவடி சேப்ப
தம்பியொடும் கான்போந்து
சோ அரணும் போர் மடிய
தொல் இலங்கை கட்டு அழித்த
சேவகன் சீர் கேளாத
செவி என்ன செவியே?
திருமால் சீர் கேளாத
செவி என்ன செவியே?”

என்று ஆய்ச்சியர் குரவையில் இளங்கோவடிகள் கூறுகின்றவாறு “இந்த வகுளாரண்ய க்ஷேத்திரத்தில் கொள்ளை அழகுடன் காட்சி தரும் இராமர், சீதை, இலக்குவன், அனுமன், ஆண்டாள் திருவுருவங்களைக் காணாத கண் என்ன கண்ணே” என்று கூறுவது மிகவும் பொருத்தம். ●

கட்டுரை

சௌராஷ்ட்ர மொழியில் திருக்குறளைப் பதிப்பித்த வள்ளல்!

சித்தாசிரமம் இன்று மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் மேல வீதியில் உயர்ந்த கோபுரம், சித்தாலயத்துடன் அழகான கட்டடத்துடன் விளங்கி வருகிறது.

1984 –ஆம் ஆண்டிற்கு முன்பு மீனாட்சிபுரம் பகுதியில் இதன் நிறுவனத் தலைவர் குருஜி என்று அழைக்கப்படும் பூஜ்யஸ்ரீ சித்த நரஹரி குருஜி தனது சொந்த இல்லத்தினையே ஆசிரமமாக நடத்தி வந்தார். சத் சங்கம், பாலர் நன்னெறி வகுப்பு, தன்னை நாடி வருவோரைக் கல்வியில் உயர்த்துதல் முதலான பணிகளைச் செய்து வந்தார். குருஜியின் அவதார நாள் 26.07. 1923.



அன்று ஒரு நாள் ஆசிரமத்தில் சத் சங்கம் நடந்து கொண்டிருந்தது. குருஜி அருளுரை நிகழ்ச்சியில் கவிஞர்கள் விநாயகம், சங்குராம், ஆர்.பி. தஸ்மா முதலிய அன்பர்கள் இருந்தனர். பாலர்கட்கு நன்னெறிக் கதைகளை குருஜி சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

சத் சங்கம் நிறைவுற்றது. கவிஞர் சங்குராம் இணக்க வணக்கத்துடன் குருஜியை அணுகினார். தான் எழுதிக் கொண்டு வந்த வாழ்த்து ஒன்றை குருஜியிடம் வாசித்துக் காண்பித்தார்.

"பூல்ஹோர் சரன்திவ்ய பூஜ்யபதுன் மிளுன்தென்
தால்ஹோர் ஜிவிர்ஹான் ஸதா"

இதனைக் கேட்ட குருஜி, 'இது என்ன?' என்று வினவினார். 'இது தமிழ்த் திருக்குறளின் சௌராஷ்ட்ர மொழியாக்கம்' என்றார். இதன் பொருளையும், மூலக் குறளையும் சங்குராமிடம் கேட்டார் குருஜி.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

இதனைப் படித்துக் காண்பித்து, அதன் பொருளை விளக்கினார் கவிஞர். இந்த மூலக் குறளின் ஓசை நயம், பொருளின் சுவை, வாக்கியத்தின் வடிவமைப்பு அப்படியே சௌராஷ்ட்ர மொழியாக்கமான 'பூல்ஹோர் சரன் திவ்ய' குறளிலும் இருப்பதைக் கவனித்தார் குருஜி. இதுபோல் இன்னொரு குறளையும் படிக்குமாறு பணித்தார் குருஜி.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்"

என்பதற்கு,

"கரெமஹத்தாதி கரன் மேடுன் ந்ஹனன்னான்
கரெமஹதத் ஸெக்னான் கரன்"

என்ற மொழியாக்கம் வாசித்தார். இதன் சொல் இனிமை, அழகு, சொல்லாட்சி அமைப்பைப் பார்த்த குருஜி பூரிப்படைந்தார்.

'இந்த மாதிரி மற்ற குறள்களையும் சௌராஷ்ட்ர மொழியாக்கம் செய்

யுங்கள்' என்றார் குருஜி. மகிழ்ச்சியடைந்த சங்குராம் விடைபெற்றார்.

பூஜ்யஸ்ரீ ஸித்தநரஹரி குருஜி

நாட்கள் பல சென்றன. மீண்டும் வந்தார். குருஜியின் விருப்பப்படி மேலும் சில குறள்களின் மொழியாக்கத்தினை வாசித்துக் காண்பித்தார். மூலக் குறள் சாயலும், மொழியாக்கக் குறளும், வெண்பா வடிவமும், சொல்லும், பொருளும் மூல நூலுக்கு ஒப்பாக உயர்வாக இருந்தன.

திருக்குறள் முழுவதையும் மொழியாக்கம் செய்யுமாறு குருஜி பணித்தார். 'திருக்குறள் 1330 குறள்களையுமா?' எனக் கேட்டார் கவிஞர். 'ஆம்' என்றார் குருஜி. 'தங்களால் முடியும். அதற்கான சகல வாய்ப்புகளையும் வழங்குகிறோம்' என்று சொன்னார்.

கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி

ஆசிரமத்தில் சமஸ்கிருதக் கல்வியும், சௌராஷ்ட்ர நீதி இலக்கியமான 'நீதி சம்பு', இம்மொழிக் காவியமான கீத கோவிந்தம் இவற்றில் தக்கவர்களைக் கொண்டு கவிஞருக்குப் பயிற்சியளித்தார். தொடக்கக் கல்விப் படிப்பு மட்டுமே அறிந்த கவிஞர், தமது சுய முயற்சியால் மதுரை தமிழ்ச்சங்கம் உ.வே. அப்பனையங்கார் மூலம் தமிழ் நன்கு கற்றார். விப்ரபந்து கு.வெ. பத்மநாப ஐயர் மூலம் சௌராஷ்ட்ர மொழிப் பயிற்சி பெற ஏற்பாடு செய்தார்.

கவிஞர் சங்குராம்

ஆக தாய்மொழி, வடமொழி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் ஒருசேரக் கற்கக் கவிஞருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

1330 குறள்களையும் சௌராஷ்ட்ர மொழியில் பெயர்ப்புச் செய்தார். மூலக் குறள் போன்றே அனைத்துக் குறள்களும் இருந்தன. குருஜியிடம் சமர்ப்பித்தார். 1973–இல் குருஜி ஜெயந்தி விழாவில் கலந்து கொண்ட கவிஞர், குருஜியிடம் இதனைக் கூறி, அவரது ஆசியாலும், வழிகாட்டுதலாலும் தான் செய்துள்ள இந்த மொழி பெயர்ப்பினை குருஜியே நூல் வடிவில் வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார்.

கவிஞரால் நூல் வெளியிடப் பொருளாதார வசதி இல்லை. கவிஞர் சங்குராமும் நெசவுத் தொழிலைத் தான் செய்து வந்தார். நூல் வெளியிட வசதி ஏது? பின் கவிஞர் 1976–இல் மறைந்துவிட்டார்.

1981–இல் சௌராஷ்ட்ரத் திருக்குறள் பாயிரம் 40 குறள் கொண்ட ஒரு சிறிய நூலினை உரையுடன் குருஜி வெளியிட்டார். பின் 1993–இல் 1330 குறள்களையும் தமிழ்க் குறள்களுடன் சேர்த்து எதிர் எதிர்ப் பக்கங்களில் பிரசுரித்தும், சான்றோர்களின் மதிப்புரைக் கருத்துரைகளுடன் 500 பக்க அளவில் அழகுறப் பதிப்பித்து வெளியிட்டார் குருஜி.

தமிழ்நாடு அரசு நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நூலை வெளியிட்டார். 1997–இல் குருஜியின் மறைவு நிகழ்ந்தது.

கம்பருக்குச் சடையப்ப வள்ளல் போன்று, இந்த நூலினை வெளியிட்ட

ஆன்மிக வள்ளல் ஆகிவிட்டார் குருஜி. குறள்களுடன் உலகளாவிய அளவில் அறிஞர்களின் மதிப்புரை, கருத்துரை, திருக்குறள் பற்றிய பல்வேறு செய்திகளுடன் திருக்குறள் கருவூலமாக வெளியிட்டார் குருஜி.

இந்நூலில் பன்மொழிப் புலவரும், சாகித்ய அகாதமியிடமிருந்து முதன் முதலில் மொழிபெயர்ப்புக்கான விருது பெற்றவருமான மு.கு. ஜகந் நாதராஜா, பின்வருமாறு தெரிவித் துள்ளார்.

"30–க்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புச் செய்யப் பட்டுள்ளது. ஆங்கிலத்திலேயே 10–க்கும் மேற்பட்டு மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர். இந்தி, வடமொழி யிலும் உள்ளது. ஏழு சீர் கொண்ட ஈரடிக் குறள் சில மொழிபெயர்ப்பு களில் ஈரடியாகவும், சிலர் உரை நடையிலும் மொழிபெயர்த்துள்ளனர்.

திருக்குறள் செய்யுள் அமைப் பினைப் பின்பற்றி, அதுபோலவே கவிஞர் சங்குராம் செளராஷ்ட்ர மொழியில் திருக்குறளை அமைத்துள் ளார். இது ஒரு தனிச் சிறப்பு! அதா வது, மூலக் குறள் போன்றே உள்ளது" என்கிறார். அதற்கு 'மலர்மிசை' குறளை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார்.

வித்வான் கே. ராமநாதன் தனது கருத்துரையில், குறள் வெண்பாவிற் குரிய அசை, சீர், தளை, அடி, தொடை அமைய மொழியாக்கம் கவிஞர் செய்துள்ளார். இவ்வாறாக, வேறு எந்த மொழிபெயர்ப்பும் இல்லை. அற்புதப் படைப்பு எனக் கூறி, அதற்கு உதாரணமாகப் பின் வரும் குறளைக் கூறுவார்.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

"கனினுக் கனிஹோன் கனிகர் கனினுக்
கனிஹோன் கனிஹோஸு பொவ்ஸு"

இவர் 'செளராஷ்ட்ரமணி' எனும் மாதமிருமுறை இதழில் குறள் விரிவுரைக் கட்டுரை ஓராண்டுக்கு மேல் தொடர்ந்து எழுதி வந்தவர் ஆவார்.

திருக்குறள் பேரவை மாநிலச் செயலாளர் 'திருக்குறள் செம்மல்' என். மணிமொழியன் தனது கருத் துரையில் "செளராஷ்ட்ரக் குறளைப் படிக்கும்போது, தமிழ்ச் சாயலோடு நமக்கும் செளராஷ்ட்ர மொழி வந்து விட்டது எனும் நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது. கவிஞர் சங்குராம் அவர் களின் சடையப்ப வள்ளலாக நரஹரி பெருமான் விளங்கி இம்மொழி பெயர்ப் பினைக் கொணர ஆக்கம் நல்கி யுள்ளார். தமிழ்ச் சமுதாயம் பெரு மானுக்கு என்றென்றும் கடப்பாடு உடையது" என எழுதியுள்ளார்.

இந்த நூலினை அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் ஐயா அவர் கள் 'தமிழ் அன்னைக்கு மற்றொரு அணிகலன்' என்று கூறியிருப்பதற் கேற்ப, சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திருக் குறள் ஓவியக் கலைக்கூடத்தில் திருக் குறள் மற்ற மொழிபெயர்ப்பு நூல் களோடு இந்த செளராஷ்ட்ரத் திருக் குறள் இன்று இடம்பெற்றுவிட்டது.

சமீபத்தில் (2018) பேராசிரியர் முனைவர் எல்.ஆர். கோவர்த்தனன் இந்த செளராஷ்ட்ரத் திருக்குறளில் அறத்துப்பால் 380 வெண்பாக்களை, இம்மொழியின் சொந்த எழுத்திலேயே முதன்முதலில் பதிப்பித்து வெளி யிட்டுள்ளார். இவர் செளராஷ்ட்ர மொழி ஆசிரியருமாவார். இது ஒரு கூடுதல் செய்தி என்பது மட்டுமல்ல, இலக்கிய உலகில் ஒரு வரலாற்றுப் பதிவுமாகும்!

குருஜி காலத்தில் ஆசிரமத்தில் இரு மொழித் திருக்குறள் கருத்தரங்கம், ஆய்வரங்கம், பள்ளி மாணவர் குறள் பேச்சு, ஒப்புவித்தல் போட்டி முத லானவற்றினை நடத்தி வந்தார். குற ளைப் பரப்புவதில் அவ்வளவு ஆர்வ முடையவராக விளங்கி வந்தார். இன் றும் அத்தகு நிகழ்ச்சிகள் சித்தாசிர மத்தில் நடந்து வருவது கண்கூடு! ●

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 38 ஜூலை 2020 இதழ் : 6

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com

சமையல்

சிறுதானிய முருங்கை அடை

தேவையான பொருள்கள் : அனைத்தும் கலந்த சிறுதானியங்கள் : 2 கப், துவரம் பருப்பு : 1 கப், காய்ந்த மிளகாய் : 10, சோம்பு : 1/4 டீஸ்பூன், சீரகம் : 1/2 டீஸ்பூன், மிளகு : 3/4 டீஸ்பூன், இஞ்சி : ஒரு சிறு துண்டு, கறிவேப்பிலை : ஒரு கொத்து, முருங்கைக் கீரை (ஆய்ந்தது) : 1/4 கப், கடுகு : 1 டீஸ்பூன், எண்ணெய் : தேவைக்கேற்ப.

செய்முறை :

1. சிறுதானியங்கள், துவரம் பருப்பு இரண்டையும் ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். பின்பு அதனுடன் காய்ந்த மிளகாய், சீரகம், மிளகு, சோம்பு, இஞ்சி, கறிவேப்பிலை சேர்த்துச் சற்று கொரகொரப்பாக அடைமாவுப் பதத்திற்கு அரைக்கவும்.
2. ஆய்ந்த முருங்கைக் கீரையைக் கழுவி, மாவுடன் சேர்க்கவும்.
3. கடுகைத் தாளித்து மாவுடன் சேர்க்கவும்.
4. அடுப்பில் தோசைக் கல்லைக் காய வைத்து, அடுப்பை மிதமான தீயில் வைத்து, மாவை அடையாக ஊற்றவும்.
5. சுற்றிலும் எண்ணெய் விட்டு இரு புறமும் வெந்ததும், எடுத்துச் சூடாகப் பரிமாறவும்.

– **பி.கே. பிரேமிகா,**
பெரம்பூர்.

ஏஆர்சி ரிட்ரெடிங் கம்பெனி (பி) லிமிடெட்

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களின் தொடர்ந்த நல் ஆதரவினால்
பொன்விழா ஆண்டை கடந்து சேவை செய்வதில்
பெருமிதமும் மகிழ்ச்சியும் கொள்கிறோம்

மேலும் தங்களது தொடர்ந்த ஆதரவினை எப்பொழுதும் போல் கொடுத்து
ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உழைப்பு! தரம்! சிக்கனம்! இவற்றின் சின்னம்

ARC

டிரக்குகள், இலகுரக வாகனங்கள் மற்றும் கார் ஆகியவற்றின் டயர்களை
MRF ப்ரீக்யூர்ட் முறையில் ரிட்ரெடிங் செய்வதில் நாங்கள் வெற்றிநடை
போட்டு முன்னணியில் திகழ்கின்றோம்.

மேலும் கன்வென்சனல் முறையில் டிரேக்டர் உட்பட எல்ல வகையான டயர்களையும்
ரிட்ரெடிங் செய்வதற்கும், ரேடியல் டயர்களை ரிட்ரெடிங் செய்வதற்கும் தேவையான
அனைத்துச் சிறப்பு திறனையும் எங்களது நிறுவனங்கள் பெற்றுள்ளன.

பதிவு அலுவலகம் :

ஏஆர்சி ரிட்ரெடிங் கம்பெனி (பி) லிமிடெட்

(ஏபிடி – சக்தி குரூப்)

64, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயமுத்தூர் – 18

தொலைபேசி : 0422-2234500, 2234600

கிளை அலுவலகம் :

10-ஏ/1, திருவனந்தபுரம் ஹைரோடு, திருநெல்வேலி – 627 002

போன் : 2502403

சிறுகதை

நெஞ்சில் ஓர் ஆசை

ஐ. கிருத்திகா

"தட்டெடுத்து வச்சிட்டேன். சாப்பிட வாங்க..." காமாட்சி, அறையை நோக்கிக் குரல் கொடுத்தாள்.

குரல் ஒலித்து அடங்கும் முன் மூர்த்தி வந்தார். கையலம்பித் தட்டின் முன் அமர்ந்து நிதானமாக உண்ணத் தொடங்கினார். ஒரு பருக்கை சிந்தவில்லை, அவசர விழுங்கலுமில்லை. பொறுமையாக, செரிமானக் கோளாறு வருவதற்கு வாய்ப்பேயில்லாமல் உண்டார்.

ஆனால் நிதானம் அதனை உத்தேசித்து அல்ல. அவருடைய இயல்பே அப்படி. உலகமே தலைகீழாகப் புரண்டாலும் அவர் பதற்றமில்லாமல் சாப்பிடுவார்.

இப்போதுகூட மனதில் ஒரு நிறைவேறாத ஆசை உள்ளது. அதற்காக உணவைப் புறந்தள்ள அவரால் முடியாது. உணவே பிரம்மம் என்று அவருக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

"சாப்பிடும்போது அத்தனை பிரச்சனைகளையும் மூட்டை கட்டி வச்சிட்டு உணவுக்கு மரியாதை குடுத்து நிதானமாச் சாப்பிடணும்" என்பாள் அவருடைய அம்மா. அது அவர் மனதில் பதிந்து போயிருக்கிறது.

"பொரியல் போடவா...?" காமாட்சி கேட்க, சைகையால் வேண்டாமென்றவர், அடுத்த ஐந்தாவது நிமிடம் தட்டில் ஒரு பருக்கை மிச்சம் வைக்காமல் சாப்பிட்டு எழுந்தார்.

"காபிப்பொடி தீர்ந்துடுச்சு. வெயில் தாழ வாங்கிட்டு வர்றீங்களா...?"

அறைக்குள் போக எத்தனித்தவர் நின்று திரும்பி, சரி என்பதாய்த் தலையசைத்தார். அறை ஜன்னலையொட்டி இருந்த வேப்ப மரத்தில் அமர்ந்து குயில் கூவியது. பகல் பொழுதில் அரிதாய்க் கூவும் குயில் விடியற்காலையில் ஐந்து நிமிடங்கள் விடாது கூவும். மூர்த்தி ஜன்னலோரம் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து அதனை ரசிப்பார்.

சோகமா, சுகமா என்று புரிபடாத ஒரு மெல்லிய ஊடுருவலாய் காற்றில் விரவும் அதன் ஒலி கேட்க ரம்மியமாக இருக்கும். ஐந்து நிமிடக் கூவலுக்குப்பின் குயில் சிறகடித்துப் பறந்து போகும்.

இசையில் கரைந்து, நெகிழ்ந்திருக்கும் மூர்த்தி ஒரு பெருமூச்சோடு இடம்பெயர்வார். மனிதருக்கு ஆசைகள் அதிகம் கிடையாது. ஆசை உண்டாகச் சந்தர்ப்பம் அமைந்தாலும் வீட்டின் சூழல் அதைப் புறக்கணிக்க வைத்துவிடும்.

"நெகிழ்ச்சியுடன் கைகளைப் பிடித்துக் கொண்டவன், அவரை நாற்காலியில் அமர்த்தி கீழே அமர்ந்து கொண்டான்."

வெகுசொற்ப வருமானத்தில் காலம் ஓட்டிய தந்தையின் மகனாகப் பிறந்தவர், தன் காலத்திலும் பெரிதாய்ச் சம்பாதிக்கவில்லை. இரண்டு பெண், ஒரு பிள்ளையைக் கரையேற்ற அதிகமாகவே போராடினார்.

மகன் ராகவன் நல்ல அறிவாளி. கற்பூரப்புத்தி. நன்றாகப் படித்தான். உயர்ந்த வேலை கிடைத்தது. வாழ்க்கை ஏறுமுகம் கண்டது. தோளிலிருந்து சுமை நீங்கி ஓர் ஆசுவாசம் கிடைத்தபோது, மனதின் அடியாழத்தில் புதைந்து கிடந்த அந்த ஒரே ஓர் ஆசை மெல்ல கீறிக் கிளம்பிற்று.

சிறுவயதில் அக்கம்பக்கத்து வீடுகளில் கொலு வைத்திருப்பதை மூர்த்தி ஆர்வத்துடன் ஓடிப்போய்ப் பார்ப்பார். அதுபோல் தன் வீட்டிலும் கொலு வைக்க வேண்டுமென்ற தணியாத ஆசை அவருள்ளே உண்டாயிற்று.

ஒருமுறை அதை அம்மாவிடம் சொன்னபோது, அவள் பகபகவென்று சிரித்தாள்.

பின், "நம்ம வீட்டுல நாலு மணைப் பலகை இருக்கு. எடுத்துப் போட்டு நீ, உன் தங்கச்சி, தம்பிகள் உட்கார்ந்துக் கோங்க. அதுதான் கொலு..." என்றாள் தமாஷாக.

மூர்த்திக்கு அழுகை வந்தது. அம்மாவின் எதிர்வினை அவருக்குத் தெரிந்ததுதான். ஏதோ ஒரு நப்பாசை. கேட்டுவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டு மௌனமாக நகர்ந்து போனார்.

"கொலு வைக்கிறது அவ்ளோ சுலபமான காரியமில்லடா. அது ஒரு பெரிய ப்ராசஸ். காலை, சாயங்காலம் ரண்டு வேளையும் பூஜை பண்ணணும். தெனமும் நைவேத்தியம் போடணும். தெருக் கொழந்தைகள், சுமங்கலிப் பெண்களைக் கூப்பிட்டுத் தாம்பூலம் தரணும். நம்மால முடியுமா...?"

அப்பா, செருமியபடி படுத்திருந்த மூர்த்தியின் முதுகு தடவியபடியே கேட்டார்.

பின்னொரு நாளில் தன் காலில் சுயமாக நிற்க ஆரம்பித்த பிறகு யோசித்துப் பார்த்தவருக்கு, அப்பா சொன்னது உண்மைதான் என்று தோன்றியது. அப்போது ஆசை இரண்டாவது முறையாக அமிழ்ந்து போனது.

ராகவனின் சம்பாத்தியத்தில் வீடு வளமை கண்ட பிறகு, சூரியக் கதிர்கள் தங்கச் சரிகை இழைகளையொத்த இள மஞ்சள் வெயிலை வாசல் வழியாகக் கூடத்தில் பரத்தியிருந்த ஒரு காலை வேளையில், மூர்த்திக்கு அந்த ஆசை மறுபடியும் எட்டிப் பார்த்தது.

"நம்ம வீட்டுல கொலு வைக்கலாமாப்பா...?" மகனிடம் கண்கள் மின்ன ஆர்வத்தோடு கேட்டார், அன்றொரு நாள் அம்மாவிடம் கேட்ட அதே தொனியில்.

ராகவன் லேப்டாப்பிலிருந்து முகத்தை உயர்த்தாமல், "திடீர்ன்னு ஒங்களுக்கு என்னாச்சுப்பா... நல்லா இருக்கீங்கயில்ல...?" என்று ஜோக் அடித்துவிட்டு, அலைபேசியில் யாரிடமோ பேச ஆரம்பித்துவிட்டான். காமாட்சிக்கு ஆச்சர்யம்தான்.

"நம்ம வீட்டுல கொலு வைக்கறாப்ல கனவு கண்டீங்களா...?" மூர்த்தியைப் பார்த்துப் புருவம் நெரித்துக் கேட்டாள். அது அவருடைய ரொம்ப காலத்து ஆசை என்று தெரிந்தபோது ஆச்சர்யம் கூடிற்று.

"எங்கிட்டச் சொன்னதே யில்லையே...?"

"தோணல... விடேன்" என்றவர், மறுபடியும் ராகவனிடம் இதுபற்றிச் சொல்லத் தொடங்கும்போதே அவன் முகம் இறுக்கத்திற்குள்ளானது.

"புதுசா எதையும் இழுத்து விட்டுக்கக்கூடாதுப்பா..." ஸ்பஷ்டமாகச் சொன்னான்.

'இது புதுசு இல்லடா... இந்துக்களான நம்மளோட வாழ்வியல் நெறி முறைகள், பக்திமார்க்கம், ஒற்றுமை எல்லாவற்றையும் பொம்மைகள் மூலமாக் காட்சிப்படுத்தற ஓர் அழகியல் சித்தரிப்பு இது. அதோட நம்ம கலாச்சாரத்தோட தொடர்புடையதும் கூட...' என்று கூற நாக்குத் துடித்தது மூர்த்திக்கு.

வாதம் செய்து ஒன்றைப் பெறுவதில் அவருக்கு அறவே விருப்பம் கிடையாது. அதனால் மௌனமாக அந்த இடத்தைவிட்டு அகன்றார். மருமகள் மீராவுக்கு மனசு என்னவோ போலாகிவிட்டது. ராகவனிடம் போராடிப் பார்த்தாள்.

"அப்பா ஏதோ புரியாமப் பேசறார். நீ அதைப் பெரிசு பண்ணாதே. ஏற்கனவே எனக்கு வேலையில ஏகப்பட்ட டென்ஷன். ப்ளீஸ், விட்டுடு...." என்றவனின் பிடிவாதம் மீராவைப் பெருமூச்சு விடவைத்தது.

மூர்த்தி அதிகம் பேசமாட்டார்.

எப்போதுமே பேச்சுக் குறைவுதான். இப்போது தன் ஆசை நிராகரிக்கப்பட்ட போதும்கூட, மௌனத்தின் மூலமாகத் தன் மனதின் எண்ண ஓட்டத்தை அடுத்தவர் தெரிந்துகொள்ள முடியாதபடிக்கு அத்தனை லாகவமாக மறைத்து நகர அவரால் முடிந்தது.

இரவு, நிலவை மறைத்து நகர்ந்த மேகங்களைப் பார்த்தபடி மூர்த்தி அமர்ந்திருந்தார். வானத்தில் மேகம் ஊர்ந்ததுபோல் மனதில் ஆசை ஊர்ந்தது. சிறுவயதில் கண்கள் நட்சத்திரங்களாய் மின்ன, பக்கத்துவீட்டு கோமதிப் பாட்டி கொலு வைக்கும் முறை பற்றிக் கூறியதைக் கேட்டது ஞாபகத்துக்கு வந்தது.

"ஓரறிவு உயிர்களான புல், செடி, கொடி முதலிய தாவர பொம்மைகளை முதல் படியிலும், ஈரறிவு கொண்ட சங்கு, நத்தை பொம்மைகளை இரண்டாம் படியிலும், மூன்றறிவு உயிர்களான கரையான், எறும்பு பொம்மைகளை மூன்றாவது படியிலும், நாலறிவு உயிர்களான நண்டு, வண்டு பொம்மைகளை நாலாவது படியிலும், ஐந்தறிவு உள்ள மிருகங்கள், பறவைகள் பொம்மைகளை ஐந்தாவது படியிலும், ஆறறிவு மனித பொம்மைகளை ஆறாவது படியிலும், மனித நிலையிலிருந்து உயர் நிலையை அடைந்த சித்தர்கள், ரிஷிகள் பொம்மை

களை ஏழாவது படியிலும், தேவர்கள், அட்டதிக்பாலர்கள், நவக்கிரகங்கள் பொம்மைகளை எட்டாவது படியிலும், பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் அவர் களோட தேவியரோட பொம்மைகளை ஒன்பதாம் படியிலும் வைக்கணும்..." கோமதிப் பாட்டி அன்று சொன்னது இன்றுகூடத் தெளிவாக அவர் காது களில் ஒலித்தது. மூர்த்தி இயலாமை யோடு கண்களை மூடிக் கொண்டார்.

இரவு ஒன்பது மணிக்கு ராகவன் வந்தான். முகத்தில் களைப்பின் நிழல் அப்பிக்கிடந்தது. சோர்வாக சோபா வில் அமர்ந்தவன், கைக்கெட்டிய தூரத் திலிருந்த ரிமோட்டைக் கைப்பற்றிச் சேனலை மாற்றினான்.

தொலைக்காட்சித் திரையில் கார்ட்டூன் மாறிப் பழைய படம் ஓடத் தொடங்க, பார்த்துக் கொண்டிருந்த வருண் மீராவிடம் ஓடி வந்தான்.

"நான் கார்ட்டூன் பார்த்துக் கிட்டிருந்தேன். அப்பா வந்து சேனலை மாத்திட்டாரு... நீ வந்து சொல்லும்மா..." மீராவைப் பிடித்து அழைத்து வந்தான்.

"அம்மாவை சப்போர்ட்டுக்குக் கூட் டிட்டு வந்தியா... நான் மாத்தமாட் டேன். ஆபீஸுல இன்னிக்கு நிறைய வேலை. அதனால ஏகப்பட்ட மனஉளைச்சல். எனக்கு ரிலாக்சேஷன் தேவை. நான் கொஞ்சநேரம் டி.வி. பார்க்கப் போறேன். நீ போய்ப்படு." ராகவன், வருணை விரட்டினான்.

"என்னங்க நீங்க, கொழந்தைகிட்ட இப்படியா பேசறது.. நாம பெரியவங்க. அவங்களுக்குச் சரிசமமா போட்டிப் போடக் கூடாது." மீரா இதமான குரலில் கண்டிக்க, ராகவன் அவளை முறைத்தான்.

"பெரியவங்கன்னா நம்மளோட விருப்பு, வெறுப்புகளை அவங்களுக்காக விட்டுக் கொடுத்துட்டு உட்கார்ந்திருக் கணுமா...?"

கேள்வி கேட்டவன் சடாரெனத் திகைத்துப் போனான். அவன் கேட்ட கேள்வி அவனையே தாக்கிற்று.

விடியற்காலைப் பொழுது. இத மான குயிலின் ஓசையில் கண்விழித்த மூர்த்தி அவசரமாக ஜன்னலருகில் வந்து அமர்ந்து கொண்டார். காமாட்சிக்கும், அவருக்கும் கீழேயுள்ள அறை. ராகவனுக்கு மாடியில் அறை.

மூர்த்தி ஜன்னல் கம்பியில் முகம் அழுந்த வேப்பமரத்தை உன்னித்தார். அடர்த்தியான கிளைகளைப் பரப்பி வேப்பமரம் உடல் பெருத்து நின்றிருந்தது.

"குயிலோசையை ரசிக்க ஆரம்பிச் சாச்சா...?"

காமாட்சி கேட்டுக் கொண்டே எழுந்த நேரம் அறைக்கதவு தட்டப்பட் டது. மூர்த்தி எழுந்து சென்று கதவைத் திறக்க, ராகவன் நின்றிருந்தான்.

"என்னடா காலங்கார்த்தால..."

"அப்பா..."

நெகிழ்ச்சியுடன் கைகளைப் பிடித்துக் கொண்டவன், அவரை நாற் காலியில் அமர்த்தி கீழே அமர்ந்து கொண்டான்.

"ஸாரிப்பா..."

கண்கள் சுருங்க அவன் கெஞ்ச, மூர்த்தி புரியாமல் பார்த்தார். காமாட்சிக்கும் புரியவில்லை.

"எதுக்குடா ஸாரி... இப்ப என்ன நடந்து போச்சு...?"

"எத்தனை வயசானாலும் விருப்பு, வெறுப்பு இருக்கத்தான் செய்யும். நான் அதைப் புரிஞ்சிக்கிட்டேன்ப்பா... ரொம்ப ஸாரி..?" என்றவன்,

"நீயும், அம்மாவும் மீராவோட போய்க் கொலு பொம்மைகள் வாங் கிட்டு வந்துடறீங்களா...?" என்கவும், மூர்த்தியால் நம்ப முடியவில்லை.

"நெ... நெஜமாவா சொல்ற...?"

"சத்தியமாப்பா... நம்ம கலாச்சாரத் தைக் கட்டிக் காக்கறது, காப்பாத்தறது நம்ம கடமை. பெரியவங்களை மதிக் கறது மனிதப் பண்பாடு. அதை வரு ணும் கத்துக்கணும். கண்கூடாப் பார்க் கறதன் மூலமா அவன் கத்துப்பான்."

ராகவன் எழுந்தான். "நேரமாச் சுப்பா. நான் ஆபீஸுக்குக் கிளம்ப றேன்." சொல்லிவிட்டுப் போனவனை மூர்த்தி கண்கள் கலங்கப் பார்த்தார். வேப்பமரத்தில் அமர்ந்திருந்த குயில் கானம் பாடிற்று. ●

With Best Compliments from

A B T LIMITED

Divisions

ABT PARCEL SERVICE | **ABT** MARUTI | **ABT** WIND ENERGY | **ABT** BUS SERVICE

ABT PUMP | **ABT** INFO.NET | **ABT** EXPPRESS

Corporate Office : 180,Race Course Road,Coimbatore - 641 018. Phone : 0422 - 4333666 Fax : 0422-4333100

Website: www.abtlimited.com **E-mail : corporate@abtlimited.com**

கட்டுரை

திரைப்பாடலுக்குத் துணைசெய்த பாடல்கள்

திருக்குறளில் நாற்பத்தி ஒன்பது குறட்பாக்களில் 'தான்' எனும் சொல்லை வள்ளுவப் பேராசான் எடுத்தாண்டுள்ளார். தனக்கு என்றும், ஒருவன் என்றும் பொருள் தருமாறு இடம் பெற்றுள்ள 'தான்' என்னும் சொல்லைத் திருக்குறள் – புல்லறிவாண்மை அதிகாரத்தில்,

"அறிவு இல்லாதவனுக்கு, அறிவிப்பவன் தானே அறிவில்லாதவனாய் நிற்பான். அறிவு இல்லாதவனோ, தான் அறிந்த வகையால் அறிவுள்ளவனாய்த் தோன்றுவான்" எனும் பொருளில்,

"காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்டவாறு"

என்ற குறட்பாவில் 'தான்' என்னும் சொல்லை நான்குமுறை வள்ளுவப் பேராசான் எடுத்தாண்டுள்ளார். குறித்த ஒரு பொருள், குறித்த ஒருவன் என்னும் பொருளில் 'தான்' இங்கே எடுத்தாளப் பெற்றுள்ளன. ஏனைய நாற்பத்தி எட்டுக் குறட்பாக்களில் ஒருமுறை மட்டுமே 'தான்' எடுத்தாளப்பட்டுள்ளது.

ப. சோமசுந்தர வேலாயுதம்

வள்ளுவருக்குப் பின் வந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர், தான் இயற்றிய இராமாயணம் – யுத்த காண்டம், மாயாசனகப் படலத்தில், கும்பகர்ணன் போரில் மாண்டு போனான் என்பதை அறிந்து,

"தன்னைத்தான் தம்பியைத்தான் தானைத்
தலைவனைத்தான்
மன்னனைத்தான் மைந்தனைத்தான் மாருதத்தின்
காதலைத்தான்
பின்னைக் கரடிக்கு இறையைத்தான்
பேர் மாய்த்தாய்
என்னைத்தான் கேட்டிலேன் என்
ஆனவாறு இதுவே!"

இராவணன் அழுது அரற்றியதாகக் கம்பரால் பாடப்பெற்றுள்ளது

'தம்பி கும்பகர்ணன் போரில் இறந்து போனான் என்று அறிந்த இராவணன், கும்பகர்ணனின் பேராற்றலில் இராமனைத்தான், அவன் தம்பி இலக்குவனைத்தான், வானர சேனைத் தலைவனாகிய நீலனைத்தான், வானர அரசன்

சுக்கிரீவனைத்தான், வாலி மகனாகிய அங்கதனைத் தான, காற்றின் காதல் மைந் தன் அனுமனைத்தான், சாம் பவனைத்தான் இவர் களை யெல்லாம் பெயரே இல்லா மல் போகும்படிக் கொன்றாய் எனச் செவிகளில் கேட்பேன் என்றிருந்த எனக்கு, உனது சாவினைக் கேட்குமாறு எனது செவிகள் ஆகிப்போயினவே' என வருந்தி அரற்றுகிறான்.

திருக்குறளில் நான்கு முறை இடம் பெற்ற 'தான்' என்னும் சொல் கம்பரால் இப்பாடலில் எட்டு முறை இடம்பெற வைக்கப்பெற்றமை வியப்புக் குரியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமச்சந்திரக் கவிராயர் தனது வறிய நிலையை எண்ணி மனம் தளர்ந்து, தாமரைப் பூவில் வாசம் செய்யும் படைப்புக்கடவுளான பிரம்மனிடம் "என் னைப் படைத்தபோதே கையில் சிறிது தங்கத்தைக் கொடுத்துக் காப்பாற்றியிருக்கலாமே. இயலாவிடின் கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிக்கக் கற்றுக் கொடுத்து இப்பூமிக்கு அனுப்பியிருக்கலாமே. இவ் விரண்டையும் செய்யாததால் நான் படும் துன் பத்தை எங்கே யாரிடம் சொல்லி நோவது? பலரிட மும் நான் பல்லைக் காட்டிப் பிழைக்கும் வாழ்க்கை யாகிப் போனதே எனக்கு" என்பது தோன்ற,

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான்....
கற்பித்தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தான்
இரட்சித்தானா?...
அல்லைத்தான் சொல்லித்தான் அரைத்தானோ அத்தானையோ
வெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான்
பண்ணினானா?".

என்று சிறப்பாகப் பாடியுள்ளார்.

பாடலின் பொருளைக் காட்டிலும் முதலிரண்டு வரிகள் எத்தனை நயமாக அமைந்து உள்ளன என் பது சிறப்பிற்குரியது. மேலும் அவற்றில் அடங்கிய வறு மையின் துன்பமும் கண் முன்னே வந்து நிழலாடு கின்றன. வள்ளுவர் நான்கு இடங்களில் 'தான்' என் னும் சொல்லை எடுத்தாண்டி ருக்கக் கம்பர் எட்டு இடங் களில் கையாண்டுள்ளார். இராமச்சந்திரக் கவி ராயரோ 'தான்' என்னும் சொல்லைக் கம்பரின் எட்டை இரட்டிப்பாக்கிப் பதினாறு இடங்களில் அச் சொல்லைக் கையாண்டார். நான்கு எட்டாகிப் பதினா றானது வியப்புக்குரியது.

கண்ணதாசன்

இராமச்சந்திரக் கவிராய ரின் பாடலின் சொல் லழகில் மயங்கிய அறிஞர் அண்ணா 'தான்' என்னும் சொல்லைக் கவிராயர் எத் தனை இடங்களில் நயமாகக் கையாண்டு சிறப்பித்துள்ளர் என்பதை அருகிலிருந்த கவிஞர் கண்ணதாசனிடம் காட்டி வியப்புற்றார் எனக் கூறப்படுகிறது. இதனை மனதில் கொண்டிருந்த கவிஞர் 1961–ஆம் ஆண்டில் வெளிவந்த 'பாவ மன்னிப்பு' திரைப்படத்தில்,

"அத்தான் என்னத்தான்
அவர் என்னைத்தான்
எப்படிச் சொல்வேனடி
அவர் கையைத்தான்
கொண்டு மெல்லத்தான்
வந்து அணைத்தான்"

எனத் தான் எழுதிய பாட லில் இருபத்தி நான்கு இடங் களில் தான் என்னும் சொல் வருமாறு அமைத்திருந்தார்.

திருவள்ளுவப் பேராசா னிடம் தொடங்கிய 'தான்' கம்பர், இராமச்சந்திரக் கவி ராயர், சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் இப்படிப் பல புலவர்கள், கவிராயர் களின் நாவிலும், கையிலும் தவழ்ந்து சுவையாகவும் நய மாகவும் வெளிப்பட்டு நம் மையெல்லாம் இன்பத்தில் ஆழ்த்தியதும் மகிழ்ச்சிக் குரியதே. ●

தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
ABT
Sakthi
as pure as mother's love
MILK
Standardised Milk
SUPREME
Sakthi
MILK
SELECT
Pasteurised
Toned Milk
500ml
Sakthi
MILK
SPECIAL
Pasteurised, Homogenised, Standardised Milk
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

வாழ்விக்க வந்த பாரதி – 3

வாழையடி வாழையென வந்த மகாகவி

கிருங்கை சேதுபதி

சகோதரி நிவேதிதா

“1905–இல் காங்கிரஸ் மகாசபை காசியில் கூடிற்று. பாரதி அந்தக் காங்கிரஸுக்குப் போனார். தெரிந்த பழைய ஊரான காசியை மீண்டும் பார்க்கலாம் என்றுதான் போனாரோ, என்னமோ தெரியாது. காசியிலிருந்து திரும்பும்போது, கல்கத்தா அருகிலுள்ள ‘டம்டம்’ என்ற இடத்துக்குச் சென்று, அங்கே விவேகானந்தரின் தர்மபுத்திரி நிவேதிதா தேவியைத் தரிசித்தார். பாரதியின் வாழ்க்கையையே அடியோடு மாற்றிவிட்டது இந்தச் சந்திப்பு’’ என்கிறார் பாரதி ஆய்வாளர் ரா.அ.பத்மநாபன். (சித்திர பாரதி, ப.28)

மகாகவி பாரதி

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சந்திப்பு, இவ்வுலகில் வாழப் பிறந்த பாரதியை, வாழ்விக்க வந்த பாரதியாகப் பரிணமிக்கச் செய்தவற்றுள் ஒன்றாக அமைந்தது. இதுகுறித்துப் பலரும் எழுதியிருக்கின்றனர். அவற்றுள் புறச் சான்றுகளாக அமைவன இரண்டு. அதில் முதலாவதாக அமைவது, பாரதியின் மனைவி செல்லம்மாள் (1941–ஆம் ஆண்டு) எழுதிய சரித்திரக் குறிப்பு. மற்றொன்று, பாரதியின் நண்பராகிய புதுச்சேரி, வி.எஸ்.சாமிநாத தீட்சிதர்தம் புதல்வர் வி.எஸ்.குஞ்சிதபாதம் எழுதிய தொடரில் இடம் பெறுவது. முந்தையது, கணவன் மனைவிக்குக் கூறுவதாகவும், பிந்தையது, குரு சீடருக்கு எடுத்துரைப்பதாகவும் அமைந்திருக்கின்றன. அவற்றில் தேவை கருதிய பதிவுகளை மட்டும் இங்கு எடுத்துரைப்பது பொருத்தமானது.



முதலாவது, செல்லம்மாள் பாரதியின் ‘பாரதியார் சரித்திரத்தில்’’ இடம்பெறும் பதிவு.

‘‘காசியில் நடந்த காங்கிரஸ், பாரதியாரைப் புது மனிதனாக மாற்றியது. அதற்கு முன்னால் நடந்த காங்கிரசுகளைப் போலன்றி, இந்தக் காங்கிரஸ் புத்துயிர்பெற்று விளங்கியது’’ என்று குறிப்பிடும் அவர், 1905 டிசம்பர் 27 முதல் 30 வரை நடந்த காசி காங்கிரஸ் மாநாட்டிற்குப் போன பாரதி, ‘‘வரும் வழியில், கல்கத்தாவின் அருகிலுள்ள ஊராகிய, ‘டம்டம்’ என்ற ஊரில் ஸ்ரீமதி நிவேதிதா தேவி இருப்பதாகக் கேள்வியுற்று, அவரைப் பார்ப்பதற்காகச் சென்றார். அங்கே தாம் சென்றதையும், தேவியார் தமக்கு ஞானோபதேசம் செய்ததையும்,

பாரதியார் நிரம்பவும் உணர்ச்சியோடு என்னிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால், அவற்றை என்னால் விவரித்துக் கூற முடியவில்லை...''

பாரதியார் முதலில், 'என்னதான் விவேகானந்தருடைய சிஷ்யையாயிருந்தாலும், ஆங்கில மாது தானே!' என்ற மனோபாவத்தோடு இருந்ததாக அம்மையார் மனதில் தோன்றியதாம். எனவே, உடனே அவர், ''மகனே! உன் மனத்தில் பிரிவுணர்ச்சியை நீக்கு. ஜாதி, மதம், குலம், கோத்திரம் என்ற அநாகரிகமான வித்தியாசங்களை விடு. அன்பை மட்டும் அகத்தில் கொள். பிற்காலத்தில் நீ ஒரு தீரனாக, சரித்திரப்பிரசித்தி பெற்ற தேவனாக வருவாய்'' என்றுரைத்துவிட்டு, ''அன்ப, உனக்கு இன்னும் விவாகம் ஆகவில்லையா?'' என்றாராம்.

பாரதியார் வெட்கித் தலைகுனிந்தார். பின்பு, ''தாயே, எனக்கு விவாகமாகி இரண்டு வயதான பெண் குழந்தை ஒன்றும் இருக்கிறது'' என்றார்.

''நிரம்பச் சந்தோஷம்! ஆனால், மனைவியை ஏன் உடனழைத்து வரவில்லை?'' என்றார் அம்மையார்.

''இன்னும் எங்கள் மனைவியைச் சரிசமமாகப் பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. மேலும், காங்கிரசுக்கு அவளை அழைத்துவந்தால், என்ன பிரயோஜனம்?'' என்றார் பாரதியார்.

இதைக் கேட்டு அம்மையாருக்கு வெகு கோபம் உண்டாயிற்று. ''மகனே, புருஷர்கள் அனேகம்பேர் படித்தும் ஒன்றும் அறியாத சுயநலவெறி கொண்டவர்கள்; ஸ்திரீகளை அடிமைகள் என்று மதிப்பவர்கள். ஒருசிலர் உன் போன்ற அறிவாளிகள். அவர்களும்கூட, இப்படி அறியாமையால் மூழ்கி, ஸ்திரீகளுக்குச் சம உரிமையும், தகுந்த கல்வியும் கொடுக்காவிட்டால், எப்படி நாடு சமூகச் சீர்திருத்தம் அடையும்?'' என்று அன்பாகக் கடிந்துரைத்துவிட்டுப் பின்பு, ''சரி, போனது போகட்டும். இனிமேலாவது, அவளைத் தனியென்று நினைக்காமல், உனது இடக்கை என்று மதித்து, மனதில் அவளைத் தெய்வம் எனப் போற்றி நடந்து வருதல் வேண்டும்'' என்றாராம்.

அப்படியே பாரதியார் வாக்களித்து, தேவியாரிடம் உபதேசம் பெற்றுத் திரும்பினார். தேவியார் தாம் இமாலயத்திலிருந்து கொணர்ந்த ஆலிலை அளவு இருக்கும் ஓர் இலையை பாரதியாருக்கு ஞாபகார்த்தமாக அளித்தார். (அது பாரதியார் காலமான சமயம் எங்கேயோ தவறிவிட்டது.) அதைப் பாரதியார் ஒரு பொக்கிஷம்போல் போற்றி வந்தார். சில நண்பர்கள் தக்க விலை கொடுப்பதாகக் கேட்டுப் பார்த்தும்கூட, அதை அவர் கொடுக்க இஷ்டப்படவில்லை. பாரதியார், நிவேதிதா அம்மையாரிடம் உபதேசம் பெற்றதைப் பின்வரும், 'ஆனந்தக் களிப்பு' மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்.

"சொன்ன சொல் ஏதென்று சொல்வேன் எனைச்
சூதாய்த் தனிக்கவே சும்மா யிருத்தி
முன்னை ஏதும் இல்லாதே - சுகம்
முற்றச் செய்தே எனைப் பற்றிக் கொண்டார்
பற்றிய பற்றற ஒன்றே தன்னைப்
பற்றச் சொன்னார் பற்றிப் பார்த்த விடத்தே
பெற்றதை ஏதென்று சொல்வேன் - சற்றும்
பேசாத காரியம் பேசினார் தோழி..."

என்று எழுதுகிறார். (செல்லம்மா பாரதி, பாரதியார் சரித்திரம், பக்.43–45)

இது முதற்சந்திப்புத்தான். ஆனால், அன்னை நிவேதிதாதேவி, முற்றிலுமாகப் பாரதியைக் கணித்து, அவருக்கே அவரை உணர்த்தி, மேலும் அவர் மேன்மைபெற வழிகாட்டியிருக்கிறார். விடுதலை வேட்கையும் பெண்களின் முன்னேற்றம் குறித்த ஈடுபாடும் மிகுதியாகக் கொண்ட பாரதிக்கு, இந்தச் சந்திப்புச் செயல்வேகத்துக்கான உந்தாற்றலை உருவாக்கித் தந்தது. அதே வேளையில், தன் காதல் மனைவியிடம் தான் பெற்ற விஸ்வரூப தரிசனத்தை விவரிக்க முடியாத பேருவகையில், தாயுமானவரின் ஆனந்தக் களிப்பைப் பாடிக் காட்டியிருக்கிறார்.

முற்றிலும் பின்தங்கிய, சாதி, சமய, ஆசார நெறிகளுக்குள் முடங்கிக் கிடந்த பார்ப்பனப் பெண்ணாகிய செல்லம்மாளை, முற்றிலும் முற்போக்கான, புதிய சமூக எழுச்சிக்குப் பாடுபடத் தயாரான பாரதியார், தன் வசப்படுத்திக் கொள்ள, இந்த அன்னையின் உபதேசத்தைப் பயன்படுத்திக்கொண்டார் என்றே கூறவேண்டும்.

எழுத்திலும் பேச்சிலும் மட்டுமன்றி, செயலிலும் இந்தச் சீரிய முயற்சி அமைந்தால்தான் பாரதம் மேன்மையுறும் என்று தெளிவுகொண்டதால்,

வாழ்ந்தால் மட்டும் போதாது, வாழ்வித்தலும் தமக்கு இன்றியமையாத கடமை என்று முடிவுகொண்டதால், தன் பணியில் தன்னில் சரிபாதியான மனைவியும் உடனிருப்பதற்கேற்றவாறு, அந்த உபதேசச் செய்தியையும் இவ்வாறு எடுத்துரைத்திருக்கிறார் எனலாம்.

சுவாமி விவேகானந்தர்

இதேபோல், இன்னொரு புறச்சான்றாக அமைகிற பதிவு, புதுச்சேரி வி.எஸ்.குஞ்சிதபாதம் என்பாருடையது. இவர் பாரதியாரை நேரில் அறிந்தவர்; அவர்தம் அன்புக்குப் பாத்திரமானவர். இவரது தந்தையார் வி.எஸ்.சாமிநாத தீட்சிதர் புதுவைக் 'கல்வே கல்லூரி'யில் ஆங்கிலம், பிரெஞ்சு கற்றுக்கொடுக்கும் பணிசெய்துவந்தவர். தனது தந்தையாரைச் சந்திக்க வரும் பொழுதுகளில் உடனிருந்து பேசியும் பழகியும் பாரதியின் அன்பைப் பெற்ற குஞ்சிதபாதம், 'சுதேசமித்திரன்' நாளிதழில் 'பாரதி நினைவுகள்' என்ற தலைப்பில், (1948) தொடராக, சொல்லச் சொல்ல, இவர்தம் திருமகள் எழுதித் தர வெளிவந்தது. அதில் நிவேதிதாதேவி பாரதியார் சந்திப்புக் குறித்த செய்தி விரிவாக இடம்பெறுகிறது.

பாரதியும் செல்லம்மாவும்

''ஒருநாள் பாரதியார் என்னிடம் நிவேதிதா தேவியைத் தான் முதன்முதலில் கல்கத்தாவில் சந்தித்ததைப் பற்றியும், அவரைக் குருவாக ஏற்றுக்கொண்டதைப் பற்றியும் விவரமாகக் கூறியிருக்கிறார். இதை அவர் என்னிடம் சொல்ல நேர்ந்ததற்கான காரணம் – ஒருநாள் நான் வெகுகுறும்பாக பாரதியாரைப் பார்த்து, ''எல்லாம் சரிதான். 'வெள்ளையர் என்றால் உள்ளம் கொதிக்கிறது' என்கிறீர்கள். ஆனால், உங்கள் தேசியக் கவிதைகளை அயர்லாந்து தேச மாதாவாகிய நிவேதிதாதேவிக்கு அர்ப்பணம் செய்திருக்கிறீர்கள்! இதென்ன வெட்கக்கேடு?'' என்று கேட்டேன்.''

அதன் விளைவாக, அன்னையுடனான தெய்வீக நினைவுகளில் மூழ்கிய, மீளவும் அந்தக் காலக்கட்டத்திற்குள் சென்று கல்கத்தா நகருக்கே ஸ்தூல உடம்போடு போய் வந்த பாரதி, அந்த அனுபவங்களை, முன்னர்ப் பெற்ற அதே பரவச நிலையில் எடுத்துரைத்திருக்கிறார்; கேட்ட அனுபவத்தை, எழுதும் முறைக்கேற்ப, கேட்டவர் தொடர்ந்து சொல்கிறார்:

''அம்பீ, நிவேதிதா என்னுடைய குரு என்பதில் சந்தேகம் வேண்டாம். என் குருமணி எனக்கு உபதேசம் செய்தது ஒரு ரகசியமான விஷயம். அதைச் சொல்லாவிட்டால் உன் கேள்விக்குப் பதிலே கிடைக்காது. ஆகையால், சொல்கிறேன். கேள்'' என்று ஆரம்பித்தார்.''

பாரதி, காசி காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றது, திரும்பும் வழியில், பழைய காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ ஆனந்தமோகன் போஸ் அவர்களின் மாளிகையில் தங்கியது, அங்கிருந்த ஆலமரத்தை ஆவலோடு கண்டு அனுபவித்தது, அங்கு நடந்த கூட்டத்திற்கு வந்து நிவேதிதாதேவி பேசியது எல்லாவற்றையும் விரிவுற எடுத்துச் சொல்லிய பாரதியார், அன்னையைத் தனித்துச் சந்தித்த அனுபவத்தையும் உணர்ச்சி ததும்ப நெகிழ்ந்துரைத்திருக்கிறார்.

''இந்தச் சிறிய கூட்டம் முடியும் தருவாயில், நான் என்னை அவரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டு, சில பாட்டுக்களைப் பாடினேன். அதைக் கேட்டவுடனேயே, அன்னையின் முகத்தில் ஒரே களிப்பு. என்னை அன்பும் அருளும் ததும்பும் பார்வையுடன் பார்த்தார். நான் 'நடக்கப்போவது என்ன?' என்று எண்ணிப் பார்க்கவுமில்லை. திடீரென்று அவர் மிக மகிழ்ச்சியுடன் வந்து, என் கையைப் பிடித்திழுத்து, வீட்டிற்கு வெளியே தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். நானும் என்னை அறியாமலேயே அவரைப் பின்தொடர, இரண்டுபேரும் என்னைக் கவர்ந்த அந்த ஆலமரத்தடிக்கே வந்து நின்றோம். உடனே அன்னை, 'அதோ, பார்; பாரதமாதா!' என்றார். நான் மிகவும் வியப்புடன் அவர் சுட்டிக் காட்டிய திக்கை நோக்கி, இரு கண்களும் விரிய விழித்தேன். என்ன ஆச்சரியம்! பாரதமாதாவின் சொரூபம் ஆகாயத்தை அளாவி நிற்பதைக் கண்டேன்! என் மெய் சிலிர்த்தது; நாத் தழுதழுத்தது! அப்படியே அந்தத் தோற்றத்தில் மெய்ம்மறந்து நின்றுவிட்டேன். நிலைபெயராது சிலையாக நின்ற என்னை, அந்தச் சொல்லற்கரிய

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
THE SWADESAMITRAN ILLUSTRATED WE

தேவியின் திவ்விய சொரூபம் அப்படியே கட்டிப் போட்டுவிட்டது. திரும்பவும் பரிவும் அன்பும் கூடிய நிவேதிதாதேவியின் இனிய குரல், என்னைச் சுயநிலைக்குக் கொண்டுவந்தது.

அப்போது நிவேதிதா தேவி, ‘‘பார்த்தாயா? உன் கவித்திறமையைப் பாரதமாதா, சுதேசி சேவைக்கே உபயோகிக்க வேண்டுகிறாள். அன்னையின் விருப்பமும் கட்டளையும் அதுதான். உடனே நீ (உன்னை) அர்ப்பணம் செய்து, கிடைப்பதற்கரிய மாதாவின் வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்’’ என்று உத்தரவிட்டார்.

நான் மீண்டும் மீண்டும் பலமுறை பாரதமாதாவின் தோற்றம் இருந்த திசையை நோக்கி வணங்கி நிமிர்ந்தேன். அந்தத் தோற்றம் மறைந்து குருமணி நிவேதிதாதேவி, அதே அருளும் அன்பும் கலந்த பார்வையுடன் என்னைப் பார்த்து நின்றார்.

பாரதமாதாவின் தோற்றமும் தரிசனமும் கிடைத்த இடத்திற்கு அருகில் இருந்த ஆலமரக் கிளையிலிருந்து, குருமணி நிவேதிதாதேவி ஓர் ஆலிலையைப் பறித்தார். அதை உடனே, அவர், உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துத் தொழுதுநிற்கும் என்னிடம் ஆசி கூறிப் பிரசாதமாக அளித்தார்.

அம்பீ, இந்த அருளும் அனுபூதியும் கிடைத்த பிறகுதான், என் நாவிலிருந்து பிரசண்ட மாருதம் போல், தேசிய கீதங்கள், தேசபக்தியை ஊட்டுவிக்கும் பாக்கள் தேசத்தைத் தட்டியெழுப்பும் கவிதைகள் வெளிவரலாயின’’ என்றார்... ஆகையால், தேசிய உணர்ச்சி ததும்பப் பாடி, தேசத்தைத் தட்டியெழுப்புவதற்கு, பாரதியாரைத் தமிழுக்குத் தந்த பெருமை பாரதியின் குருமணியாகிய நிவேதிதா தேவிக்கே உரியதாகும்’’ என்று வி.எஸ். குஞ்சிதபாதம் பாரதி தன்னிடம் கூறியதை விரிவாகக் குறிப்பிடுகிறார்.

இது குரு சீட மரபில் அமைந்த உரையாடலால் விளைந்த பதிவு. எனவே, உண்மைக்கு மிக நெருக்கமாக வெளிவந்திருக்கிறது. ஏற்கெனவே, குருவாகி நின்று அன்னை உபதேசித்த உணர்வை மீளவும் எடுத்துரைக்கிறபோது, அதே உணர்வு நிலையில் பாரதியின் மனோநிலை இலயித்திருந்ததும் முக்கியக் காரணம்.

கேட்போர் மனதுக்கேற்பக் கூறுகிற தன்மையினால், பாரதியார் நேருற அனுபவித்த அந்தத் தரிசனப் பாங்கை அப்படியே பதிவிட இவர்களால் இயலாதுபோனாலும், இந்தச் சந்திப்புக் குறித்த பாரதியாரின் அகவுணர்வுகளைச் சொல்லக்கேட்ட பேறு பெற்றவர்கள் ஆகிறார்கள். இச்செய்திகளைக் கேட்டது இளம்பருவத்தில்; நினைவு கூர்ந்து எழுதியது பிற்காலத்தில்; யதுகிரிஅம்மாள் போல், அந்தந்தக் காலத்தில் நாட்குறிப்புப் போல, அவர்களால் எழுத இயலாது போனாலும், இந்தப் பதிவுகளில் அடிப்படை உண்மை மாறாதிருப்பது அழகு. பாரதி நிவேதிதாதேவி சந்திப்புக் குறித்த இருவர்தம் பதிவுகளும் அவரவர் கோணங்களில் புரிந்துகொண்ட தன்மைக்கேற்பத் தெளிவாகவே விளங்குகின்றன. இவற்றால் அறியக்கிட்டும் உண்மைகளுள் இன்றியமையாதவை சில.

இதுவரையில் இருந்த குழப்பங்களும் கவலைகளும் முற்றாக நீங்கி, பற்றற்ற நிலையில் பாரத மாதாவின் பாதங்களையே பற்றுகிற பற்றற்ற நிலையைப் பாரதி பெற்றிருக்கிறார். அதனால், அதுவரையில், தன் விருப்பிற்கேற்பப் பாடல்கள் புனைந்துவந்த பாரதியின் உள்ளத்திலும் வாக்கிலும், பாரதமாதாவின் விடுதலைக்கான தேசியப் பாடல்களே பிறந்து வளர்ந்து சிறந்தன. ‘‘பிற்காலத்தில் நீ ஒரு தீரனாக, சரித்திரப்பிரசித்தி பெற்ற தேவனாக வருவாய்’’ என்று அன்னை கூறிய அமுதவாக்கு அப்படியே சத்திய வாக்காகப் பலித்துவிட்டதையும் வரலாறு உறுதிப்படுத்தியிருக்கிறது.

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரால், நரேந்திரன் அன்னை காளியின் அருள்பெற்று விவேகானந்தரானதுபோல, மார்கரெட் எலிசபெத் (Margaret Elizabeth Noble) என்ற பெயருடன், அயர்லாந்து தேசத்தில் பிறந்து, சுவாமி விவேகானந்தரின் அருளால் ஈர்க்கப்பெற்று, தன்னையே அத்தவயோகிக்கு ‘அர்ப்பணமாக்கி’, அவர்தம் ஞானத்திருமகளாய் நிவேதிதா ஆனவரின் அருட்சீடராகவும் அருள்மகனாகவும் பாரதி ஆகியிருக்கிறார்.

வாழையடி வாழையென வந்த வளர்ந்த ஞானத் திருமரபில், இவ்வையத்தை வாழ்விக்க வந்தோர் வரிசையில், மகாகவி பாரதியாரும் இவ்வாறு ஆட்கொள்ளப்பெற்று வந்திருக்கிறார் என்பது வரலாறு. இதற்கு அகச்சான்றாய் அமையும் அவர்தம் பதிவுகளையும் பார்ப்பது இன்றியமையாதது ●

பா. மீனாட்சிசுந்தரம்

ஆங்கில உரைநடையின் அன்னை

இந்தக் கொரோனாக் கிருமி தந்தருளிய விடுமுறையில், ஊரடங்கின் உத்தரவால் வீட்டுள் அடங்கி, நேரத்திற்குச் சுவையான உணவும், சிற்றுண்டியோடு தேநீரும் அருந்தியபடி, நாம் எழுதிக் கொண்டிருப்பது 'இலக்கியம்'தானென்ற மறுகேள்வியற்ற நம்பிக்கையில், இன்று ஏதொவொன்றை நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

ஒருவேளை, 'கொரோனா இலக்கியம்' என்ற வகைமையில், இப்போது வீட்டிற்குள் நாள் கணக்கில் அடைபட்டதனாலேயே இப்பூமியைப் புரட்டிப் போடுகிற புதுமை இலக்கியங்களை, எப்படியும் நம் பேனா வழி பிரசவித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் நம்மில் சிலரும் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.



ஜூலியன் ஆப் நார்விச்

நாம் எழுதிக்கொண்டிருப்பவை, நாளை இவ்வுலகத்தின் கதவுகள் முழுமையாய்த் திறக்கப்பட்ட பின், ஏராளமான பரிசுகளையும் விருதுகளையும் தட்டிச் செல்லும் என்று, நாம், நமது தேநீர்க் கோப்பைகளைக் கைகளில் ஏந்தியபடி கற்பனையில் மிதந்து கொண்டிருக்கிறோம்.

நெடுநாட்களாய் வீட்டினுள் அடைபட்டபின் ஏற்பட்ட உளவியல் மாற்றங்களும், அவை கொடுத்த தூக்கமற்ற இரவுகளும் நமது எழுத்துக்களுக்கான புதிய கற்பனையையும் பாடுபொருளையும் வழங்கியிருக்கின்றன.

ஆனால் ஒரு கல்வியறிவற்ற பெண், முப்பது ஆண்டுகளாய் ஒரு சிற்றறைக்குள் அடைபட்டு, அந்நெடிய யுகத்தின் பயணத்தின் ஊடே, தான் ரகசியமாய் எழுதி வைத்திருந்தவை தாம் பின்னாளில் ஆங்கிலத்தில் 'மிகச் சிறந்த உரைநடை இலக்கியம்' என்றானது. பதினான்காம் நூற்றாண்டில், எந்த எழுத்தாளர் பட்டியலிலும் இடம்பெறாத அவளே, பின்னாளில் 'ஆங்கில உரைநடையின் தாய்' என்று கொண்டாடப்பட்டாள்.

இப்புவியில் கணக்கற்ற எழுத்தாளர்கள் தோன்றி மறைந்தும், எழுத்திற்கே தொடர்பற்ற ஒரு பெண்

மட்டும், எப்படி, தான் இறந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின் இப் புகழைப் பெற்றாள்? காரணம், அவளது எழுத்துக்கள், தனது காலத்திய சமூக, மத, நம்பிக்கைகளுக்கு எதிரானவையாய் இருந்தன.

அவளது காலத்தில் கட்டமைக்கப் பட்டிருந்த ஆன்மிகமும் அதிகாரமும், மனிதர்கள் எதைச் செய்வது பாவமென்றும் குற்றமென்றும் எச்சரித் திருந்ததோ, அதையே அவள் செய் திருந்தாள்.

ஒரு தேவாலயத் துறவியான அவள், தனது ரகசிய எழுத்தை, ஒருவேளை, அன்றே வெளிப்படுத்தியிருந்தால், அவளையும் ஒரு மத விரோதியாக, சூனியக்காரியாகக் குற்றம்சாட்டித் தீயிட்டுக் கொளுத்தியிருக்கும் திருச்சபை.

இப்படி எழுத்திற்கே தொடர்பற்ற ஒருவரின் எதிர்ப் படைப்பையே, வரலாறு, பின்னாளில் ஒரு பேரிலக் கியமாய்ப் பதிவுசெய்து கொள்கிறது. திருச்சபையின் புனித மொழியாக இலத்தீன் உயர்வுற்றிருந்த காலத்தில், விவிலியத்தை ரகசியமாய் ஆங்கிலத்தில் வாசித்த சாமானியர்களை மதத்தின் விரோதிகளென்று திருச்சபை, அவர்களைத் தீயிலிட்டுக் கொன்றதை இங்கிலாந்து வரலாற்றின் பக்கங்கள் பேசுகின்றன.

உயிரை அச்சுறுத்திய அக்கொடிய நாள்களில் ஓர் ஆங்கிலப் பெண் துறவிக்கு எத்துணை துணிச்சல் இருந் திருந்தால், தான் உணர்ந்த தெய்வீக மனக் காட்சிகளை (Divine Revelations), அவை திருச்சபையின் கொள்கை களுக்கு எதிரானதாக இருந்தும், சாதாரண மக்கள் மொழியான ஆங்கிலத்தில் எழுதி வைத்திருப்பாள்.

Just because I am a woman, why must I not write of the goodness of God? - "நானொரு பெண் என்பதாலேயே, ஏன் கடவுளின் சிறப்பை எழுத அனு

மதிக்கப் படாதவளாய் இருக்கிறேன்?" என்றந்தப் பெண்துறவி தன் படைப்பை தொடங்கியதுதான் ஆங்கில இலக்கியத்தில் முதன் முதலாக ஒலித்த ஒரு பெண்ணின் விடுதலைக் குரல்.

கி.பி 1343. இங்கிலாந்தில் லண்ட னிற்கு அடுத்த பெருநகரமான நார் விச்சில் அவள் பிறந்தாள். இங்கிலாந் திற்கும் பிரான்சிற்கும் நடந்துவந்த நூறாண்டுப் போரும், கணக்கற்ற உயிர் களைக் குடித்துவந்த பிளேக் நோயும் மனிதகுலத்தை அலைக்கழித்த சூழலில், மீளாத் துயரிலிருந்து விடு பட்டு, நித்திய இன்ப வாழ்வைப் பெற வேண்டி அன்றாடம் தேவாலயம் சென்று பிரார்த்தித்து வந்த குடும்பங் களைப் போலவே அவளது குடும்ப மும் இருந்தது. ஈஸ்டர் முதலிய திரு விழாக்களில் நார்விச்சின் தேவாலய வாசலில் தம் காலடியைப் பதித்த சாமானியர்களில் அவளும் ஒருத்தியாக இருந்தாள்.

ஆனால், அவள் பிறந்து எழுநூறு ஆண்டுகளுக்குப் பின், இன்றும் நார் விச்சில் காணப்படும் புனித ஜூலியன் தேவாலய வாசலில், அவளே ஓர் அழகுச் சிலையாக நின்று கொண்டி ருக்கிறாள். **'ஜூலியன் ஆப் நார்விச்'** (Julian of Norwich) என்று,

அத்தேவாலயத்தின் பெயராலேயே தனக்கு மறுபெயர் சூட்டிக் கொண் டவளின் இயற்பெயரை, இன்றும் ஆங்கில இலக்கிய உலகம் தேடிக் கொண்டிருக்கிறது.

ஆறு வயதே நிரம்பிய ஒரு சிறுமி யாக, தன் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நாள்களில், சாலை களில் அடுக்கடுக்காய்ச் சடலங்களைச் சுமந்து சென்ற வண்டிகளின் சப்தத் தையும், அக்காட்சிகளைக் காணச் சகியாது, இறந்தோரின் உறவுகள் எழுப்பிய ஓலங்களையும் ஜூலியன் கேட்டிருக்கக் கூடும். நார்விச் நகரின் அன்றைய மக்கள் தொகையான 12,000 பேர்களில் 7000 பேர்களின் உயி ரைக் குடித்துத் தீர்த்திருந்தது பிளேக் நோய்.

ஜூலியனின் இளமைப் பருவம் குறித்து மேலதிகத் தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என்றாலும், அவளுக்குத் திருமணம் ஆகிக் குழந்தைகள் இருந் திருக்க வேண்டும். நகரத்தை வேட்டையாடிய அக் கொள்ளை நோய்க்குத் தனது குடும்ப உறுப்பினர்களும் பலியாகியிருக்க வேண்டும் என்று கணிக்கிறார்கள் ஆங்கில இலக்கிய வரலாற்றாளர்கள்.

ஆணாதிக்கச் சமூகத்தின் நுகர்வுப் பண்டமாய், முதலில் தந்தைக்கு மகளென்றும், பிறகு கணவனுக்கு மனைவியென்றும், ஓர் ஆணிட மிருந்து இன்னோர் ஆணைச் சென்ற டைவது மட்டுமே பெண்ணின் நிலை யாய் இருந்த மத்தியகால இங்கி லாந்தில், பெண்கள் பன்னிரண்டு வயதை எட்டியவுடனேயே மணம் முடித்துத் தரப்பட்டார்கள். அவ் வாறே ஜூலியனுக்கும் திருமணம் நடந்திருக்கக் கூடும். புனித ஜூலியன் தேவாலயத்தில் துறவியாய் இறைப் பணி செய்து கொண்டிருந்த அவள், தனது முப்பதாவது வயதில் மரணப் படுக்கையில் விழுந்தாள்.

நோய்கண்ட நான்காம் நாள், அவள் நிச்சயம் இறந்துவிடக் கூடும் என்ற எதிர்பார்ப்பில், அவளுக்கு இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன. அவளது படுக்கைக்கு அருகில் நின்றி ருந்த மதகுரு, சிலுவையில் அறையப் பட்ட யேசுநாதரின் உருவம் ஒன்றை அவள் விழிகளின் முன் காட்டியபடி ஜெபித்துக் கொண்டிருந்தார். ஆனால் ஜூலியன் இறக்கவில்லை. தான் கண்ட அவ்வுருவத்தின் வழியே அவள் தேவகுமாரனையே கண்டாள்.

மனித குலத்திற்காகப் பெருந்துயர் ஏந்திய மரியன்னையின் மகனை,

ஜூலியன் ஒரு தாயாகக் கண்டாள். கருணையே உருவான ஆண் வடிவு கொண்ட தாய், ஜூலியனிடத்தில் உரையாடினாள். அன்று உயிர் துறந் திருக்க வேண்டிய ஜூலியன் உயிர் பிழைத்த பிறகும் இறந்துபோனாள். ஆனால் அந்த இறப்பு, அவள் இவ் வுலகத்தின் மீது கொண்டிருந்த தொடர்பைத் துண்டித்துக் கொண்ட இறப்பு மட்டுமே.

அன்றிலிருந்து Anchoress எனப் படும் ஒரு தனிமைப் பெண் துறவி யாய் இறைப் பணியேற்று, நார்விச் தேவாலயத்தை ஒட்டியிருந்த ஒரு

சிற்றறைக்குள் தன்னை அடைத்துக் கொண்டாள்.

இனி, தனது வாழ்வின் மீதத்தைத் தாழிடப்பட்ட அச்சிறிய அறைக்குள்ளேயே அவள் வாழ்ந்து முடிக்க வேண்டும். தன் பணியாளிடம் இருந்து உணவைப் பெறுவதற்கு ஒரு சன்னலும், தேவாலயத்தில் நிகழும் திருப்பலியில் பங்குகொள்ள இன்னொரு சன்னலும், நகரத்தின் சாலையில் பயணிப்போர், சில நிமிடங்கள் நின்று, அவளிடம் ஆலோசனைகளையும் அருளாசிகளையும் பெறக் கறுப்பு நிறத்தில் திரையிடப்பட்ட மற்றொரு சன்னலும் அச்சிறிய அறையில் இருந்தன.

முன்பொருநாள் மரணப் படுக்கையில் கிடந்தபோது, தன்னுடன் தேவகுமாரன் உரையாடிய இறைநிலை அனுபவத்தை, இச்சிறிய அறைக்குள் இருந்துதான் முப்பது ஆண்டுகளாய் அசைபோட்டு அவள் எழுதி வைத்தாள். அதுவே Revelations of Divine Love (தெய்வீக அன்பின் அருள் வெளிப்பாடு) என்று ஆங்கில இலக்கிய வரலாற்றில் ஒரு பெண்ணால் எழுதப்பட்ட முதல் இலக்கியப் படைப்பானது.

இங்கிலாந்தில் மாறிவந்த அரசியல் சமூகச் சூழலில் கணக்கற்ற துறவி மடங்கள் அழிக்கப்பட்டன. The English Reformation என்ற வரலாற்றுப் பக்கமொன்றில், ரோமாபுரியின் கத்தோலிக்கத் திருச்சபையுடன் தான் கொண்டிருந்த நெடுங்கால உறவைத் துண்டித்துக் கொண்டது இங்கிலாந்து. ப்ராட்டஸ்டண்ட்ஸ் (Protestants) என்ற கத்தோலிக்கச் திருச்சபை எதிர்ப்பியக்கம் ஜூலியனைப் போன்ற துறவிகள் பதிவுசெய்து வைத்திருந்த தெய்வீக மனக்காட்சிகளைச் சந்தேகித்தது.

கத்தோலிக்கத் திருச்சபையாரின் துறவு வாழ்க்கை கடவுளுக்கே எதிரானதென்று அறிவித்த இங்கிலாந்தின் புதிய அரசு, கணக்கற்ற துறவி மடங்களை இடித்தும், அவ்விடங்களைப் பெருஞ் செல்வந்தர்களுக்கு விற்றும் வந்தது. கத்தோலிக்கத் துறவிமார்களின் இறையியல் இலக்கியங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. ஆனாலும் ஜூலியனின் Revelations of the Divine Love இந்த அபாயங்களிலிருந்து தப்பித்தது.

1373–இல் எழுதப்பட்டு 1901–இல் அச்சாக்கம் பெற்றது ஜூலியனின் Revelations of the Divine Love. மேற்சொன்ன இவ்விரண்டு எண்களுக்கிடையே இருந்தவை 528 ஆண்டுகள். கத்தோலிக்கத் திருச்சபையின் கண்களுக்கும், ப்ராட்டஸ்டண்ட்டுகளின் நெருப்பிற்கும் தப்பிய இப்பிரதி யாரிடம் தஞ்சம் அடைந்திருக்கும்? இவ்வைந்து நூற்றாண்டுகளில் எவர் கைகளில் இருந்து எவர் கைகளுக்கு இப்பிரதி மாறியிருக்கும்? என்ற கேள்விகளுக்குள் நுழையும் முன், ஜூலியனின் Revelations of the Divine Love-இல் இருந்து ஒரு காட்சி.

தன் உள்ளங்கையில் சிறு பந்தைப் போல் தோன்றிய ஒரு கொட்டையைப் (Hazelnut) பார்த்து வியந்தாள் ஜூலியன்.

"எத்துணைக் காலம்
இது உயிர்வாழும்?
சிறியதாக இருப்பதால்
சீக்கிரமே இது
ஒன்றுமிலாப் பொருளாகிவிடுமே?"

ஜூலியனின் கேள்விக்குக் கடவுள் பதில் சொன்னார்...

"இல்லை, அது எப்போதும்
இருந்துகொண்டே இருக்கிறது
அது இருக்கவும் வேண்டும்"

ஜூலியனின் உள்ளங்கையில் உருண்டையாய்த் தென்பட்ட அச்சிறு கொட்டை, இப்பூமியைத் தவிர வேறெதுவாக இருந்திருக்க முடியும்? ●

விவாதம்

இலவச மின்சாரத்தை ரத்து செய்யலாமா? கூடாதா?

இந்தியாவில் பிரதமர் மோடி தலைமையி லான மத்திய அரசு, 8 கோடி ஏழைகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புத் தந் துள்ளது. 20 கோடி ஏழைப் பெண்களுக்கு ரூ. 500 வீதம் ரூ. 10 ஆயிரம் கோடி அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. 6 லட்சம் கிராமங்களில் 9 கோடி குடும்பங்களுக்கு இலவசக் கழிப்பறைகளைக் கட்டித்தந்துள்ளது.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில், 2 கோடி வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. 50 கோடிப்பேரை உள்ளடக்கிய 10 கோடிக் குடும்பங்களுக்கு, குடும் பத்திற்கு ஆண்டுக்கு ரூ. 5 லட்சம் மருத்துவக் காப்பீட்டை மோடி அரசு வழங்கியுள்ளது. அனைத்து விவசாயிகளுக்கும் ரூ. 6 ஆயிரத்தை வங்கிக் கணக்கில் செலுத்தியுள்ளது. இந்தப் பட்டியல் நீளமானது.

இத்தனை இலவசங்களையும் வழங்கிய பாராட்டுதலுக்குரிய மோடி அரசு, திடீரென்று சென்ற மாதம், 5 மாநிலங்களில் உள்ள விவசாயி களுக்கான இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் மசோதாவைத் தாக்கல் செய்துள்ளது.

இந்தியாவில் உள்ள 36 மாநிலங்களில் பஞ்சாப், ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு முதலிய 5 மாநிலங்களில்தான் விவ சாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இலவச மின்சாரம் தரப்படுவதற்கான காரணம், குறிப்பாகத் தமிழகத்தில் மிகவும் நியாயமானது.

தமிழ்நாட்டில் காவிரிப் படுகையிலுள்ள விவசாயப் பூமிகள்தான் தமிழகத்தின் உணவுக் களஞ்சியமாகும். திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை முதலிய 12 மாவட்டங்களிலுள்ள 16 லட்சம் ஏக்கர் பூமிகளில் விளையும் நெற்பயிர்தான், உணவுக்கு நமக்கு உதவுகின்றன. காவிரி நதி இப்பகுதியில் ஏறக் குறைய 600 கி.மீ. தூரம் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கிறது.

காவிரி நதியின் நீர்ப்பாசனத்தைப் பயன் படுத்துகிற விவசாயிகள், வாய்க்கால் பாசன நீரையே பாய்ச்சுகிறார்கள். இது இயற்கை வழங்கிய அனுகூலம்.

இதேபோல, மற்ற மாவட்டங்களில் நெல், கரும்பு, தானியங்களைப் பயிரிடும் விவசாயி களுக்கு வாய்க்கால் பாசன அனுகூலம் இல்லை. பாசன நீருக்கு அவர்கள் நிலத்தடி நீரைத்தான் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

நிலத்தடி நீர் பூமி மட்டத்திற்குக் கீழே 1000 – 1500 அடி ஆழத்தில்தான் உள்ளது. அந்த நீரை மேலே கொண்டுவர வேண்டுமானால், மோட்டார் பம்ப் செட் தேவை. சில இடங்களில் ஒரு பம்ப் செட் போதாது. 2 பம்ப்செட் வேண்டும். பம்ப் செட்

வேலை செய்ய வேண்டுமானால், அதற்கு மின் சாரம் தேவை. இல்லையென்றால் டீசல் தேவை.

மின்சாரத்தில் அவற்றை இயக்கினால் மின் சாரச் செலவு அதிகமாகும். அவர்களுக்கு அது கட்டுப்படியாகாது. காவிரிப்படுகையில் அனு கூலத்தைப் பெற்றுள்ள விவசாயிகளுக்குச் சம மாக, பிற மாவட்ட விவசாயிகளுக்கும் அனுகூலம் செய்ய வேண்டுமானால், நிலத்தடி நீருக்கான மின்சாரத்தை இலவசமாக வழங்குவதுதான் சமத்துவமாகும்.

அதனால்தான், தமிழ்நாட்டில் 1984–ஆம் ஆண்டு, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை அறிவித்தார். அதன் பின்னர் 1989–இல் கலைஞர் அனைத்து விவசாயிகளுக் குமே இலவச மின்சாரத்தை அறிவித்தார்.

தமிழகத்தில் 24 லட்சம் பம்ப்செட்களுக்கும், குடிசைகள் 11 லட்சத்திற்கும், 2 கோடி ஏழை களுக்கும் இலவச மின்சாரம் 100 யூனிட்டும், 78 ஆயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயத்திற்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தால், நிலத்தடி நீர்ப்பாசனம் செய்யப்பட்டு உணவு உற்பத்தியும், வேலை வாய்ப்பும் அதிகரித் திருப்பதாகக் கூறப்படுகிறது.

இலவச மின்சாரத்தால், மின்வாரியத்திற்கு ஆண்டு நஷ்டம் 1 லட்சத்து 25 ஆயிரம் கோடி யாகும்.

எத்தனையோ இலவசங்களை அறிவித்துள்ள மத்திய அரசு, இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டுமென்று ஒரு மசோதாவைத் தயாரித்திருக் கிறது என்றால், அதன் நோக்கம் என்ன?

விவசாயிகளுக்கு இரு மடங்கு வரு மானத்தை பி.ஜே.பி. ஆட்சி உருவாக்கும் என்ற மோடி அரசு, விவசாயிகளின் – குறிப்பாகத் தமிழ் நாடு மற்றும் சில மாநில விவசாயிகள்மீது – இலவச மின்சாரத்தை ஏன் ரத்து செய்யச் சொல் கிறது?

இது சம்பந்தமாகத் திரட்டப்பட்ட தகவல்படி, இலவசமாக 24 மணி நேரமும் மின்சாரம் தரப் படுவதால், நிலத்தடி நீரை எவ்விதப் பொறுப்புமில் லாமல் உறிஞ்சி எடுத்துவிடுகிறார்கள். இதன் காரணமாக அதிக மின்சாரம் உபயோகப்படுத்தப் படுகிறது. நிலத்தடி நீரும் அதிகமாக வீணாகிறது.

அதனால், விவசாயிகளுக்கு மத்தியில் பொறுப்புணர்ச்சி உண்டாக்க வேண்டும் என்பதற் காக, விவசாயிகள் உபயோகிக்கும் இலவச மின் சாரத்தை மீட்டர் பொருத்திக் கணக்கிட்டு விடலாம். அப்படிச் செய்து, விவசாயிகள் உப யோகப் படுத்துகிற மின்சாரக் கட்டணத்தைக் கணக்கிட்டு, அவர்களுடைய வங்கிக் கணக்கில் அதைச் செலுத்திவிட்டால், விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படாது. இலவச மின்சாரத்தை வசதி யான விவசாயிகளுக்கும் வழங்குவது தவிர்க்கப் படவும் வேண்டும். இவ்வாறு செய்தால், நிலத்தடி நீரும் அளவாகவே பயன்படுத்தப்படும், மின் வாரியத்தின் நட்டமும் குறையும்.

இதற்கான மத்திய அரசின் மசோதா, இலவச மின்சாரம் தரும் மாநில அரசுகள் இந்த ஆண்டு இறுதிக்குள் அதனை ரத்து செய்துவிட்டு, அக் கட்டணத்தை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் செலுத்திவிடுமாறு கூறுகிறது.

இலவச மின்சாரத்தை ரத்து செய்கிற மாநில அரசுகள், ரிசர்வ் வங்கியில் கடன் வாங்கும் தங்கள் கடன் தொகை வரம்பை அதிகரித்துத் தரவும் மத்திய அரசு தயாராக இருக்கிறது என்று விவசாயிகளைக் கவருமாறும் அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால்தான் இது சட்டமாக முடியும். சட்டமாகாத நிலையில் இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

கொரோனாச் சூழலில், இதைப்பற்றிய நட வடிக்கையை எடுத்திருக்க வேண்டியதில்லை. இது இதற்கான சரியான தருணம் அல்ல.

இலவச மின்சாரத்தை ரத்து செய்வதற்கு எதிராகக் காவிரிப் படுகையில் உள்ள வாய்க்கால் பாசன விவசாயிகள், எந்தக் கருத்தையும் சொல்ல வில்லை. பாதிக்கப்படுகிற பிற மாவட்ட விவ சாயிகள்தான் எதிர்க்கின்றனர்.

இலவச மின்சாரம் ரத்து செய்யப்படுமானால், அவர்கள் விவசாயத்தைவிட்டே வெளியேற வேண்டியதாகிவிடும் என்கிறார்கள். மாற்றுத் தொழிலாக தறி, பனியன் கம்பெனி, கோழிப் பண்ணை, முயல் வளர்ப்பு முதலியவற்றில்தான் அவர்கள் ஈடுபட வேண்டி வரும்.

அவர்களின் விவசாயப் பூமிகளிலுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் 1000 அடிக்குக் கீழே போனால்தான் தண்ணீர் கிடைக்கும். அதுவும் 7 எச்.பி. மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்தால், 1/4 ஏக்கருக்குத்தான் தண்ணீர் பாய்ச்ச முடியும். அதற்காக 20 மணி நேரம் அந்தப் பம்ப்செட் வேலை செய்ய வேண்டியிருக்கும். இதற்கான மின்சாரச் செலவைக் கணக்கிட்டால், தங்கள் பூமியை விற்றுத்தான் மின்சாரக் கட்டணத்தை விவசாயிகள் கட்டவேண்டி வரும். இது ஓர் உதாரணம் மட்டுமே.

எம்.ஜி.ஆர்.

அப்படியானால், மத்திய அரசு எதற்காக இந்தச் சிக்கலான பிரச்சனையை இப்போது உருவாக்கியிருக்கிறது என்பது புரியவில்லை.

ஹைட்ரோ கார்பன் குழாய் பதிப்பது, கொச்சியிலிருந்து பெங்களூருக்குச் சமையல் எரிவாயுக்குழாய் கொண்டு செல்வது, நியூட்ரினோ திட்டத்தை நிறைவேற்றுவது போன்ற திட்டங்களை மத்திய அரசு அமல்படுத்துமானால், அவற்றை பற்றிச் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்குப் பாதிப்பு வராது என நம்பிக்கையூட்டி நிறைவேற்றுமானால், மத்திய அரசு மீது நிச்சயம் எதிர்ப்பு ஏற்படாது. இந்த வழிமுறையை மத்திய அரசு ஏனோ வழக்கமாகவே பின்பற்றுவதில்லை.

உதாரணமாக, சேலத்தில் 8 வழிச்சாலைத் திட்டம் நிறைவேறினால் சென்னை செல்வதற்குரிய தூரம் 230 கி.மீ. குறைகிறது. அந்தச் சாலையைப் பயன்படுத்தும் லாரி, கார் முதலிய ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒவ்வொரு முறையும் அத்தூரம் குறையும். போய்விட்டுத் திரும்புவதென்றால், 460 கி.மீ. தூரம் குறையும். இதற்கான பெட்ரோல், டீசல் செலவு குறையும். வாகனத்தின் தேய்மானம் தவிர்க்கப்படும். சாலைப் போக்குவரத்தில் நெரிசல் ஏற்படாது. சாலை விபத்துக்கள் மிகமிகக் குறையும்.


கலைஞர்

இந்த அனுகூலங்களைப்போல இதனால் ஏற்படும் பாதிப்புகளும் அனுகூலத்திற்குச் சமமாக இருப்பதையும் கவனிக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான காட்டு மரங்களை வெட்ட வேண்டியுள்ளது. சில ஆயிரம் ஏக்கர் விவசாயப் பூமிகள் பாதிக்கப்படும். அந்த விவசாயிகளுக்கு மாற்று ஏற்பாடாகப் புதிய விவசாயப் பூமியோ, ரொக்கமோ இழப்புக்கு ஈடாகத் தரப்படும் எனப் பேசப்படுவதில்லை. இதனால்தான் சம்பந்தப்பட்ட அந்த வட்டாரத்து விவசாயிகள் இதுபோன்ற திட்டங்களை எதிர்க்கிறார்கள்.

உண்மையில் சாலைகள் அதிகமாகவும், சிறப்பானதாவும் இருந்தால்தான் வாகனப் போக்குவரத்து ஏற்பட முடியும். பொருளாதார வளர்ச்சி துரிதமாகவும், அதிகமாகவும் இருக்கும். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சியில் போடப்பட்ட தங்க நாற்கரச்சாலை இதற்குச் சாட்சியாக உள்ளதைப் பலரும் அறிவர்.

இப்போது நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் இலவச மின்சாரத்துத் திட்டத்திற்குத் தமிழ்நாடு போல அதிக எதிர்ப்பு பஞ்சாபில் இல்லை. தெலுங்கானா, கர்நாடகம், ஆந்திராவில்கூட அவ்வளவு எதிர்ப்பு இல்லை. ஆனால், தமிழ்நாட்டில்

உள்ளது. இந்த ரத்தினைத் தமிழ்நாட்டு விவசாயிகள் எதிர்ப்பதற் கான விசேஷக் காரணங்களும் உள்ளதை மறந்து விடக்கூடாது.

இந்த 2020 ஆண்டு முடிவதற்கு 6 மாதங்கள் தான் உள்ளன. 2021 மே மாதம் தமிழக சட்டப் பேரவைக்குத் தேர்தல் நடக்க உள்ளது. தேர் தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ளன. இப் போதுள்ள மாநில ஆட்சி, மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவால் உருவாக்கப்பட்ட ஆட்சி. அந்த ஆட்சியே ஒவ்வொரு முறையும் சிக்கலுக்கு உட் பட்டுத்தான் தப்பித்து மீள்கிறது.

மனப்பூர்வமாகச் சொல்ல வேண்டுமென்றால், முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், ஏராள மான மக்கள்நலத் திட்டங்களைத் தாமதமில்லா மலும் தக்க முறையிலும் நிறைவேற்றிக்கொண்டே வருகிறார். குடி மராமத்து, மேம்பாலம் கட்டுதல், சாலை விரிவாக்கம், கொள்ளிட அணை புதுப் பித்தல், வேளாண் மண்டலங்கள் உருவாக்குதல், தொழில்துறையில் ரூ. 15 ஆயிரம் கோடிக்கான மூலதனத்தைத் திரட்டுதல், ஏழை மக்களுக்கான இலவச அரிசி வழங்குதல், குடும்ப அட்டை தாரருக்கு ரூ. 1000 இலவசமாக வழங்குதல் இப் படிப் பலவற்றைக் கூறலாம்.

இவற்றையெல்லாம்விட, மத்திய அரசிடம் சாதுர்யமாகப் பேசி ஒரே ஆண்டில் தமிழ்நாட்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கவுள்ளார். இன்னும் 10 மாதங்களில் சட்டப்பேரவைத் தேர் தலை ஆளும் கட்சி சந்திக்க உள்ளது.

எதிர்க்கட்சியோ, போராட்டங்களை அறிவிக் கிறது. கூட்டணியும் அமைத்துத் தற்போதுள்ள ஆளும் ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்பதற் காக, சுய பலத்தை நம்பாமல், மக்கள் அபி மானத்தை நம்பாமல் பீகாரில் புகழ்பெற்ற தேர்தல் ராஜதந்திரி, பிரசாந்த் கிஷோர் என்பவரைச் சம்பளத்திற்கு அமர்த்தி, வெற்றிக்கான வியூகம் அமைத்துத் தருமாறு கேட்டுள்ளது என்றால், ஆளும் கட்சி எச்சரிக்கையாகத்தானே இருக்க வேண்டியுள்ளது.

இலவச மின்சாரத்தை மாநில அரசு மத்திய அரசின் கவர்ச்சிக்குப் பலியாகி ரத்து செய் வதற்குச் சம்மதிக்குமானால், ஆளும் கட்சியை வீழ்த்த எதிர்க்கட்சிக்கு இதைவிட ஒரு நல்ல ஆயுதம் தேவையில்லாமல் போய்விடும்.

ஆகவே, இந்தக் கொரோனா தருணத்தில் வரப்போகும் தேர்தலையும் மனதில் வைத்துக் கொண்டுதான் ஆளும் கட்சி அடியெடுத்து வைக்க வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சியோ உரிய ராஜதந்திரியின் மூலமாக வியூகம் அமைத்து ஆளும்கட்சியைத் தோற்கடிக்கத் திட்டமிடுகிறது.

இந்தச் சூழ்நிலையில், சட்டமாகி நடை முறைக்கு இன்னும் வராத இலவச மின்சாரத்தின் ரத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதை, முறியடிக்க வேண்டிய பணி ஆளும் கட்சியினுடையதாகியுள்ளது.

இந்தப் பின்புலத்தில் வாசகர்களகிய நீங்கள், தற்போதைய ஆளும் கட்சி இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டுமா அல்லது கூடாதா என்பதைப் பற்றி என்ன எண்ணுகிறீர்களோ, அதை எழுதுங்கள் ஜூலை 15–க்குள்.

– பி.சி.

டாக்டர் புலவர் மணியன் மறைந்தார்

புலவர் மணியன் கோவையில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். தமிழ் மொழியில் சிறப்பான புலமை உள்ளவர். குறிப்பாக, சொல்லாராய்ச்சியில் அவரை வெல்ல வெகு சிலரால்தான் முடியும். அரசுப் பள்ளி ஆசிரியராக ஓய்வுபெற்ற பிறகு, பெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகருக்குக் கோவையில் விழா எடுக்க அருட்செல்வரைச் சந்திக்க வந்தார். அதுமுதல் அருட் செல்வரின் அன்புக்குப் பாத்திரமானார்.

அருட்செல்வரின் விருப்பப்படி திருவருட்பா, பன்னிரு திருமுறைகளில் ஒன்பது, பத்து, பதினொன் றாம் திருமுறைகளுக்குச் சிறப்புச் சொல்லகராதிகளைத் தயாரித்தார். அதற்கு வேண்டிய சகல உதவிகளையும் அருட்செல்வர் செய்தார். அந்தப் பணியைப் பாராட்டி, கோவை கற்பகம் பல்கலைக்கழகத்திற்கு இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப் பரிந்துரை செய்தார். அதன்படி கற்பகம் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

15.6.2020 அன்று புலவர் மணியன் தமது 85–ஆவது வயதில் நம்மைவிட்டுப் பிரிந்தது வேர்ச்சொல் அகராதி ஆராய்ச்சிக்கு ஈடு செய்ய முடியாத இழப் பாகும். அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருட்பெருஞ்சோதி ஆண்டவரைப் பிரார்த்திக்கிறோம்.

– இ.ஆர்.

அட்டைப்பட விளக்கம்

கொல்லத்தில் கொரோனா தேவி கோவில்

100 ஆண்டுகளுக்கு முன்பு 'பிளேக்' என்ற கொள்ளை நோய் மக்களைக் கொத்துக் கொத்தாகச் சாகடித்தது. அதற்குரிய மருந்து கண்டு பிடிக்கப்பட்ட பின்னர்தான் அதை ஒழிக்க முடிந்தது. அதுவரை பயந்து போன பொதுமக்கள், தங்கள் ஊர் களையே காலி செய்துவிட்டு, ஊருக்கு வெளியே கூடாரங்கள் போட்டுத் தங்கினார்கள்.

இதேபோல, இப்போது நம்மைப் பலிகொண்டுவரும் கொரோனா வைரஸ் கிருமி, நமது நாட்டில் மட்டு மல்லாது, உலகத்தில் வளர்ந்த நாடு களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி முதலிய 193 நாடு களுக்கும் பரவிவிட்டது. இதுவரை சுமார் 80 லட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு சுமார் 5 லட்சம் பேர் மரணமடையவும் நேரிட்டுள்ளது.

சீனாவில் வூகான் நகரத் திலிருந்துதான் இது உருவானதாகச் சீனாவே ஒப்புக் கொண்டது. தானாகவே உருவான வைரஸ் இது என்பது சீனாவின் வாதம். ஆனால், அமெரிக்காவோ, இந்தக் கிருமியைச் சீனா தனது உயிரி ஆய்வகத்திலிருந்து உருவாக்கியதே தவிர, தானாகவே இது உருவாகவில்லை எனக் குற்றம் சாட்டியது.

இதற்கான தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. யூகத்தின் மூலம் சில மருந்து, மாத்திரைகள் தரப் படுகின்றன. ஆனாலும், கொரோனா வைத் தடுக்க முடியவில்லை.

தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 500 பேர் கடந்த 4 மாதங்களில் மரண மடைந்துள்ளனர். இந்தியாவில் சுமார் 9500 பேர் இதுவரை மரணம்.

இந்தியாவில் மும்பை நகரம் இப்பாதிப்பில் முதலிடத்தில் உள்ளது. அடுத்து குஜராத். மூன்றாவதாக டில்லி. நான்காவதாகத் தமிழ்நாடு – குறிப்பாகச் சென்னை மாநகரம். இப்படியே இந்நோய் பரவுமானால், கோடிக்கணக்கானவர்கள் சாக நேரலாம். இந்த எண்ணமே நமக்குப் பீதியை உண்டாக்கி, நம்மை முடக்கி வருகிறது.

முகக்கவசம் அணிதல், கைகளைச் சோப்புப் போட்டு அடிக்கடி கழுவு தல், சமூக இடைவெளி விட்டு நிற்பது, கூட்டங்களுக்குள் செல்லாமல் தவிர்ப் பது, விழித்திரு – தனித்திரு – வீட்டி லேயே இரு எனத் தமிழக முதலமைச் சர் ஒரு சொற்றொடரையே உருவாக்கி விட்டார்.

இப்படிப் பல்வேறு நடவடிக்கை ககளைத் தமிழக அரசு எடுத்தபோதி லும், பாதிப்புகள் – சாவுகள் குறைவ தாகத் தெரியவில்லை. நோயின் தாக்கத்தின் கேடுகளைத் தாண்டி, சமூகத் தளத்தில் இந்தத் தொற்று நோய் ஏற்படுத்தி இருக்கும் சேதங்கள் பெருத்த நாசங்களை ஏற்படுத்தி யுள்ளது.

தமிழ்நாட்டில் கட்டுமானப் பணி கள், சாலைப்பணிகள், வார்ப்பகங் களின் வேலைகள், கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல், உணவு விடுதியில் வேலைகள் எனப் பல்வேறு பணி களைச் செய்து வந்தவர்கள் வட மாநிலத் தொழிலாளர்கள். உத்தரப் பிரதேசம், பீகார், ஒடிசா, மே. வங் காளம், அஸ்ஸாம், ஜார்க்கண்ட் முத லிய மாநிலங்களில் வேலை வாய்ப்புகள் மிகவும் குறைவு. தினக் கூலியும் குறைவு. அதனால், அம் மாநிலங்களிலிருந்து லட்சக்கணக்கான இளம் வயதுத் தொழிலாளர்கள் தென் மாநிலங்களுக்கு வந்து வேலை செய்து வந்தனர்.

கொரோனாவால் தொழிற் சாலைகள் முடக்கப்பட்டதால், அவர்களுக்கு வேலை இல்லை. அத னால் ஊதியம் இல்லை. அதனால் உணவு இல்லை. ஒருவர், இருவர் அல்ல. திருப்பூரில் மட்டும் ஏறத்தாழ 4 லட்சம் பேர் வேலை இழந்தனர். வருமானம் இல்லை.

தமிழ்நாட்டின் பல ஊர்களில் கட்டுமான வேலைகள் கடந்த 4 மாதங்களாக நடக்கவில்லை. அவர் களுக்கு வேலை இல்லாத காரணத் தால், சம்பாதிக்க முடியவில்லை.

இவர்கள் எல்லாம் வட மாநிலங் களிலிருந்து இங்கே வந்து சம்பாதித்து ஊரில் உள்ள குடும்பத்தாரைக் காப் பாற்றி வந்தவர்கள். உதாரணமாக, உத்தரப்பிரதேசத்தில் லக்னோவில் தச்சு வேலைக்காரர் ஒருவருக்கு தினக்கூலி ரூ. 300. அதே தச்சு வேலைக்குத் தமிழ்நாட்டில் கூலி ரூ. 900. அதுவும் வாரத்தில் 7 நாட் களுக்கும் வேலை கிடைத்தது.

இதன் காரணமாகத்தான் வட மாநில நகரங்களிலிருந்து பிழைக்க இவர்கள் இங்கே வந்தார்கள்.

அவர்களுக்கு அவர்களுடைய தாய்மொழிகளான வங்காளம், இந்தி, பீகாரி, மராத்தி, அஸ்ஸாமிதான் தெரி யும். காலத்தின் கட்டாயத்தினால் தமிழை அரைகுறையாகப் பேசப் பழகிக்கொண்டு வேலை செய்து வந்தனர். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று 1960–களில் நமது அரசியல் கட்சிகள் ஆரவாரமாகப் பேசி வந்தன. 2000ங்களில் நிலைமை தலைகீழாக மாறி, வடக்கும் வாழ வில்லை, தெற்கும் தேயவில்லை என்ற நிலைமை உருவாகிவிட்டது.

கொரோனா நோயால் வேலை யைப் பறிகொடுத்த இவர்களை, அவர்கள் வேலை செய்து வந்த தொழில் நிறுவனங்களே ஊதியமும், உணவும், உறைவிடமும் கொடுத்துப் பராமரித்திருந்தால், நமக்கும் சரி, அவர்களுக்கும் சரி பெரிய வீழ்ச்சி யைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், நமது தொழிற்சாலைகள் வேலை இழந்த அவர்களுக்கு ஊதியம் தர மறுத்துவிட்டன. அவர்களுக்கு உணவோ, தங்குமிடமோ உத்தரவாதப் படுத்தப்படவில்லை.

அதனால், அவர்கள் வடமாநிலங் களில் உள்ள தங்களின் சொந்தக் கிராமங்களுக்கு ஆயிரக்கணக்கான கி.மீ. தொலைவை நடந்தே கடந் தார்கள். சைக்கிளில் சென்றவர்கள் உண்டு. அப்பயணங்களில் ரயில் தண்டவாளங்களில் தலைவைத்துப் படுத்து 16 பேர் பலியானார்கள். வழி யிலேயே மயங்கி விழுந்து மாண்ட வர்கள் பலர். குழந்தைகள், முதிய வர்கள் தட்டுமுட்டுச் சாமான்களைத்

தலையில் சுமந்தபடி நெடுஞ்சாலைகளில் அவர்கள் நடந்து போன காட்சிகள் துயரம் மிக்கவை.

இத்துன்பத்திற்குக் காரணம், நமது தொழிற்சாலைகள் அவர்களை நிராகரித்துவிட்டன. அரசு அவர்களைக் காப்பாற்ற எடுத்த நடவடிக்கைகள் ஓரளவிற்குத்தான் உதவின. அவர்களின் துயரங்கள் குறையவில்லை. அதனால்தான் அவர்கள் தூரம், தொலைவில் இருந்த தங்களின் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத ஓர் அதிசயமாக, இந்தியாவில் கடவுளின் தேசம் எனக் கொண்டாடப்படுகிற கேரள மாநிலத்தில் கொல்லம் மாவட்டத்தில் 'கடைக்கால்' எனும் கிராமத்தில் ஒரு தேவியின் கோவில் கட்டப்பட்டுள்ளது. அந்த தேவி யார் தெரியுமா? வேறு யாருமல்ல, நம்மையெல்லாம் கொடுமைப்படுத்தி வருகிற கொரோனாதான் அந்த தேவி.

மற்ற மற்ற சமயங்களில் மக்களுக்குத் தீமை செய்யும் சைத்தானை வழிபடுவதில்லை. அதேபோல ஏசுநாதரைச் சித்திரவதைப்படுத்திய கொடியவர்களை வழிபடுவதில்லை. ஆனால், இந்து மதத்தில் ஓர் அணுகுமுறை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்துள்ளது. யார் நமக்குத் தீமை செய்கிறார்களோ, அவர்கள்மீதே அன்பு செலுத்தி அவர்களை நம்மவர்களாக்குவது ஒரு நடைமுறை.

இன்னா செய்தாரை ஒறுத்தல் என்ற தீமை செய்தவரை அழிப்பது என்பது அவர்களை அழிப்பதல்ல, அவர்களுடைய தீய குணங்களை அழிப்பது. அழித்து, அவர்களைப் பிழைக்க விடுவது. அப்படிப் பிழைத்தவர்கள் தீமை செய்ததற்காக வெட்கப்படுவார்கள் என்பதுதான் திருவள்ளுவரின் கருத்து.

இதே அடிப்படையில் தெய்வங்களுக்கு மத்தியில்கூட நலம் செய்கிற தெய்வங்களும் உண்டு. தீமை செய்கிற ராட்சசர்களும் உண்டு. தீமை செய்தவர்களுக்குத் திருப்பித் தீமை செய்யாமல் அவர்களை வணங்குவது, அவர்களுடைய வாழ்த்துக்களைப் பெறுவது, அவர்களைக் கொண்டாடுவது என்று முன்வந்துவிட்டால், எதிரியே நமக்குப் பலம் தரக்கூடியவனாக மாறிவிடுவான்.

நமது புராணங்களில் இதுபோன்ற கதைகள் உண்டு. முருகப்பெருமான் சூரபத்மனை அழிப்பதற்குப் பதிலாக, அவனையும் பக்தர்கள் வணங்குமாறு சேவலாக மாற்றிய புராணக்கதை உண்டு.

இவ்வாறு நமது மரபு அமைந்திருப்பதால், பிளேக் நோயை ஒழிப்பதற்கு 'பிளேக் மாரியம்மன்' என்றே தேவியை வழிபட்டோம். அதேபோல இப்போது கொரோனாவையே ஒரு தேவியாக வழிபட்டு அவளுடைய ஆத்திரத்தை, கோபத்தை, கொடுமையை மடைமாற்றி நம்மீது அருள் பாலிக்குமாறு, அவளுக்காகக் கேரள கிராமத்தில் கோவில் கட்டிப் பூசை செய்கிற ஒரு காட்சியைச் சமூக ஊடகங்களும், பத்திரிகை ஊடகங்களும் வெளியிட்டுள்ளன.

கடவுள் இதுபோன்ற வைரஸ் கிருமிகளுக்குள்ளும் வியாபித்திருக்கிறார். ஆகவே, அந்தக் கிருமியை வழிபடுவது அதற்குள் வசிக்கும் தேவியை வழிபடுவதாகவே ஆகும்.

கொரோனாதேவியின் அர்ச்சனைப் பிரசாதங்களைப் பக்தர்களுக்கு அஞ்சல் வழி மூலமாக அனுப்ப அக்கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அட்டை முகப்பு ஓவியத்தை வரைந்தவர் ஓவியர் ஜீவா.

– ந.நி.

வாசகர்கள் கவனத்திற்கு...

'**கொ**ரோனா' தொற்றுநோய் காரணமாக அச்சகம், போக்கு வரத்து வாகனங்கள் முதலியவற்றிற்கு ஏற்பட்ட பொது முடக்கத் தினால் 'ஓம் சக்தி' மே, ஜூன் இதழ்கள் வெளிவருவதில் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. எனவே, தற்போது ஜூலை மாத இதழ் வெளி வருகிறது. வெளியாகாத இதழ்களுக்கு மாற்றாக, சந்தாதாரர்களுக்கு உரிய ஏற்பாடு செய்யப்படும்.

– இ.ஆர்.

வாசகர் கடிதம்

'ஓம் சக்தி' ஏப்ரல் 2020 இதழ் அட்டைப்படம் "அழகிய தென் ஷீரடி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. ஷீரடி பாபாவின் அருட்காட்சி ஆனந்தத் தைத் தந்தது.

– **ஏ. பாஸ்கர்,** சேலம்.

ஏப்ரல் 2020 'ஓம் சக்தி' இதழில் வெளியாகியிருந்த ஜி.எஸ். லட்சுமண ஐயர் பற்றிய கட்டுரை மனத்தைக் கவர்ந்தது. பெருந்தலைவர் காமராஜர் படையில் கக்கன்கள் மட்டுமல்ல, லட்சுமண ஐயர்களும் உண்டு என்ப தைக் கட்டுரை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தியது.

– **எல். சூரியக்கண்ணு,** மதுரை.

"**அ**ருட்பாவுக்கு வெற்றி" பற்றி மிக நேர்த்தியுடன் குறிஞ்சிமலர் மண மாக ஞான. வைத்தியநாதன் எழுதி யது பாராட்டுக்குரியது.

– **தெ. முருகசாமி,** புதுச்சேரி.

'ஓம் சக்தி' ஏப்ரல் 2020 இதழில் வெளியாகியிருந்த "பொய் சொல்லாத மாணவன்" பொன்னீலனின் சிறு கதை, மாணவர்களுக்கான நீதிக் கதையாக மிளிர்கிறது.

– மு. பாலசுப்பிரமணியன்,
புதுச்சேரி.

"**நீ**தான்", "தா"வரம் எனும் இரு கவிதைகளும் யதார்த்தத்தை வெளிப்படுத்துவனவாக இருந்தன.

– **உஷாமுத்துராமன்,** திருநகர்.

"**சி**த்த மருத்துவத்தின் பார்வை யில் கொரோனா வைரஸ்" கட்டுரை யில், வைரஸ் கிருமிகள் பரவும் விதத்தை நன்கு விளக்கியிருந்தார் டாக்டர் பி. சரவணன்.

– **ராம. பழனியப்பன்,** கோவை.

ஆலயங்களில், அன்னதானத்தை விட ஷீரடி போல ஆரோக்கியம் காக்கும் இலவச மருத்துவமனைகள் செயல்பட வேண்டும் என்பது காலத் திற்கேற்ற கற்கண்டுக் கருத்து!

– **சீத்தலைச்சாத்தன்,** திருப்பத்தூர்.

சொ.சொ.மீ., மரபின்மைந்தன் இரு வரின் தொடர் கட்டுரைகள் ஆன்மிகத் தையும், சிறந்த ஆளுமைகளையும் நினைவுகூர்வனவாக அமைந்துள்ளன.

– **வி.சேகர்,** தருமபுரி.

'ஹம்பியின் கண்ணீர்க் கதை' எனும் கட்டுரை, இஸ்லாமிய ஆதிக் கம் விலகி இந்து சாம்ராஜ்ஜியம் நிலை நிறுத்தப்பட்டது என்பது போன்ற எண்ணற்றத் தகவல்களைப் படிக்கும் போது, உண்மையிலேயே கண்ணீரை வரவழைக்கிறது.

– **சக்திதாசன்,** விருதுநகர்

மகாபாரதத்தில் இஸ்லாமிய நடிகர்கள்

மகாபாரதம் இந்தியாவின் இரண்டு இதிகாசங்களில் ஒன்று. இதிகாசம் என்றால், இவர்கள் இப்படிச் சொன்னார்கள் என்று பொருள். மகாபாரதத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பிரிவினர். பாண்டவர்கள், கௌரவர்கள். இவர்களுக்கிடையே ராஜ்ய பாகப்பிரிவினைப் பிரச்சனை இருந்து வந்தது.

கௌரவர்கள் 100 பேர். துரியோதனன் தலைமை. பாண்டவர்கள் ஐவர். யுதிஷ்டிரன் என்ற தருமன் தலைமை. இரண்டு குழுக்களுக்கிடையே யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் வாசுதேவ கிருஷ்ணன் பாண்டவர்கள் பக்கமும், சகுனி கௌரவர்கள் பக்கமும் இருந்தார்கள்.

அதர்மத்தின் சின்னமாக கௌரவர்களின் துரியோதனன் செயல்பட்டான். தருமத்தின் சின்னமாக தருமனும், பாண்டவர்களும் செயல்பட்டனர். தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் குருக்ஷேத்திரத்தில் யுத்தம் நடந்தது. இதில் தருமம் ஜெயிக்கிறது, அதர்மம் அழிகிறது. இதுதான் மகாபாரதத்தின் சாரம்.

2007–ஆம் ஆண்டு மகாபாரதத்தை வண்ணப்படமாகச் சின்னத் திரையில் சுமார் 3 ஆண்டுகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. பத்தாண்டுகளுக்குப் பிறகு 2020–இல் சென்ற மார்ச் மாதம் மகாபாரதம் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்டது. மறு ஒளிபரப்பை விஜய் டி.வி. தமிழ் வடிவத்தில் ஒளிபரப்புச் செய்தது.

கொரோனா முடக்கத்தின்போது மார்ச் 25 முதல் காலை 11.30 – 1.30 மணி வரை இது ஒளிபரப்பாகி வருகிறது. வீட்டில் முடக்கப்பட்டவர்களுக்கு மகாபாரதம் மறு ஒளிபரப்பு பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், மனித குணங்களை ரசாயனப் பரிசோதனை செய்யப்பட்டதைப்போலக் காட்டப்பட்ட காட்சிகள் நம்மை நல்வழிப்படுத்துவதற்கு நிச்சயமாக உதவும் என்பதில் சந்தேகமில்லை.

மதம் எதுவானாலும், மனிதன் அவனுடைய அடிப்படைக் குணப்படியே நடந்து கொள்கிறான். நல்வழியில் செல்வதைப் போலவே தீய வழியில் செல்வதற்கும் வாய்ப்பிருக்கிறது. இந்தத் தருணம் கொரோனா தொற்றுநோய்த் தருணம். இதனைப் பார்த்த டில்லியிலுள்ள இடதுசாரி அரசியல் தலைவர் ஒருவர், இந்துத்துவாவைப் பரப்புவதற்காகவே மகாபாரதத்தை ஒளிபரப்புவதாகச் சொன்னது ‘ஹிந்து’ பத்திரிகையில் வெளியாகியது.

உண்மையில், மகாபாரதத்தின் மூலம் இந்துத்துவாப் பரப்புரையா என்பது அதைப் பார்த்து ரசித்தவர்கள் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். ஒரு கூடுதல் தகவல் அதற்கு உபயோகப்படலாம்.

மகாபாரதக் கதாபாத்திரங்களாக மிகவும் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்து நடிக்க வைத்திருக்கிறார்கள். மகாபாரதத்தில் குந்தி பாத்திரத்தில் நடித்த சஃபாக் நாஸ் இஸ்லாமியப் பெண். அர்ஜுனன் பாத்திரத்தில் நடித்தவர் ஷஹீர் ஷேக்.

இவர்கள் மதங்கள் வேறுபட்டிருந்தாலும், ஒருவேளை பணத்திற்காகத்தான் நடிக்க வந்ததாகச் சொல்லப்பட்டாலும், அவர்களின் நடிப்பில் சிறப்பான உச்சத்தைத் தொட்டிருக்கிறார்கள்.

இதைவிட ஒரு சிறப்புச் செய்தி, உ.பி.யில் ஒரு கிராமத்தில் வசித்த ரஹி மசூம் ரிஷா என்ற இஸ்லாமியர்தான் மகாபாரதத் திரைக்கதையை எழுதியவர். சோப்ரா அதனைப் படமாக்கினார். கலைப்படைப்பைக் காணுகிறபொழுது, அதை ரசிக்க வேண்டுமே தவிர, அதற்குள் புகுந்து வெறுப்பு அரசியலைப் புகுத்தாமல் பார்த்தால், மகாபாரதத்தை மத நல்லிணக்கத்திற்குப் பயன்படுத்தலாம்.

– ந.நி.

புத்தக மதிப்பீடு







இதயம் தொட்ட இலக்கியவாதிகள்

ஆசிரியர் : விஜயா மு. வேலாயுதம். வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீன தயாளு தெரு, தி. நகர், சென்னை – 17. பக். 224, விலை ரூ. 175. போன் : 044 – 24342810.

பதிப்பாளரும், புத்தக விற்பனையாளரும், சிறந்த வாசிப்பாளருமாகிய கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் மு. வேலாயுதம் அவர்கள், 40 ஆண்டுச் சம்பவங்களைத் தம்முடைய நினைவு அடுக்கிலிருந்து எடுத்து 'அமுதசுரபி' இதழில் தொடராக எழுதியவற்றை நூலாகத் தொகுத்துத் தந்திருக்கிறார். மு.வ., கு. அழகிரிசாமி, கண்ணதாசன், ஜெயகாந்தன், நா. பார்த்தசாரதி, கவிஞர் மீரா, சுஜாதா, கவிக்கோ அப்துல் ரகுமான், அருட்செல்வர் நா. மகாலிங்கம், பழனியப்ப செட்டியார், சக்தி வை. கோவிந்தன் இப்படி எழுத்தாளுமைகளோடு நட்புப் பாராட்டி, பழகிய சம்பவங்களை இலக்கிய நயத்தோடு நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ளவை வாசக அன்பர்களை நிச்சயம் கவரும்.

திருவருட்பா ஆறு திருமுறைகளுக்கான வரலாறும் ஆராய்ச்சிக் குறிப்புகளும்

தொகுப்பாசிரியர் : சிவாலயம் ஜெ. மோகன், வெளியிட்டோர் : சாமி. தியாகராஜன், 8/68, 2–ஆம் தெரு, ஏவி.எம். அவென்யூ, விருகம்பாக்கம், சென்னை – 92. பக். 100, விலை : குறிப்பிடப்படவில்லை.

சைவச்செம்மல் எனப் போற்றப் பெறும் சிவாலயம் ஜெ. மோகன் அவர்கள் சைவத் தின்மீது பற்றுக் கொண்டு 'சிவாலயம்' எனும் அமைப்பை உருவாக்கி, பல அறக் காரியங்களைச் செய்து வருபவர். அவற்றில் நூல் பதிப்புப் பணியும் ஒன்று. வள்ளலார் மீது ஈடுபாடு கொண்ட அவர், பெருமானின் திருவருட்பா ஆறு திருமுறைகளையும் செம்மையுறப் பதிப்பித்துத் தமிழ்கூறு நல்லுலகிற்கு வழங்கியவர். அதனைத் தொடர்ந்து அவர் வழங்கிய "ஆறு திருமுறைகளுக்கான வரலாறும் ஆராய்ச்சிக் குறிப்புகளும்" எனும் இந் நூலில், வள்ளற்பெருமானின் பாடல்களுக்கு வெளிவந்துள்ள பதிப்புகளில் கூறப்பெறாத பல செய்திகள் கூறப் பெற்றுள்ளதை வாசகர்கள் படித்து இன்புறலாம்.

சுந்தரர் தேவாரம் ஆய்வுரைகள்

பதிப்பாசிரியர் : தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகள், 1120, தஞ்சாவூர் சாலை, மச்சுவாடி, புதுக்கோட்டை – 622001. பக். 134, விலை ரூ. 70. செல் : 97891 82825.

சமயக் குரவர் நால்வரில் சிறப்பாகப் போற்றப்படுபவர் சுந்தரர். தமிழின் சிறப்பை வெகுவாகப் போற்றியவர். 'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்' என்பது அவர் வாக்கு. அவர்தம் திருப்பாட்டுகள் ஏழாம் திருமுறையாகப் போற்றப் படுகின்றன. ஆன்றோர்களும், சான்றோர்களும் சுந்தரரின் அருள்வாக்கினை என்றும் சிறப்பித்துப் போற்றுவர். அவ்வகையில், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்களில் உள்ள கருத்து நயங்களைப் பல்வேறு தலைப்புகளில் அருளாளர்களும், அறிஞர் பெருமக்களும் ஆய்வு

செய்து அளித்துள்ள கட்டுரைகளைப் புதுக்கோட்டை திலகவதியார் திரு வருள் ஆதீனம் நூலாகத் தொகுத்து வெளிக்கொணர்ந்துள்ளது. சைவத்தமிழ் அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்பெறுமாறு உள்ள நூல் இது.

வீரமகேந்திரப் பரணி

ஆசிரியர் : கே.பி. அறிவானந்தம், வெளியீடு : ரெங்கா பதிப்பகம், பிளாட் எண் –9, மெஜஸ்டிக் டெரஸ், முத்துக் குமரப்பத் தெரு, சாலிகிராமம், சென்னை – 93. பக்: 168, விலை ரூ. 140, செல் : 94443 34458.

தமிழ்க் கடவுள் முருகனைப் போற் றிப் பரணி பாட வேண்டும் என்பது இந்நூலாசிரியரின் நீண்ட நாள் கன வல்ல, இலட்சியம். அதன் முழு வடி வமே 'வீரமகேந்திரப் பரணி'. பரணி நூல்கள் வெளிவரு வது குறைவாக உள்ள இக்காலத் தில், இந்நூலாசிரிய ரின் பரணி பற்றிய படைப்பு பாராட் டுக்குரியது. பன்னி ரண்டு தலைப்பு களில் அறுநூற்று அறுபத்து ஆறு பாடல்களில் முரு கனைப் பாடி ஆராதித்திருக்கிறார் நூலாசிரியர். பாடல்கள், விளக்கவுரை அனைத்தும் பக்திச்சுவையும், இலக் கியச்சுவையும் கொண்டு படிப்பதற்கு இன்பம் பயப்பனவாக உள்ளன. சமய உலகிற்கும், தமிழுலகிற்கும் பெருமை சேர்க்கும் நூல்.

கஸல்களைப் பாடும் யாரோ ஒருவன்

ஆசிரியர் : காரிகைக்குட்டி, வெளி யீடு : இனிய நந்தவனம் பதிப்பகம், 17, பாய்க்காரத்தெரு, உறையூர், திருச்சி – 620003, பக் : 120, விலை ரூ. 100, செல் : 94432 84823.

வழிந்தோடும் கால நதியில், மனத் தின் மறுபிம்பமாய் ஒளிவிடும் தரவுகளைக் கொண்டு, தனித்துவமாய் வடித்தெடுக்கப்பட்டதான கவிதைத் தொகுப்பு. கவிதைகளில் உவமை, உவ மேயம், உருவகம், உருவாக்கம் என இலக்கண வரம்புகளை உள்நுழைத்துப் படிக்கும் மனங்களைத் தன்வயப்படுத் துதலின் முயற்சிகளில் கவிஞர் காரி கைக்குட்டி, தனி இடம் பிடித்துவிடும் எத்தனிப்புத் தெரிகிறது. எச்சம், பெய ரெச்சம், வினையெச்சம் எனும் கவிதை களில், முற்றுப் பெறாத வார்த்தை களால் முடிந்த முடிபான கருத்துக்கள் முற்றுப் பெறுகின்றன. சில கவிதைகள் நம்மை அதிர வைப்பதை அவதானிக்க முடிகிறது. ஆக, எதார்த்தத் தளத்தி லிருந்து உள்மனக் குமுறல்களை உரக்கப் பேசும் கவிதைத் தொகுப்பு.

தாய்மையின் சிரிப்பு

ஆசிரியர் : மு.உ.உ. உடையப்பன்,



வெளியீடு : இனிய நந்தவனம் பதிப்பகம், 17, பாய்க்காரத்தெரு, உறையூர், திருச்சி – 3, பக் : 120, விலை ரூ. 100, செல் : 94432 84823.

ஐம்பது தலைப்புகள் கொண்டு மரபுக்கவிதைகளால் அமைந்த கவிதைத் தொகுப்பு. தாய்த் தமிழ், தமிழின் பெருமை, தமிழ்க் கவிஞர்கள் எனும் படித் தமிழைப் போற்றும்படியான கவி தைகள் மனத்தை வசீகரிப்பன. குடும்ப உறவுகளின் உண்மை நிலையை உணர்த் தும் கவிதைகள் அனுபவப் பதிவுகள். மேலும் சமூக அவலங்கள், பிள்ளை களால் பேணப்படாத பெற்றோரின் அவலநிலை எனும்படியான கவிதைகள் தனித்துவ முத்திரை பதிப்பன. ஒண்டிக் குடிசை, கடித மலர், ஆலைக்கரும்பு எனும் தலைப்புகளில் உள்ள கவிதை களில் கவிஞரின் மரபுத் தெறிப்புகள் பளிச்சிடுகின்றன.

– எம்.எஸ்.

பூக்கடை

வல்லினத்து வேரும்
இடையினத்து இலையும்
இல்லாமல்

மெல்லினத்து
மலரை மட்டும்
மெல்லப் பறித்து
மெத்தை விரித்தது பூக்கடை

கட்டாந்தரை நகரிலும்
காட்டு மலர்களின்
வாசனையைக்
காட்டிக் கமழுகின்ற பூக்கடை

தள்ளி தள்ளி முளைத்திருந்த
தனித்தனிப் பூக்களை
அள்ளிவந்து அருகருகே
அமரவைத்த பூக்கடை

விண்மீன்களில்
மாலை கட்டும்
மகத்தான யோசனையை
கட்டிய மாலைகளோடு
காட்டி நிற்கும்
பூக்களைப் பூட்டிய பூக்கடை

கடல்கள் கூடுவது
குமரி முனையிலே
கட்டழகு குமரிகள் கூடுவதில்
பூக்கடைக்கு இணையில்லை

தலைவன் தலைவிக்கு
தலைப் பூ
தேடினாலும்

கவிஞன் கவிதைக்கு
தலைப்புத் தேடினாலும்

இரண்டுக்கும் உதவுவது
இந்த இனிய பூக்கடை...

முத்தமிழருவி மாரிமுத்து

இம்மாத ராசி பலன்

**“என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!”**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.07.2020 அன்று கோள்கள் நிலை

செவ்வாய்		சுக்கிரன்	புதன் (வ) ராகு சூரியன்
	16.7.2020 சூரியன்–கடகம் 28.7.2020 புதன் – வக்ர நிவர்த்தி		
சனி (வ)			
குரு (வ) கேது		சந்திரன்	

மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதி அனுகூல மானது. தொழில், உத்தியோகத் துறைகளில் அபிவிருத்தி உண்டாகும். புதிய முயற்சிகளில் இறங்க நன்மை உண்டு. பொருளாதார நன்மையும் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் வீண் விரயம், அலைச்சல், உடல் நலிவு ஏற்படும். கவனம் தேவை. 2–ஆம் வீட்டில் சுக்கிரன் சஞ்சரிப்பதால், இனிமையான பேச்சாற்றல் மூலமாக உங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வாய்ப்புண்டு. புதன் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், உறவினர்களால் செலவு ஏற்படும். ஏற்கனவே செய்த தவறுக்காக வருத்தமடைவீர்கள்.

செவ்வாய் 12–இல் சஞ்சரிப்பதால், அவசரப் படாமல் எக்காரியத்திலும் இறங்க வேண்டும். ஞாபக மறதி காரணமாகப் பொருள் விரயம் ஏற்படலாம். குழந்தைகள் கோப தாபங்களை வெளிப்படுத்தலாம். சிலர் திருட்டு முதலியவற்றால் துன்பம் கொள்ள நேரிடலாம். சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தொழில் துறையிலும், பணியாளர்கள் வகையிலும் அதிருப்தி நிலவும். குரு வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தற்காலிகமாகப் பொருள் முடக்கம் ஏற்படும். திருமணம் முதலிய சுப காரியங்களில் இழுபறி நிலை நிலவக் கூடும்.

ரிஷப ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் பிற்பாதி யோகமாகக் காணப்படுகிறது. முற்பாதியில் பணப் பற்றாக்குறை ஏற்படலாம். தேவையற்ற பொய்யுரைகளைக்கூட நீங்கள் பேச வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம். ராசிக்கு 11–ஆம் வீட்டில் செவ்வாய் சஞ்சரிப்பதால் பூமி, உத்தியோகம், சகோதர வர்க்கத்தார் மூலம் நன்மைகள் ஏற்படலாம். குரு வக்கிரம் பெற்று 8–இல் சஞ்சரிப்பதால், உங்களுக்குப் பொருள் முடக்கம், காரியத்தடைகள் ஏற்பட்டாலும், வக்கிர நிலையின் காரணமாகச் சில வெற்றிகளை அடைவீர்கள்.

சனி வக்கிரம் பெற்று 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சில அதிர்ஷ்ட வாய்ப்புகள் கை நழுவிப் போகலாம். சிலவற்றை அனுபவிக்க இயலாமலும் போகலாம். அதிர்ஷ்டக் குறைவு என்று இதைக் கூறுவர். 2–இல் இராகு சஞ்சரிப்பதால், உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவது கூடாது. பொருளாதார விஷயங்களில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். ஒரு சிலருக்குத் திடீர் எனச் சுப காரியங்கள் நடைபெறலாம். 8–இல் கேது சஞ்சரிப்பதால்,

உஷ்ணத்தால் உடலில் மறைவிடங்களில் கட்டி முதலியன சிலருக்கு ஏற்படும். புதன் வக்கிரம் பெற்று 2–இல் சஞ்சரிப்பதால், குழந்தைகளைப் பற்றிய கவலை அதிகரிக்கும்.

மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் வீண் மனக்குழப்பம், பற்பல சிந்தனைகள், உஷ்ண பீடிதம் இவற்றால் அல்லல் படுவீர்கள். மாதத்தின் பிற்பாதியில் பணத்தேவை கூடும். குடும்பப் பிரச்சனைகள் அதிகரிக்கும். கண்களில் ஒரு சிலருக்கு உபாதை தோன்ற வாய்ப்புண்டு. தொழில், உத்தியோகத் துறைகளில் திருப்தி இருக்காது. செவ்வாய் 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், உங்களது வரம்பு மீறி அதிகாரம் செலுத்த முயற்சிக்க வேண்டாம். தொழில், உத்தியோகம் தொடர்பாக வீண் பயமும், கலக்கமும் இருந்து வரும். கடன் தொடர்பான நெருக்கடியைச் சிலர் அடைவர்.

7–இல் குரு வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், இன்னும் 2, 3 மாதங்களுக்குச் சுப காரியங்கள் கூடி வராது. பின்னர் அக்டோபர் மாதம் வரை நல்ல கால கட்டங்கள். ராசி மீது ராகு சஞ்சரிப்பதால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குறிப்பாக மிருகசீரிடம் நட்சத்திரக்காரர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். 7–இல் கேது சஞ்சரிப்பதால், தாம்பத்திய வாழ்வில் அவ்வப்போது விரக்திக்கு ஆளாவீர்கள். 12–இல் சுக்கிரன் சஞ்சரிக்க இருப்பதால், ஆடம்பரப் பொருள்களைப் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும். புது முயற்சிகள் தற்சமயம் எதுவும் வேண்டாம்.

கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சூரியன் உங்களுக்கு வீண் விரயம், அரசாங்க உபத்திரவம், ஏமாற்றம், தண்டம் கட்டுதல் முதலிய பலன்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு. குறிப்பாக, மாதத்தின் முற்பாதியில் இவ்வாறான பலன்களை ஏற்படுத்தலாம். மாதத்தின் பிற்பாதியில் சலன மனப் போக்கையும் பல வழிச் சிந்தனைகளையும் ஏற்படுத்த வாய்ப்புண்டு. செவ்வாய் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், நாத்திக குணம் சிலருக்கு அதிகரிக்கலாம். ஒரு சிலருக்கு வெளிதேசத் தொடர்புகளை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. நீண்ட பயணங்கள் ஒரு சிலருக்கு நன்மையாக அமையக்கூடும்.

இராகு – புதன் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகம் தொடர்பாகச் சிலர் வெளியூர் செல்ல நேரிடும். ஒரு சிலர் தங்களுக்குக் கீழ் வேலை செய்யும் சிலரால் பிரச்சனைகளை அடைவர். கணக்கு, வழக்குகளில் கவனம் தேவை. அரசாங்க உபத்திரவம் ஏற்படலாம். குரு வக்கிரம் பெற்று 6–இல் சஞ்சரிப்பதால், குழந்தைகள் வழியில் குழப்பமும் பிரச்சனைகளும் ஒன்றிரண்டு மாதங்களுக்கு இருந்துவரும். சுப காரியங்கள் ஒரு சிலருக்குக் கூடி வரும். சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், கூட்டுத் தொழில் செய்வோர் கவனமுடன் இருக்க வேண்டும்.

சிம்ம ராசி அன்பர்களுக்கு, மாதத்தின் முற்பாதியில் லாபம், நன்மை, நண்பர் சேர்க்கை, பொருள் உதவி, மாற்று மதக்காரர்களால் அனுகூலம், வழக்கு விவகார ஜெயம் முதலிய பலன்களை இந்த ராசி அன்பர்கள் அடையும் வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் வீண் விரயம், அலைச்சல், சுபச் செலவு அல்லது அத்தியாவசியச் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. செவ்வாய் 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், ஒரு சிலருக்குச் சிறிய விபத்து, காலில் காயம் முதலியவை ஏற்படலாம். தேவையற்ற கோப தாபம் ஏற்படும். பிறர் மீது போர் தொடுப்பீர்கள்.

சனி வக்கிரம் பெற்றுள்ளதால் குழந்தைகள் கவலை கூடும். சுப காரிய முயற்சிகளில் அவ்வப்போது தடை ஏற்படும். சுக்கிரன் 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தொழில் ஸ்தலத்தில் பெண்கள் மூலமான பிரச்சனைகள் வர லாம். புதன் வக்கிர கதியில் 11–இல் சஞ்சரிப்பதால், ஒரு சிலருக்கு நிலுவைத் தொகை கிடைக்க வாய்ப்புண்டு. ராகு 11–இல் இருப்பதால், மாற்று மதக்காரர்கள் உதவிகரமாக இருப்பர். கேது 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நிவர்த்தியாகும். புதிய முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்க வெற்றியுண்டாகும்.

கன்னி ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சூரியன் அனுகூலமாகச் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் ஏற்றம் உண்டு. நினைத்த காரியம் நிறைவேறும். பிறரிடமிருந்து எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும். பொருள்

வாங்கும் யோகம் உண்டு. சூரியன், ராகு, புதன் சேர்க்கை காரணமாக மாதத்தின் முற்பாதியில் அறிமுகமில்லாத மூன்றாவது மனிதர்களுடன் தொழில் கூட்டு ஏற்படுத்திக் கொள்வது உகந்தது அல்ல. செவ்வாய் 7–இல் சஞ்சரிப்பதால், கணவன் – மனைவி இடையில் சண்டை, சச்சரவு ஏற்பட வாய்ப்புண்டு. எதிரியைப் போல் பாவிப்பர்.

சனி 5–ஆம் வீட்டில் வக்கிர கதியில் சஞ்சரிப்பதால், கூட்டுக் குடும்பமாக இருப்பவர்கள் சிறு பிரச்சனைகளைப் பெரிதாக்கி வீண் மனஸ்தாபங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். குரு வக்கிரம் பெற்று 4–இல் சஞ்சரிப்பதால், தடைப்பட்ட காரியங்கள் இனி இடையூறு இல்லாமல் நடைபெறும். சுய தொழில் செய்வோர் தொழில் அபிவிருத்தி கருதிச் சில செலவினங்களை ஏற்க வேண்டி வரும். வீடு, வாசல் மாற்றம் சிலருக்கு ஏற்படும். சுப காரியங்கள் தற்சமயம் நடைபெறுவது சற்றுக் கடினமானது.

துலாம் ராசி அன்பர்களுக்கு, மாதத்தின் முற்பாதியில் ஏதேனும் ஒருவிதப் பய உணர்வுடன் காணப்படுவீர்கள். ஒரு சிலர் அரசாங்க நிந்தனைக்கு ஆளாவர். பெண்கள் வயிற்று உபாதையால் சிரமம் அடைவர். கெட்ட திசா புத்தி நடைபெறுபவர்கள் சிறைப்பயத்தை அடைவர். நீண்ட தூரப் பயணங்களிலும், நீதிமன்ற நடவடிக்கைகளிலும் கவனம் தேவை. மாதத்தின் பிற்பாதியில் காரிய ஜெயம் ஏற்படும். நீண்ட நாள் கனவு ஒன்று நனவாகும். தொழில் துறையில் நன்மை உண்டாகும். செவ்வாய் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், கார உணவுகள் சாப்பிட ஆர்வம் ஏற்படும். தற்போதைய சூழ்நிலையில் கார உணவுகள், அசைவ உணவுகள் சாப்பிடுவது உபத்திரவங்களை ஏற்படுத்தலாம்.

சுக்கிரன் 8–இல் சஞ்சரிப்பதால், இள வயதினர் காமாந்தகச் சிந்தனைகளின்மீது நாட்டம் கொள்வர். குரு 3–ஆம் வீட்டில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தனப் பிராப்தி ஏற்படும். சுப காரியம் எதிர்பாராமல் ஈடேறும். சனி வக்கிரம் பெற்று 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், போகப் போக மனதில் பயம் அகன்று தன்னம்பிக்கையை ஏற்படுத்தும். கேது 3–இல் சஞ்சரிப்பதால், வசதிகளை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

விருச்சிக ராசி அன்பர்களுக்கு, மாதத்தின் முற்பாதியில் திடீர் செலவு, தொண்டையில் பாதிப்பு, உடல் நலிவு முதலியன ஏற்பட வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் பற்பல முயற்சிகளிலும் காரியத் தடைகள் ஏற்படும். மிகவும் சிரமங்களுக்குப் பின் முயற்சிகள் பலிதமாகும். செவ்வாய் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், புத்தி நிலையாக இருக்காது. அடிக்கடி முடிவுகளை மாற்றிக் கொள்வீர்கள். சுக்கிரன் ஆட்சி பெற்று ராசியைப் பார்ப்பதால், ஒரு சிலருக்கு எதிர்ப்பும், ஒரு சிலருக்கு ஆதரவும் பெண்களால் கிட்டும். நடைபெறும் திசா புத்தியை அனுசரித்து இப்பலன் நடைபெறும்.

குரு 2–இல் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், தன வரவு ஏற்படும். சொல்லுக்கு மதிப்பு ஏற்படும். சனி 3–இல் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், உடன் பிறந்தவர்கள் யாரேனும் சிரமத்திற்கு ஆளாவர். திருமணம் முதலிய சுப காரியங்கள் எதிர்வரும் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் நடைபெறலாம். குரு வக்கிர நிவர்த்தியானதும் முயற்சிக்கவும். சூரியன், புதன், ராகு 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், உடல் நலனில் மிகுந்த அக்கறை வேண்டும், கவனம்.

தனுசு ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சற்றுச் சோதனைகள் உண்டு. சூரியன், ராகு, புதன் உங்கள் ராசிக்கு 7–ஆம் வீட்டில் ராசியின் முற்பாதியில் சஞ்சரிப்பதால், உடல் நலனில் போதிய அக்கறை வேண்டும். வேற்று மதக்காரர்கள், அரசாங்க அதிகாரிகளிடம் கவனமாக இருக்க வேண்டும். மாதத்தின் பிற்பாதியில் 8–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால் எதிர்பாராத செலவு, சில சம்பவங்களைச் சந்திக்க நேரலாம். தொடர்ந்து உங்கள் உடல் நலத்திலும் கவனம் வேண்டும். செவ்வாய் 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், உங்கள் வழக்கமான நடத்தை, நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படலாம். பெரியோர் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

சுக்கிரன் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், பெண்கள் மீது தேவையற்ற எரிச்சலை வெளிப்படுத்துவீர்கள். சர்க்கரை முதலிய நோய் உடைய

வயதானவர்கள், உடலை அவ்வப்போது பரி சோதனை செய்து கொள்ள வேண்டும். ராசி மீது கேது சஞ்சரிப்பதால், இனம் புரியாத மனக்குழப்பம் இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் உங்களிடம் இருந்துவரும். புதனும், குருவும் வக்கிரம் பெற்று ஒருவருக்கொருவர் பார்வை செய்வதால், கணவன் – மனைவி உறவில் கவனம் வேண்டும்.

மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றி பெறும்; எக்காரியத்திலும் ஜெயம் உண்டாகும். தொழில், உத்தியோகத் துறைகளில் அபி விருத்தி உண்டாகும். தனம், பொருள் லாபமாகும். இருப்பினும் சூரியன், ராகு, புதன் சேர்க்கை ஏற்படுவதாலும், ராசி மீது சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதாலும் உடல் நலத்தில் கவனம் வேண்டும். கிருமித் தொற்றால் வயிற்றி லும், தொண்டைப் பகுதியிலும் பாதிப்பு நேரக் கூடும். சிலருக்குக் காய்ச்சல் முதலியவை ஏற்பட லாம். சிறு குழந்தைகளாக இருப்பின், தற் போதைய அசாதாரணச் சூழ்நிலைக்கு ஏற்பப் பாது காப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

செவ்வாய் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சகோதர வர்க்கத்தார் மேன்மை அடைவர். ஒரு சிலருக்கு உத்தியோகஸ்தர்கள் மூலமோ, நிலம், பூமி விற்கிரயம் மூலமோ நன்மை உண்டாகும். வாலிப வயதில் உள்ளவர்களின் நடவடிக்கை களை உன்னிப்பாகக் கவனித்து வர வேண்டும். ஒரு சிலர் வீட்டை விட்டு ஓடிவிட வாய்ப்புள்ளது. குரு 12–இல் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், உங்களால் இயன்ற தான தர்மங்களைச் செய்வது நல்லது. சுக்கிரன் 5–இல் சஞ்சரிப்பதால் அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படும்.

கும்பம்

கும்ப ராசி அன்பர்களுக்கு, மாதத்தின் முற் பாதியில் தடைகள் உண்டாகும். போட்டித் தேர் வில் பங்கு பெறும் மாணவர்களுக்கு வெற்றி உண்டாகும். அரசாங்கக் காரியங்களில் கவனம் வேண்டும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில் உத்தி யோகம், பொருளாதார விஷயங்களில் நன்மை உண்டாகும். செவ்வாய் 2–இல் சஞ்சரிப்பதால், கெட்ட வார்த்தைகளைப் பேச வேண்டாம். தண்டச் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. போதைப் பொருள்கள், லாகிரி வஸ்துக் கள் உபயோகிப்பவர்கள் வேத னைக்கு உள்ளாவர்.

4 – இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் வாகன சுகம் கிட்டும். 12–இல் சனி வக்கிரம் பெற்றிருப்பது நன்மையே. வர வேண்டிய நிலுவைத் தொகைகள் வந்து சேரும். தெரிந்தவர்கள் மூலம் உதவி கிடைக்கும். குரு வக்கிரம் பெற்று 11–இல் கேது வுடன் சஞ்சரிப்பதால் எதிர்பாராதவிதமாகப் பெரியோர்கள், மகான்கள், சாதுக்கள் சந்திப்பு, ஆசி கிடைக்கும் வாய்ப்புண்டு. ஒரு சிலருக்கு வசதி மிக்கவர்களின் உதவி கிடைக்கும். திரு மணம் முதலிய சுப காரியங்கள் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் கூடிவரலாம். புது முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்க நன்மையாக முடியும்.

மீனம்

மீன ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் உடல் நலிவுகள் ஏற்படலாம். பயணம், அலைச்சல் தவிர்க்க இயலாது. குடும்பத்தில் குழப்பம் ஏற்படலாம், கவனமாகச் செயல் பட வேண்டும். மாதத்தின் பிற் பாதியில் சூரியன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால், புத்திக் குழப்பம் ஏற்படும். காரியத் தடைகளைச் சந்திக்க நேரிடும். சுக்கிரன் 3–இல் சஞ்சரிப்பதால், சுக போக யோகம் உண்டு. இருப் பினும் உடன்பிறந்த சகோதரி இருப்பின் நற்பலன் களை அவர்கள் அடைய இயலாது.

ராகு 4–இல் சஞ்சரிப்பதால், போக்குவரத்து களில் இன்னும் 3, 4 மாதங்களுக்குக் கவனமுடன் இருக்க வேண்டும். சனி லாபஸ்தானத்தில் வக்கிரம் பெற்றிருப்பது நல்லதல்ல. தொழில் துறையில் எதிர்பார்ப்புகள் ஈடேறுவது கடினம். பணியாட்கள் பிரச்சனை வரும். குரு 10–ஆம் வீட்டில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், ஜனன ஜாதகத்தில் குரு வக்கிரம் பெற்று இருப்பின் சுப காரியங்கள் கூடிவரும். பணம், பொருள், பாக்கியம் சேரும். தொலைதூரங்களில் இருந்து நற்செய்தி வரும். செவ்வாய் ராசி மீது சஞ்சரிப்ப தால், காலில் அல்லது தலையில் காயம் ஏற்படும். கோபம் கூடாது.



கட்டுரை

உடல் எடை அதிகரிப்பதால் வரும் நோய்கள்

4

"உடல் பருமன் வரும் முன்னே, நோய்கள் வரும் பின்னே" என்பதுதான் மருத்துவப் பழமொழி. இந்தக் காலத்தில் உணவு இல்லாமல் மரணம் தழுவுபவர்களைவிட, அதிகப்படியான உணவு உண்டு, அதனால் வரும் நோய்களால் மரணம் அடைபவர்களே அதிகம் என்பது பல்வேறு ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

உடல் பருமனால் உடல் ரீதியாக மட்டும் பிரச்சனை ஏற்படுவதில்லை. உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள். தன்னால் உடல் எடையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்ற கடுமையான அவநம்பிக்கைக்குப் பெரும்பாலோர் ஆட்படுகிறார்கள். உடல் எடை அதிகரிப்பதை யாரும் அசட்டையாக எடுத்துக்கொள்ளவே கூடாது.

இனிப்பு நோய் : நீரிழிவு எனப்படும் சர்க்கரை நோயாளிகள் அனைவரும் அதிக எடையுடன் இருக்கிறார்களோ, இல்லையோ, உடல் பருமனாக இருப்பவர்களில் கிட்டத்தட்ட 90 சதவீதம் நபர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதுவும் டைப் 2 எனக் குறிப்பிடப்படும் இரண்டாவது வகை நீரிழிவு நோயாளிகளாகவே அதிகம் நபர்கள் இருக்கிறார்கள்.

கடந்த 20–ஆம் நூற்றாண்டில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் மட்டுமே காணப்பட்ட நீரிழிவு நோய், இந்த 21–ஆவது நூற்றாண்டில் குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என அனைவரிடமும் காணப்படுகிறது. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 85 சதவீதத்தினர் டைப் 2 வகை நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

அடிக்கடி சிறுநீர் போதல், அதிக தாகம், சோர்வு, கண் பார்வைக் குறைபாடு, தோல் பிரச்சனைகள், செக்ஸ் குறைபாடு மற்றும் காயம் ஆறுவதற்குத் தாமதமாகுதல் முதலியவை நீரிழிவு நோயின் அறிகுறிகளாகத் தென்படுகின்றன. இந்த அறிகுறிகள் மட்டுமின்றி, 30 வயதைக் கடந்தவர்கள் அனைவரும் தாங்களாகவே இந்தப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

மேலும் தங்கள் பரம்பரையில் யாருக்கேனும் நீரிழிவு நோய் இருப்பவர்களும் உடனடியாகப் பரிசோதனை செய்து நோய் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஆரம்பக் கட்டத்திலேயே நீரிழிவு கண்டறியப்பட்டால், பல்வேறு நோய்களின் தாக்கத்திலிருந்து தப்பிவிட முடியும்.

நீரிழிவு நோயினால் ரத்தத்தில் இருக்கும் கொழுப்பு, ஹோமோசிஸ்டீன் முதலியவை அதிகரிக்கின்றன. நீரிழிவு காரணமாக ரத்தத்தில் அதிக குளுக்கோஸ் இருப்பதால், சிறுநீரகங்களுக்கு அதிகப் பணிச்சுமை உண்டாகிறது. நீரிழிவு காரணமாகப் பாதங்களுக்குச் செல்லும் ரத்தத்தின் அளவு குறைகிறது. இதனால் கால் நரம்புகளில் பாதிப்பு ஏற்படுவதுடன் புண்களும் தொற்று நோய்களும் ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது.

சர்க்கரை நோயாளிகளில் 50% பேர் ஆண்மைக்குறைவு உள்ளவர்களாக இருக்கின்றனர். அதேபோல் நீரிழிவு உள்ள

டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத்

பெண்களுக்குப் பெண்மைக் குறைபாடு உண்டாகிறது. செக்ஸ் ஆர்வம் குறைவது குடும்பத்தில் பல்வேறு பிரச்சனைகளுக்கு மூலகாரணமாக அமைந்துவிடுகிறது.

கொழுப்பு அபாயம் : உடல் பருமன் உள்ள நபர்கள் அனைவருக்குமே கொழுப்பு அதிக அளவில் படிந்து உடல் நலனுக்கு அபாயம் உண்டாகிறது. கொழுப்பு எனப்படும் கொலஸ்ட்ரால் 80% கல்லீரல்தான் உற்பத்தி செய்கிறது. மீதமுள்ள கொழுப்பு சாப்பிடும் உணவிலிருந்து கிடைக்கிறது. இந்தக் கொழுப்புதான் அனைத்துச் செல்களுக்கும் வடிவம் கொடுத்து இயங்கச் செய்கிறது.

கொழுப்பு என்றதும் பயப்படத் தேவையில்லை. கொழுப்பு உடலுக்கு நிச்சயம் தேவைதான். ஆனால், நல்ல கொழுப்பை அதிகரிக்கவும் கெட்ட கொழுப்பைக் குறைப்பதும்தான் முக்கியம் ஆகும்.

ஹெச்.டி.எல். எனப்படும் கொலஸ்ட்ரால் ரத்தத்தில் இருப்பது உடலுக்கு நன்மை செய்கிறது. எல்.டி.எல். எனும் கெட்ட கொழுப்பு ரத்தத்தில் 100 மில்லி கிராம் அளவுக்கு அதிகமாக இருக்கும்போது, நாளடைவில் இதயப் பாதிப்பு, மூளை பாதிப்பு, பக்கவாதம் முதலிய உடல்நலக் குறைபாடுகள் ஏற்பட ஏதுவாகிறது.

ஆடு, மாடு, பன்றி இறைச்சிகள், முட்டையில் மஞ்சள் கரு, ஐஸ்கிரீம், சாக்லேட், சிப்ஸ் மற்றும் இனிப்புப் பண்டங்கள் அதிகம் எடுத்துக் கொள்பவர்களுக்குக் கெட்ட கொழுப்பு அதிகரிக்கிறது. அதனால், அசைவத்தைக் குறைத்துக் கொள்வதும் காய், கனிகளை நிறைய எடுத்துக் கொள்வதும் நல்லது. மேலும் மது, புகை முதலிய கெட்ட பழக்கங்களை முற்றிலும் நிறுத்த வேண்டும். கடுமையான உடற்பயிற்சி மூலமே இதன் அளவைக் குறைக்க முடியும்.

இரத்த அழுத்தமும் இதய நோய்களும் : உடலில் ரத்தம் ஓடிக்கொண்டிருக்கும் அழுத்தத்தையே ரத்த அழுத்தம் எனப்படும் பிளட் பிரஷர் என்று சொல்கிறோம். பல்வேறு காரணங்களால் ரத்த அழுத்தச் செயல்பாடு பாதிக்கப்படுவதைத்தான் உயர் ரத்த அழுத்தம், குறைந்த ரத்த அழுத்தம் என்று கணக்கிடப்படுகிறது. ரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 50 சதவீதம் பேர் உடல் பருமனால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

பொதுவாக 100/70 மி.மீ. முதல் 140/90 மி.மீ. வரை உள்ள ரத்த அழுத்தம் சரியான நிலை என்று உலக சுகாதார நிறுவனம் வரையறை செய்துள்ளது. இந்த அளவுக்கு மேல் ரத்த அழுத்தம் அதிகரிப்பது உயர் ரத்த அழுத்தம் என்று குறிப்பிடப்படுகிறது.

குடும்பத்தில் எவரேனும் ஒருவருக்கு உயர் ரத்த அழுத்தம் இருந்தால், அவர் ஆறு மாதத்திற்கு ஒரு முறை நிச்சயம் ரத்த அழுத்தப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். இது தவிர கருவாடு, ஊறுகாய் தவிர்க்க வேண்டும். கொழுப்பு நிறைந்த சீஸ், ஐஸ்கிரீம், முட்டையின் மஞ்சள் கரு, சாக்லேட் முதலியவற்றையும், எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளையும் தள்ளி வைக்க வேண்டும்.

புகை, மது முதலியவை ரத்த அழுத்தத்தை அதிகரிக்கின்றன. காபி, கிரீன் டீ அல்லது காய்கறி சூப் எடுத்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து ஒரு மணி நேரம் நடைப்பயிற்சி செய்வது உயர் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது. ரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் தினமும் குறைந்தது 7 மணி நேரம் தூங்க வேண்டியது அவசியம். பரபரப்பும் டென்ஷனும் வாழ்க்கையில் இருக்கவே கூடாது.

மூட்டுவலி உள்ளிட்ட எலும்புப் பிரச்சனைகள் : உடல் பருமன் உண்டாக்கும் நோய்களின் வரிசையில் முக்கியமான ஒன்று மூட்டு வலி. ஆண்களைவிட, பெண்களையே மூட்டுவலி அதிகம் பாதிக்கிறது. கால் மூட்டு மட்டுமின்றி, கை மூட்டு, இடுப்பு, அடிமுதுகு, தோள்பட்டை மூட்டு முதலிய பகுதிகள் பாதிக்கப்படுகின்றன.

மூட்டுகளில் வலி ஏற்படும்போது வலி நிவாரணிகள் தேடுவதைவிட, வலிக்குக் காரணமான உடல் எடையைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். மூட்டு வலி ஏற்பட்டதும் உடற்பயிற்சியைக் குறைத்துவிடாமல், மருத்துவர் ஆலோசனையுடன் எப்படிப்பட்ட பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டு, அவற்றைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். உணவுக்கட்டுப்பாடும் இந்த நேரத்தில் மிகவும் அவசியம்.

கல்லீரல் குறைபாடு : ரத்தத்தில் இருக்கும் கொழுப்பு இதயத்தைப் பாதிப்பதைப் போலவே கல்லீரலிலும் படிந்து பாதிப்பை உண்டாக்குகிறது. ஆனால், கல்லீரல் குறைபாடு ஆரம்பக் கட்டங்களில் வெளியே தெரிவதில்லை. ஏனென்றால், கல்லீரலில் ஆரம்பக்கட்டப் பாதிப்பு ஏற்படும் போதும், தன்னுடைய செயலைக் குறைத்துக் கொள்ளாமல், தன்னைத்தானே குணப்படுத்த முயற்சிகள் எடுக்கிறது.

ஆனால், கொழுப்புப் படிமம் அதிகரிக்கும் போது கல்லீரல் அளவு பெரிதாகத் தொடங்கு கிறது. இதனை அடுத்துக் கல்லீரல் கடினமாக மாறத் தொடங்கி, சுருங்கவும் செய்கிறது. இந்த நிலை நீடிக்கும்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் கல்லீரல் செயல் இழக்கிறது. மது குடிப்பதால் கல்லீரலுக்குப் பாதிப்பு ஏற்படுவதைப் போலவே, உடல் பருமன் உள்ளவர்களுக்குக் கல்லீரல் கட்டியாக மாறிப் புற்றுநோயாக மாறும் அபாயம் உண்டு.

35 வயது தாண்டியவர்கள் கல்லீரல் பரிசோதனையை ஆண்டுதோறும் செய்துகொள்ள வேண்டும். உடல் பருமனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டால், கொழுப்புப் படிவதில் இருந்து கல்லீரலைக் காப்பாற்றிக் கொள்ளவும், ஆரோக்கியமாக வாழவும் முடியும்.

புற்று நோய்கள் : அபாயகரமான புற்றுநோய் உருவாவதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும், உடல் பருமன் முக்கியமான ஒரு காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. புற்றுநோய் என்றதும் அச்சப்படுவதற்கு அவசியம் இல்லை என்றாலும், அதற்கு உடல் எடை அதிகரித்தலைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

மலட்டுத் தன்மை : உடல் எடை கூடுவதன் காரணமாக வரும் பாதிப்பு ஆண்களைவிட, பெண்களையே அதிகம் தாக்குகிறது. உடல் எடை கூடுவதால் ஆண், பெண் இருவருக்குமே அந்தரங்க வாழ்க்கையில் ஈடுபாடு குறைகிறது. இது தவிர, பெண்களுக்குச் சீரற்ற மாதவிலக்கு ஏற்படுவதற்கும் உடற்பருமன் காரணமாக இருக்கிறது.

பாலிசிஸ்டிக் ஓவரி சின்ட்ரோம் எனப்படும் கருப்பை நீர்க்கட்டிகள், புறக்கர்ப்பம் முதலிய பிரச்சனைகளும் உடல் பருமனான பெண்களுக்கு உண்டாகின்றன. உடல் எடை மிகுந்த பெண்கள் கர்ப்பம் அடையும்போது, அந்தக் கர்ப்பம் நிலைப்பது சிரமமாக இருக்கிறது. கருச்சிதைவு மற்றும் குறைமாதப் பிரசவம் நிகழ்வதும், உடல் பருமனான பெண்களுக்கு அதிகம் நிகழ்கிறது.

இதுதவிர, உடல் பருமனான பெண்களுக்கு மார்பகப் புற்று, கருப்பைப் புற்று, சினைப்பைப் புற்று ஏற்படுவதற்கும் அதிக வாய்ப்பு இருக்கிறது. அதனால் உடல் எடை அதிகரிக்கும்போது ஆண்களைவிட, பெண்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆரம்பக் கட்டத்திலேயே உடல் பருமனைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

உறக்கக் குறைபாடுப் பிரச்சனைகள் : உணவில்லாமல்கூட மனிதனால் இருந்துவிட முடியும். ஆனால், உறக்கமில்லாமல் இருக்கவே முடியாது. நல்ல உணவு, படுக்கை, நல்ல சுற்றுச்சூழல் இருந்தாலும்கூட, தூக்கம் வராமல் தவிப்பவர்கள் உண்டு. உடல் எடை அதிகமாக இருப்பவர்களுக்குச் சரிவரத் தூக்கம் வருவதில்லை. காரணம், நீரிழிவு, ரத்த அழுத்தம்.

தூக்கமின்மை தொடரும்போது பல்வேறு மனநலப் பிரச்சனைகளுக்கு ஆளாகிறார்கள். எப்போதும் பதற்றமான நிலையில் இருப்பார்கள். தூக்கமின்மைக்காக எடுத்துக்கொள்ளும் மருந்துகளும் இவர்களுக்குச் சிறந்த முறையில் பயனளிப்பதில்லை என்பதால் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். யாரைப் பார்த்தாலும் கோபப்படுதல், தனிமையை நாடுதல், தன்னைத்தானே தண்டித்துக் கொள்ளுதல் முதலிய பிரச்சனைகளுக்கும் ஆளாகிறார்கள்.

இதுவரை குறிப்பிட்டது தவிர, தோல் நோய்கள், நுரையீரல் பிரச்சனை, வயிற்றுக் கோளாறு முதலிய பிரச்சனைகளும் உடல் பருமனால் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ●

நல்வாழ்த்துக்களுடன்!

ஜோதி ஜோதி ஜோதி சுயஞ் ஜோதி ஜோதி ஜோதி அருள்

ஜோதி ஜோதி ஜோதி பரஞ் ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,

கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983

குழந்தையின்மைக்குச் சித்த மருத்துவத்தில் தீர்வு

ஒவ்வொருவருக்கும் குழந்தைப்பேறு என்பது வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்று. சிலருக்கு மட்டும் ஏதேனும் குறைபாடுகளால் இந்தக் குழந்தைப்பேறு கிடைக்காமல் போகிறது. அதற்கு இன்றைய நவீன மருத்துவம் பல்வேறு அறிவியல் வழிமுறைகளில் தீர்வுகளைத் தருகிறது.

நவீன மருத்துவ முறைகளில் செலவு மிகுதி ஆவதால் எல்லோருக்கும் இது சாத்தியமாவதில்லை. ஆனால், தமிழகத்தின் பண்டைய மருத்துவ முறையான சித்த மருத்துவத்தில் இதற்கு எளிதான தீர்வு இருக்கின்றது.

அருட்செல்வர் ஐயா அவர்கள், சித்த மருத்துவத்தைச் சிறப்பாக வளர்ப்பதற்காகக் கோவை வரதராஜபுரத்தில் ‘‘கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை’’ 30 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கினார்.

இந்த மருத்துவமனை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, சித்த மருத்துவத்தால் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்ட நோயாளிகளுக்குச் சிறந்த தீர்வுகளைத் தந்துள்ளது.

திருமணமாகி 15 ஆண்டுகள் குழந்தைப் பேறின்றி இருந்த திருமதி. சித்ரா, என்பவர், இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் தற்போது கருவுற்றிருக்கிறார். இச்செய்தியை அவரே கடிதம் வாயிலாகத் தெரிவித்துள்ளார். அந்தக் கடிதம் வருமாறு...

‘‘என் பெயர் பி. சித்ரா. எனக்கு 39 வயதாகிறது. எனது கணவர் பெயர் ஆர். மோகன்தாஸ், வயது 45. நாங்கள் திருப்பூர் மாவட்டம் பல்லடம் வட்டம் கரடிவாவி புதூரைச் சேர்ந்தவர்கள்.

எங்களுக்குத் திருமணமாகி 7 மாதங்கள் ஆகின்றன. இது எனக்கு இரண்டாவது திருமணம். முதல் திருமணத்திற்குப் பின் 15 ஆண்டுகள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை. எனது கணவருக்கும் இது தாமதமான திருமணம் என்பதால், பொதுச் சோதனை செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்து, திருமணமாகி 2–ஆவது மாதத் தொடக்கத்திலேயே அருகில் உள்ள தனியார் மருத்துவ மனைக்குச் சென்று பரிசோதித்தோம்.

பி. சித்ரா,
ஆர். மோகன்தாஸ்

அச்சோதனையில், எனக்கு நீர்க்கட்டிப் பிரச்சனை உள்ளதாகவும், வயதும் ஆகிவிட்டதால் இயற்கையாகக் கர்ப்பம் அடைவது மிகவும் கடினம் என்றும் கூறினார்கள். மேலும், நீர்க்கட்டியை உடனடியாக அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கி, செயற்கை முறைக் கருத்தரிப்புச் செய்து கொள்வது மட்டுமே சாத்தியம், அதற்கு ரூ. 3.5 லட்சம் செலவாகும். இயற்கையான கருத்தரிப்புச் சாத்தியமில்லை என்று கூறினார்கள்.

செயற்கை முறைக் கருத்தரிப்பில் எங்களுக்கு விருப்பமின்மையாலும், செலவு மற்றும் குடும்பத்தினரின் நெருக்கடி காரணமாகவும் நாங்கள் நீர்க்கட்டிச் சிகிச்சை பெற்று, மூன்றாவது கருத்துக் கேட்பதற்காக மிகவும் குழப்பத்திலும், பயத்திலும் கோவை வரதராஜபுரத்திலுள்ள கஸ்தூர்பா காந்தி நினைவு சித்தமருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைமை மருத்துவர் டாக்டர் ப. சரவணன் அவர்களை 2.1.2020 அன்று அணுகினோம்.

ஏற்கனவே 2 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் தாயாருக்கு கால் வலிப் பிரச்சனைக்காகவும், எனக்கு உயர்இரத்த அழுத்தத்திற்காகவும் கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவமனையில் டாக்டர் சரவணனிடம் சிகிச்சை எடுத்துள்ளோம்.

அந்த அனுபவத்தில் நாங்கள் அவரை அணுகியபோது, நாடி பிடித்துப் பரிசோதித்தார். இயற்கையாகவே இரண்டு, மூன்று மாதங்களில் கர்ப்பம் அடைய வாய்ப்பு உள்ளது என்று அவர் கூறினார். எனக்கும் என் கணவருக்கும் நம்பிக்கை ஊட்டிச் சில மருந்துகளைக் கொடுத்தார்.

தற்போது நான் கருத்தரித்து 45 நாட்களாகின்றன. நானும், எங்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் தற்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

இதற்கு முழுக்க முழுக்க இறைவன் அருளும், டாக்டர் கொடுத்த நம்பிக்கையும், சித்த மருந்துகளுமே காரணம். எங்களுக்கு இந்த மகிழ்ச்சியை அளித்த கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவமனைக்கும், டாக்டருக்கும் எங்கள் குடும்பத்தாரின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.’’

– ந.நி.

கா.ப. கலைஅரசன்

கட்டுரை

'அறம்' என்ற சொல்லுக்குப் பலவிதமான பொருள் களைப் பல புலவர்கள் அளித்துள்ளார்கள். முக்கியமான இலக்கியங்களில் இந்த 'அறம்' என்ற சொல் எப்படிக் கையா ளப்பட்டுள்ளது? எங்ஙனம் உணர்த்தப்பட்டுள்ளது? என் பதை நாம் அறிந்திட வேண்டும்.

எது அறம்?

திருவள்ளுவர்

'அறம்' சொல்லுக்குத் தமிழ் அகராதியில் (மதுரைத் தமிழ்ப் பேரகராதி – 1937) கையறம், தருமம், நீர்மை, நூற் பயன் நான்கினொன்று, புண்ணியம், தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, வசைகவி, யமன், புனிதம், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம், இன்சொல், இல்வாழ்க்கை எனவும், தென்னிந்திய சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடான கழகத் தமிழ் அகராதியில் (1964) "அறம்" என்ற சொல்லுக்குக் கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள் தரும தேவதை, தீப்பயன் உண்டாக்கும் சொல் எனவும் பொருள் தரப் பட்டுள்ளது.

'மணிமேகலை'யில் சீத்தலைச் சாத்தனார்,

"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டது இல்"

எனக் குறிப்படுகின்றார். அதாவது எது அறம் என்றால், மன்னுயிருக்கெல்லாம் உண்டி கொடுப்பது. அதாவது உணவு கொடுப்பது, உடைக் கொடுப்பது, உறைவிடம் தருவது மட் டுமே அறம். அது தவிர நான் கண்டது வேறில்லை என்று சொல்கிறது. உணவு, உடை, உறைவிடம் ஆகியன கொடுத் தால் அதுவே அறமாகி விடுமா?

இல்லை! இல்லை! இதோ, வேறோர் அறம் இருக்கிறது என நம்மை அழைக்கிறது சிலம்புக் காப்பியம். சிலப்பதி காரத்தில் 'அறம்' கூற்றுவனாக வந்து பாண்டியன் நெடுஞ் செழியனைக் கொல்கிறது.

"அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே – பொல்லா

வடுவினையே செய்த வயவேந்தன் றேவி

கடுவினையேன் செய்வதூஉங் காண்"

எனச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


சீத்தலைச் சாத்தனார்

தீய வினைகள் செய்தவர்களுக்கு, தீயச் செயல் செய்தவர்களுக்கு "அறம்" கூற்றுவனாக வந்து கொல்லும் என்றும் பலபேர், பல அறிஞர்கள், ஞானிகள் கூடிய சபை, அவை சொல்லுகின்ற சொல் தவறல்ல என்றும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடி கள் குறிப்பிடுகின்றார்.

பாண்டியன் நெடுஞ்செழியன்

நாலடியாரில் அறம் பற்றிக் குறிப்பிடும்போது 'நல்ல செயல்கள்' என்று பொருள்படும்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மற்று அறிவாம் நல்வினை யாம்
இளையம், என்னாது
கைத்து உண்டாம் போழ்தே, கரவாது
அறம் செய்ம்மின்
முற்றி இருந்த கனி ஒழிய தீவளியால்
நல்காய் உதிர்தலும் உண்டு."

நல்ல செயல்களைப் பின்னர் செய்யலாம், மெதுவாகச் செய்து கொள்ளலாம், இப்போது நாம் இளமையாய் இருக்கிறோம் என்று கருதாது கையில் பொருள் இருக்கும்போது, அதனை மறைக்காமல் நல்லவற்றைச் செய்யுங்கள். ஏனெனில், கடுங்காற்றால் நன்கு பழுத்தப் பழங்கள் விழாமல் இருக்க, நல்ல காய்கள் உதிர்தலும் உண்டு என்று – அதாவது வயதானவர்களுக்கு மட்டுமே மரணம் வரும் என்று இல்லை. இளைய வயதிலும் மரணம் வரும். அதற்கு முன்பே நற்செயல்களைச் செய்துவிடு என்று அறத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

சிறுபஞ்ச மூலத்தில் அறுபத்து ஒன்றாவது பாடலில் "நீர் அறம் நன்று, நிழன் நன்று, தன் இல்லுள் பார் அறம் நன்று, பாத்து உண்பானேல் பேர் அறம் நன்று" என்று தண்ணீர் அளித்தல் நீர் அறம் என்றும், தன் வீட்டில் இடம் அளித்தலைத் தன் இல்லுள் பார் அறம் என்றும், பகிர்ந்துள்ளது உண்ணுதலைப் பேர் அறம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, வயிற்றில் உள்ள கருவைக் கவனமாகக் காத்தல், குழந்தையைப் பாது காத்தல், குழந்தைக்கு மருந்து கொடுத்தல், குழந்தையை அச்சுறுத்தாமல் வளர்த்தல் முதலியவற்றை நன்கு செய்தல் பெரிய அறமாகச் சிறுபஞ்ச மூலத்தில் மேலும் குறிப்பிடுகிறார், அதன் ஆசிரியர் புலவர் காரியாசன்.

இன்னா நாற்பது நூலில் ஆறாம் பாடலில் "அறமனத்தார் கூறும் கடும் மொழி இன்னா" எனக் "கபில தேவர்" குறிப்பிடுகின்றார். தமிழுலகில் கபிலர் என்ற பெயரில் பலர் உள்ளனர்; வேறுபடுத்திக் காட்டிடவே 'கபில தேவர்' எனக் குறிப்பிடப்படுகிறார்.

இவர், அறமுடைய உள்ளத்தை உடையவர் சொல்லும் கடுஞ்சொல் துன்பத்தைக் கொடுக்கும் என்று குறிப்பிடுகின்றார். அறச்செயல்களைச் செய்யும் உள்ளம் உடையோர் 'அறமனத்தவர்' ஆகிறார் என்கிறார். இங்கே அறமனம் என்பது நல்ல மனத்திற்கும் பொருந்துகிறது.

விளம்பி நாகனார் எழுதிய நான்மணிக்கடிகையில் தீயவற்றைச் செய்கின்ற கீழ்மக்களுக்கு அறம் கூற்றுவனாக வரும் என்கிறார்.

"கல்லா ஒருவர்க்குத் தம்வாயில் சொல்கூற்றம்

மெல்இலை வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்

அல்லவை செய்வார்க்கு அறம்கூற்றம், கூற்றமே
இல்இருந்து தீங்கு ஒழுகுவாள்"

சிலப்பதிகாரத்தைப் போலவே, நான்மணிக்கடிகையிலும் அறம் உயிரைப் பறிக்கும் கூற்றுவனாக வரும் எனச் சொல்கிறது.

ஔவையாரோ ஆத்திச்சூடியில் வெகு எளிதாக "அறஞ்செய விரும்பு" எனச் சொல்கிறார். தர்மம் செய்ய விரும்பு, நல்ல காரியங்களைச் செய்ய விரும்பு என்று குறிப்பிடுகின்றார்.

வள்ளுவப் பேராசான் தமிழ்த் திருமறையாம் திருக்குறளில் "அறம்" என்ற சொல்லை எப்படி எல்லாம் லாவகமாகக் கையாளுகின்றார் எனப் பார்க்க வேண்டும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

உலகோர் இடத்து அன்பும், அனைவருக்கும் கொடுத்து வாழும் அறமும் இருந்தால், இல்வாழ்க்கையில் பண்பும் பயனுமாக அமையும் எனக் குறிப்பிடுகின்றார்.

இங்கே அறம் தர்மம் செய்தல், நியாயம் தவறாது நேர்மையாக இருத்தல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. மற்றோர் இடத்தில், இல்வாழ்க்கை அதிகாரத்தில்,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"

இங்கு அறம் எனப்படுவது தர்மம் எனச் சொல்லப்படுவதே குடும்ப வாழ்க்கைதான். பிறரால் பழிக்கப்படாமல் வாழ்தலே போதும் என்கிறார்.

அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற"

குற்றம் இல்லாத தூய்மையான மனத்துடன் இருப்பதே அனைத்து அறங்களிலும் சிறந்த அறம் என்று கூறுகிறார். இங்கு மாசிலா மனமோடு இருத்தலே "அறம்" என்கிறார் வள்ளுவர்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாசொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் நீக்கிவிட்டுச் செய்கின்ற அனைத்துக் காரியங்களையும் அறம் எனவும் கூறுகின்றார்.

முகமலர்ச்சியோடு இனிமை தரப் பார்ப்பதும், மனப்பூர்வமாக இனிய வார்த்தைகளைப் பேசுவதும் அறம் என்கிறார்.

"முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்"

பிறனில் விழையாமை என்ற அதிகாரத்தில் பிறன்மனை நோக்காத பேராண்மை அறம் எனச் சொல்கிறார்.

தமிழ்மறையில் வள்ளுவப் பேராசான் 1330 குறட்பாக்களில் 52 இடங்களில் குறட்பாக்களில் அறம் என்ற சொல்லைப் பலவகைப் பொருள் தரும் வண்ணம் எடுத்து ஆண்டுள்ளார்.

அன்பாக இருப்பது அறம், இனிமையாக இன்சொல் பேசுவது அறம், கடுமையான சொற்களைச் சொல்லாதிருத்தல் அறம், நல்லவற்றையே நாடுவது அறம், மனதில் மாசு இல்லாது இருத்தல் அறம், பொய் சொல்லாது இருத்தல் அறம், சினம் கொள்ளாது இருத்தல் அறம், பொறாமை உணர்ச்சி இல்லாமை அறம், பிறருக்குத் தீங்குச் செய்யாமை அறம், புறம் கூறாமை அறம், பகிர்ந்து உண்பது அறம், உயிர்களைக் கொல்லாதிருத்தல் அறம், தீமையில்லாத வழியில் பொருள்சேர்ப்பது அறம், நேர்மையான இல்லற வாழ்வே அறம், அடக்கமுடன் இருப்பது அறம், துறவியரைப் போற்றுவது அறம், மானத்துடன் வாழ்வது அறம், உயிருக்கு ஊக்கம் தருவது அறம் எனப் பல வகையிலும் 'அறம்' என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கின்றார்.

ஆக, 'அறம்' பற்றி நாம் பேசுதலும் சிந்தித்தலும் எழுதுதலும் நம்மை உயர்த்தாது; நமக்கு நன்மை தராது. எப்போது அறத்தைப் பின்பற்றி நடக்கின்றோமோ, அப்போதுதான் அது நமக்குப் பயன் தரும். அறச்செயல்கள் செய்து நம் அறத்தை எல்லா மட்டங்களிலும் கடைப்பிடித்து வாழ்வில் உயர்வோம் பிறரையும் உயர்த்துவோம்.

●

கட்டுரை



திருச்செங்கோடு
அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில்

திருஞானசம்பந்தர்

சம்பந்தர் தந்த மருந்து

இன்று, கோவிட்–*19* (Covid-19) என்னும் கொரோனா குடும்பத்தைச் சேர்ந்த வைரஸ், உலகமெங்கும் பரவி உள்ளது. அதுபோல அன்று ஒரு வைரஸ் கொடிமாடச் செங்குன்றூர் என்னும் திருச்செங்கோட்டில் பரவி இருந்தது.

இரண்டு வைரசுமே கண்ணுக்குப் புலப்படாதவை. காரணம் இரண்டுமே அணுவினும் சிறியவை. ஆனால் அழிக்கும் ஆற்றலில் கொரோனா வைரஸ் அணுகுண்டுக்கு நிகரானது. திருச்செங்கோட்டில் பரவி இருந்த வைரசுக்கு அந்த அளவுக்கு அழிக்கும் ஆற்றல் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் அது பாதிப்பை ஏற்படுத்தாமல் இல்லை.

கொரோனா வைரசுக்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. திருச்செங்கோட்டில் பரவி இருந்த வைரசுக்கு மருந்து இருந்ததா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் அப்போது அங்குச் சென்ற திரு ஞானசம்பந்தர் ஒரு மருந்தைத் தந்தார். அதனால் அந்த வைரஸ் அந்த ஊரை மட்டுமன்று, அந்த நாட்டை விட்டே நீங்கியது. அந்த நிகழ்வு பெரியபுராணப் பெருங்காப்பியத்தில் வருகிறது.

தலம் தலமாகச் சென்று தமிழ்ப் பதிகம் பாடித் தாண்டவப் பெருமானைத் தலையாரக் கும்பிட்டு வந்த திருஞானசம்பந்தர், திருச்செங்கோட்டுக்குச் சென்றார். அங்கே மலைமீது கோவில் கொண்டிருக்கும் மாதொரு பாகனை “வெந்த வெண்ணீறணிந்து” என்று தொடங்கும் வெந்திராத வியன்தமிழை விழைந்திழைந்து பாடிப் பரவினார். பின்னர் அருகிலுள்ள சிவாலயங்களுக்குச் சென்று வழிபட்டு வர விரும்பி அங்கே தங்கினார்.

அருகிலுள்ள சிவாலயங்களுக்கும், குறிப்பாகத் ‘திருநணா’ என்னும் பவானிக்கும் சென்று வழிபட்டு வந்தபின், மாதொருபாகனைக் கூடும் அன்பினில் மேலும் மேலும் கும்பிட விரும்பி அத்தலத்திலேயே பலநாட்கள் தங்கியிருந்தார். அவருடன் சென்ற அடியார்களும் அவருடன் தங்கியிருந்தனர்.

பே.சா. கர்ணசேகரன்

அப்போது அங்கே பனிக்காலம் வந்துற்றது. வானம் வஞ்சனை இன்றிப் பனியைக் கொட்டியது. குளிர் எங்கும் பரவிக் கூத்தாடியது. அக்கூத்தின் விளைவைக் கூத்தப்பெருமான் அன்பர் சேக்கிழார் இப்படிக் கூறுகிறார்.

'சூரிய வெப்பத்திற்குக் கருகாத தாமரை மலர்கள், பனிக் குளிருக்குக் கருகிப் போயினவாம். வாட்டும் குளிருக்கு அஞ்சி வண்டுகள் அவ்வூருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கூண்டோடு ஊரைக் காலி செய்தனவாம். ஆடவர்கள், தம் மனைவியரின் கொங்கைக் கலசங்களுக்கு இடையே தம் தோள்களையும் மார்பையும் அடக்கிக் கொண்டனராம். நெருப்புப் பந்தான கதிரவனும் கடுங்குளிருக்கு அஞ்சி, ஒருபுறம் ஒதுங்கி இருந்து தன் கதிர்க் கரங்களை முழுமையாக நீட்ட மாட்டாதவனாய், சிறிது நீட்டுவதும் சிறிது மடக்கிக் கொள்வதுமாக இருந்தானாம். அதனால் வெயில் சிறிது தலைகாட்டுவதும், காட்டாததுமாக இருந்ததாம்.'

இத்தனை விளைவுகளுக்கும் காரணமான குளிரில் பல நாள்கள் இருந்தமையால், சம்பந்தரோடு சென்றிருந்த அடியார்களுக்குத் தீய பனிச் சுரம் வந்துவிட்டது. எப்படி வந்திருக்கும் என்பதை நாம் இப்படி யூகிக்கலாம்.

திருச்செங்கோட்டில் அன்று நிலவிய அக்குளிர்ச் சூழலை விரும்பிய ஒருவகை வைரஸ், கோடையில் கோடைவாசத்தலத்துக்கு விரும்பிச் செல்லும் ஒருவனைப் போல் அவ்வூருக்கு உல்லாசப் பயணம் சென்றிருக்க வேண்டும். மனித உடல்தான் தாம் தங்கியிருப்பதற்கும் பல்கிப் பெருகுவதற்கும் ஏற்ற விடுதி என்று ஒருவனின் உடலில் அது புகுந்திருக்க வேண்டும்.

அவ்வுடலின் நோய் எதிர்ப்பு மண்டலம், உட்புகுந்த அந்த வைரசை விரட்ட, அதனுடன் போராடியிருக்க வேண்டும். அவ்வுரசலில் அவ்வுடலின் வெப்பம் கூடியிருக்கும். கூடிய அவ் வெப்பம்தான் சுரம். உரசலில் வைரஸ் வென்றிருக்கும். அதனால் சுரம் உச்சத்தைத் தொட்டிருக்கும். அப்போது அந்த வைரஸ் பலவாகப் பெருகி இருக்கும். பெருகிய அவை, அவ்வொருவனிடம் இருந்து, இருமல் மூலமாகவோ, தொடுதல் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது ஒருவகையிலோ சிலருக்குத் தொற்றி இருக்கும். அச்சிலரிடம் இருந்து இன்னும் சிலருக்குத் தொற்றி இருக்கும்.

பவானி சங்கமேஸ்வரர் திருக்கோவில்

இவ்வாறே அவ்வூரில் பலரும், வைரஸ் தொற்றாளராக ஆகியிருப்பர். வைரஸ் தொற்றாளருக்குச் சுரம் வருவது இயல்பு. ஆகையால், அவ் வைரஸ் தொற்றாளர் அனைவருக்கும் சுரம் வந்திருக்க வேண்டும். இப்படித்தான் சம்பந்தருடன் சென்ற அடியார்களுக்கும், வைரஸ் தொற்றிச் சுரம் வந்திருக்க வேண்டும்.

சுரம் அனைவரையும் வாட்டி வதக்கியது. வதை பொறுக்காத அடியார்கள், வணக்கத்திற்குரிய தம் தலைவர் சம்பந்தரை அணுகி, தம்மை வதைக்கும் வதையை வதைக்குமாறு வேண்டினர்.

சேக்கிழார்

சம்பந்தரோ, சம்புவை நினைந்து வணங்கி, "பனிக் காலத்தில் இவ்வூரில் சுரம் வருவது இயல்பு. ஆகையால், பனிக் காலத்தில் இங்கு வந்த நமக்கும் சுரம் வந்துவிட்டது. அதற்காகப் பயப்படாதீர்கள். அதனால் வரும் கொடுமைகள் எதுவும் நம்மை வந்து சேராது" என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி 'திருநீலகண்டம்' என்னும் மருந்தைக் கொடுத்தார்.

அமரரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்த போது பொங்கி எழுந்தது ஒரு நஞ்சு. கடைவதற்குக் கயிறாகப் பயன்படுத்தப்பட்ட வாசுகிப் பாம்பு வலிதாங்காமல் கக்கியது இன்னொரு நஞ்சு. இரண்டு நஞ்சையும் அப்படியே விட்டிருந்தால் பிரபஞ்சம் அழிந் திருக்கும். கருணைமிக்க சிவபெரு மான் இரண்டையும் திரட்டி உண்டார். அதை உள்ளே செல்ல விடாமல் அவருடைய கண்டம் பிடித்து வைத்துக் கொண்டது. அதனால் அது நீலநிறமானது. நீலநிற மானதால் அது திருநீலகண்டம் என்று பேர் பெற்றது. கண்டம் அந்த நஞ்சைப் பிடித்து வைத்துக் கொண்டு உலகங்களுக்கும் உயிர்களுக்கும் கண்டம் வராமற் காத்தது.

அதேபோல் அக்கண்டம் அங்கே தொற்றியிருக்கும் சுரத்திலிருந்து (வைரசி லிருந்து) தம்மடியாரையும், அவ்வூராரையும் காக்கும் என்று சம்பந்தர் உறுதி யாக நம்பினார். அதனால் அத்திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டுத் திருநீல கண்டப் பதிகம் பாடினார். பத்துப் பாடல்களைக் கொண்ட அப்பதிகம்,

"அவ்வினைக்கு இவ்வினை யாம் என்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும்
உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்துஎம் பிரான்கழல்
போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எமைத்தீண்டப்
பெறாதிரு நீலகண்டம்"

என்ற பாடலோடு தொடங்குகிறது.

இதுவே சம்பந்தர் தந்த அந்த மருந் தாகும். இறுதிப் பாடல் தவிர மற்ற பாடல்களின் இறுதி அடியில், முதற் பாடலின் இறுதி அடியில் கூறிய வாறே, அதாவது திருநீல கண்டத்தின் மீது ஆணை, தீவினை வந்து தீண் டாது என்று கூறுகிறார். அதனால், அம்மருந்து வீரியம் மிக்கதாக இருந்தது.

சம்பந்தர் தந்த அந்த வீரியம் மிக்க மருந்தால், சுரம் (வைரஸ்) அவ்வூரை மட்டுமல்ல, அந்த நாட்டை விட்டே விலகியது. மருந்தின் இச்சீரைப் பரவும் போது,

"மேய அப் பொற்பதி வாழ்பவர்க்கே அன்றி
மேவும் அந்நாள்
தீய பனிப்பிணி அந்நாடு அடங்கவுந்தீர்ந்தது அன்றே"
(பெரியபுராணம் – 2234)

என்று பரவினார் தொண்டர் சீர்பர வுவார்.

சம்பந்தர் தந்த திருநீலகண்டப் பதிக மருந்து, அன்று திருச்செங்கோட் டில் பரவி இருந்த வைரசை ஒழித்தது போல், இன்று உலகெங்கும் பரவி இருக்கும் கொரோனா வைரசையும் ஒழிக்க வல்லது. இது உட்கொள்ளும் மருந்தன்று. ஓதும் மருந்து. இதை ஓத ஓத, இதில் இருந்து வெளிப்படும் அரு ளாற்றல், தீயஆற்றலான கொரோனா வைரசை ஒழிக்கும்; கவசமாக இருந்து காக்கும். ●

டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன்

கட்டுரை

கட்சி இல்லாத ஆட்சி

தலைப்பைப் பார்க்கும் போதே ஒரு மலைப்பு, வியப்பு, வெறுப்பு, கடுப்பு எல்லாம் தோன்றலாம். ஆனால், ஆழ்ந்து பொறுமையாக, எண்ணத்தின் எழுச்சியாக அதன் சாத்தியக் கூறுகளை அலசிச் சிந்தித்தால் இதன் உண்மை விளங்கும்.

இக்காலத்தில் அரசியல் முழுவது மாகக் கட்சியின் மூலமாகத்தான் நடைபெறுகிறது. ஆனால் முற்றிலும் நல்லாட்சியாக நடைபெறுவதில்லை. ஏனெனில், தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவோரில் மிகப் பெரும்பாலும் மக்களுக்குப் பூரண நலமளிக்கும் நல்மனம், திறமை கொண்ட, தீமையற்ற நல்லோராக இருக்க இன்றைய சூழ்நிலையில் சாத்தியமில்லை.

நல்லாட்சி அமைய வேண்டுமானால், மக்களும் நல்ல குணங்களுடன், நல் எண்ணங்களுடன் நல்லவற்றையே நாடுபவர்களாக, தீமையைக் கனவிலும் கருதாதவர்களாக இருக்க வேண்டும். மக்கள் எவ்வாறு உளரோ, அவ்வாறே ஆட்சி அமையும்.

மேலும் மக்களில் பலர் பொது நலம் நாடுபவர்களாக இல்லாமல், தானுண்டு, தன் குடும்பம் உண்டு, தொழில் உண்டு என்று பொது நலத்தில் நாட்டம் இல்லாதவராக இருப்பர். இவ்வகைப் பெரும்பாலோர் தேர்தலின்போது, வேட்பாளர்கள் தான் விரும்பும் தன்மைக்கு ஒப்பிலாராக இருந்தால், இருப்பவரில் பரவாயில்லை என்பவருக்கு ஓட்டுப் போடுவர்.

இன்றைய தேர்தல்களில் பணம், கையூட்டு முதலியவை அதிகம் இருப்பதால், நல்ல மனச்சாட்சிக்கு இடம் அற்றுப்போகிறது. அன்றைய பொழுதிற்கு வந்த லாபமே அவர்களுக்குத் திருப்தி. இவற்றையெல்லாம் நீக்கி நல்லாட்சி வருவது சாத்தியமா? சாத்தியம் மிகமிக கடினம்தான்.

குற்றச்சாட்டுள்ள அரசியலாளர்களின் பெயர்களை அறிவிக்கும்படி உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டுள்ளது. இதுகாறும் எந்தவிதத் தகவலும் இல்லை. பேச்சும் இல்லை, மூச்சும் இல்லை. அடுத்து உச்சநீதிமன்றம் என்ன ஏற்பாடு செய்யும் என்று எதிர்பார்க்க வேண்டும். தேர்தலில் ஓட்டளிக்கும் மக்களே குற்றச்சாட்டுள்ள வேட்பாளருக்கு ஓட்டுப் போடாமலிருக்க வேண்டும். கையூட்டு வாங்கும் மக்கள் இதை எப்படிச் செய்ய முடியும்?

நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு மகாத்மா காந்தி சாத்வீக முறையில் போராடிப் பெற பல வருடங்கள் ஆயிற்று. ஏதேனும் ஒரு நல்ல திட்டம் அல்லது ஆட்சி முறை அமைய வேண்டுமானால், அது மிகவும் கடினம். பெரு முயற்சி வேண்டும். அதற்கு மக்களின் ஏகோபித்த அனுதாபமும், அக்கறையும், அபிமானமும் வேண்டும்.

இந்தியாவிற்கு விடுதலை

முயற்சியும் ஆவலும், பெரும்பாலும் இல்லாமல் போனது. ஆகவே, ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு அகற்றிச் சுதந்திரம் பெற ஏறக்குறைய 200 ஆண்டுகள் ஆயிற்று. எனினும் இந்தியா பூரண சுதந்திரம் பெற்றதில் அனைவரும் மகிழ்ச்சி யடைந்தனர். ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடினர், பாடினர். அதுபோலவே கட்சியில் லாத ஆட்சி என்ற திட்டமும் என்றோ ஒரு நாள் உதயமாகும்.

மாமனிதர் அப்துல்கலாம் சொன்னது போல், நாம் பகல் கனவு காண வேண்டும். கனவு எண்ண மாக மிளிர வேண்டும். எண்ணங் கள் செயலாக வேண்டும். மக்கள் ஒற்றுமையோடு, நல்ல சிந்தனையோடு, சீரிய முயற்சியோடு முயன்றால் எதுவும் முடியும். எண் ணத்தின் எழுச்சியே வெற்றி.

காந்திஜி

இப்போது கட்சி இல்லாத ஆட்சி என்றால் என்ன, எப்படி, எப்போது என்பதை விளக்குவோம். தேர்தலில் சுமார் 3 அல்லது 4 கட்சிகள் போட்டியிடும். ஆனால் சுயேச்சைகள் 10–லிருந்து சுமார் 24 பேர்கள் வரைகூடப் போட்டியிடு வார்கள். சுயேச்சைகள் அநேகமாக வோட்டுகளைப் பிரிக்கவும், சிதறடிக் கவுமே நிற்கிறார்கள். இதனால் சுயேச்சைகள் யாரும் வெற்றி யடைவதில்லை.

கட்சி சார்பில்லாத ஓர் உத்தமர், நெறியாளர், பண்புடையவர், நல்லாட்சியில் நாட்டமுள்ளவர் ஒருவரை நாம் தேர்ந்தெடுத்து, அவர் மட்டும் ஒரே ஒரு சுயேச்சை வேட் பாளராகத் தேர்தலில் போட்டியிட் டால், இதற்கு மக்கள் பெருமளவு விருப்பமுள்ளவராக அவருக்குப் பெரும்பான்மையான வோட்டுகள் அளித்தால், அந்த வேட்பாளர் வெற்றியடைவார்.

இதில் முக்கியம் என்னவென்றால், அந்தச் சுயேச்சை வேட்பாளர் ஒருவ ராக மட்டுமே இருக்க வேண்டும். பலரும் போற்றும், விரும்பும் நல்ல வராக இருக்க வேண்டும். இவ்வாறு எல்லாத் தொகுதிகளிலும் இம்முயற்சி வெற்றியடைந்தால் நல் அமைச்சு அமையலாம். நல்ல ஆட்சியும் அமைந்து மக்களுக்குச் சிறந்த நன்மை, நல்ல முன்னேற்றம் அடைந்து நாடும் வீடும் சீர்பெறும்.

ஆகவே, நல்லெண்ணம் கொண்ட நல்மக்கள் என்ன செய்ய வேண்டும்? இப்போது முதலே நல்ல குணமுடைய, நேர்மையான சுயேச்சை வேட்பாளரைக் கண்டு பிடிக்க வேண்டும். இவ் வாறு நிற்பதற்குத் துணிவும் மனமும் உள்ள நபராக இருக்க வேண்டும். சமுதா யத்தில் நல்ல சிந்தனையுள்ள வராக மக்கள் மனதை மாற்ற வேண்டும். செல்வாக்கு உள்ளவர்கள் இதற்கு ஆதார மாக இருக்க வேண்டும்.

அப்துல்கலாம்

இந்த முறை சாத்தியமா? என்ற எண்ணமே முதலில் தோன்றும். ஆழ்ந்து சிந்தனை செய்தால், இது நல்ல ஆக்கப்பூர்வமான எண்ணமே என்று தோன்றும். இந்த அமைப்பு ஏற்படுவது மிகமிகக் கடினம்தான். நல்லாட்சி அமைய, நாம் சிந்தனை செய்வது நல்லது. என்றோ ஒரு நாள் இம்முயற்சி வெற்றி அடையும். நல்லதையே எண்ணுவோம், நல்ல தையே செய்வோம்.

●

கட்டுரை

உள்ளாட்சித் தலைவர்களே வாசியுங்கள்!

டாக்டர் க. பழனித்துரை

தமிழகத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு கிராமப்புற உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் முடிந்து, தலைவர்கள் பதவியேற்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து, ஆட்சி செய்ய ஆரம்பித்துவிட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளின் தலைமைத்துவத்தையும், செயல்திறன் கூட்டுவதற்கும் முதல் கட்டப் பயிற்சியினைத் தமிழக அரசு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் பயிற்சி நிறுவனத்தின் மூலம் வழங்க ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கிறது.

சாயத்துத் தலைவர்களுக்கும், ஒன்றியக்குழுத் தலைவர்களுக்கும் தலைமைத்துவப் பயிற்சியாக அறிமுக நிலையில் நடத்துவது ஒரு சிறப்பு நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

இதில் மிக முக்கியமாகப் பயிற்சிக்கு வரும் தலைவர்களுக்குத் தேவையான செய்திகளைப் புத்தகங்களாகத் தொகுத்து வழங்குகின்றனர். இதில் ஒன்று சிற்றூராட்சி, ஒன்றியம், மாவட்டம் என்ற மூன்று அடுக்குப் பஞ்சாயத்துக்களுக்கும் தனித்தனியே

இந்த ஆண்டு அகில இந்திய அளவில் தமிழகத்தின் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் பயிற்சி நிறுவனம் தன் செயல்பாட்டால் முதல் பரிசைப் பெற்றுள்ள நிலையில், இந்தப் பயிற்சியை மிகச் சீரிய முறையில் வடிவமைத்து மாவட்டப் பஞ்

ஆளுமை, நிர்வாகம் மற்றும் மேலாண்மை பற்றி ஒரு புத்தகம் தயார் செய்து தந்துள்ளனர்.

அந்தப் புத்தகத்தில் மூன்று அமைப்புக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணிகள், அதிகாரங்கள், பொறுப்புக்கள், நிர்வாக

நடைமுறைகள், அனைத்தும் விவரிக் கப்பட்டிருக்கின்றன. இந்தப் புத்தகத் துடன் இன்னும் இரண்டு புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த இரண்டு புத்தகங்களில் ஒன்றில் ஊரக வளர்ச்சித்துறையால் என்னென்ன திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படுகின்றன என்ற விபரங்களைத் தொகுத்துத் தந்துள் ளனர். அதேபோன்று, இரண்டாவது புத்தகத்தில் மற்ற துறைகளின் மூல மாகக் கிராமப்புறங்களில் நடை முறைப்படுத்துகின்ற திட்டங்களின் விபரங்களைத் தொகுத்துத் தந்துள் ளனர். இந்த இரண்டு புத்தகங்களில் அரசாங்கத் துறைகளால் நிறை வேற்றப்படும் 400–க்கு மேற்பட்ட திட்டங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இந்த மூன்று புத்தகங்களையும் நம் தலைவர்கள் படித்து உள்வாங்கிப் புரிந்துகொண்டு செயல்பட்டால், மிகச் சிறப்பானதொரு சேவையை மக்களுக்கு அளித்திட முடியும்.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் புதிய பஞ்சாயத்து அரசாங்கத்தின் தன்மை, அதன் அடிப்படைச் செயல் பாடுகளான பொருளாதார மேம் பாடு, சமூக நீதி வழங்குதல், சமூகத்தை ஜனநாயகப்படுத்துதல், மக்களைத் திரட்டி ஆளுகையிலும், ஊரக வளர்ச்சிச் செயல்பாடுகளிலும் இணைத்தல், வளர்ச்சி மற்றும் மேம் பாட்டுக்கான திட்டமியற்றிச் செயல் படல் முதலிய அம்சங்கள் விளக்கப் பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைவர்கள் அனைவரும் அரசாங்கத் தில் மேலாண்மை மற்றும் நிர்வாகம் செய்வது போன்ற அம்சங்கள் நம் தலைவர்களுக்கு விளக்கப்படுகின்றன.

அதேபோல் கிராமப் பஞ்சா யத்துத் தலைவர்களுக்கும் ஓர் அறி முகப் பயிற்சி நடைபெற்று முடிந்திருக் கிறது. அவர்களுக்கும் ஒரு விளக்கக் கையேடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கையேடுகள் அனைத்தும் மிக எளிமையாகப் புரிந்துகொள்ளும் நிலையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கையேடுகளை நம் தலைவர் கள் படித்துப் புரிந்து செயல்பட்டால், மிகப் பெரிய மாற்றங்களை நம் கிராமப்புறங்களில் ஏற்படுத்தி விடலாம்.

அரசுத்துறைகள் மூலமாகக் கிராமங்களுக்குப் பொது வசதிகளும், தனிநபர் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அந்த வசதிகளும் தனிநபர் திட்டங்களும் முறையாக நடைமுறைப்படுத்துகின்றனவா என் பதைத் தங்களுக்குக் கொடுத் திருக்கக் கூடிய ஆளுகைக்கான அதிகாரங் களைப் பயன்படுத்தி ஆய்வு செய்து, அரசுத்துறைகளுக்கு ஆலோசனை வழங்கிச் சிறப்புடன் பணியாற்ற முடி யும்.

இந்த மூன்றடுக்குப் பஞ்சாயத்து அரசாங்கத்தில் எவற்றையெல்லாம் சிற்றூராட்சியால் செய்துவிட முடி யுமோ, அவற்றையெல்லாம் சிற் றூராட்சி செய்துவிட அனுமதித்து விட்டு, எவற்றையெல்லாம் சிற் றூராட்சிகளால் செய்ய இயலவில் லையோ, அந்தப் பணிகளை மட்டும் ஒன்றியப் பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டும்.

எந்தப் பணிகளையெல்லாம் ஒன் றியப் பஞ்சாயத்துக்கள் செய்ய இய லுமோ, அவ்வளவு வேலைகளையும் ஒன்றிய பஞ்சாயத்துக்கள் செய்திட வேண்டும். எவற்றையெல்லாம் ஒன் றியப் பஞ்சாயத்துக்களில் செய்ய இயலவில்லையோ, அந்தப் பணிகளை மாவட்டப் பஞ்சாயத்துக்கள் செய்திட வேண்டும்.

மூன்றாவதாக, இந்த மூன்று அடுக் குகளும் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட்டாக வேண்டும். இந்த இணைப்புத்தான் உள்ளாட்சிச் செயல் பாடுகளுக்கு மெருகூட்டுவது. மூன்

றும் இணைந்தால்தான் அரசாங்கம் என்பதும் விளக்கப்படுகிறது.

இன்றைய சூழலில், மகத்தான தொரு வாய்ப்பு கிராமப் புனர மைப்புக்கு உருவாக்கப்பட்டுள்ளது. கிராம மேம்பாட்டுக்கான திட்டம் தயாரிப்பது என்பது கட்டாயக் கட மையாக உள்ளது. அந்தத் திட்ட மிடுதலுக்கான புதிய வழிகாட்டு நெறி முறை மத்திய அரசால் உருவாக் கப்பட்டு, மத்திய அரசின் பஞ்சாயத்து அமைச்சகத் தின் வலைத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதை அப்படியே பின் பற்றி, ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு வளர்ச்சித் திட்டத் தினைத் தயாரிக்க வேண் டும். இதற்கு இரண்டு விதமான புள்ளி விபரங்கள் தேவைப்படும்.



ஒன்று, கிராமத்தில் வாழும் குடும்பங்களின் சமூக, பொருளாதார நிலை பற்றியது. இரண்டாவது, கிராமத்தில் உள்ள வளங்கள் மற்றும் வசதிகளைப் பற்றியது. இந்த இரண் டையும் தயார் செய்வதற்குத் தேவை யான புள்ளிவிபரச் சேகரிப்புப் படிவ மும் மத்திய அரசே தந்துள்ளது. இவற்றை வைத்து, அருகில் உள்ள பல் கலைக் கழகத்தையோ, கல்லூரி யையோ அணுகி, புள்ளி விபரங் களைச் சேகரித்துக் கிராம வளர்ச்சிக் காகவும் மேம்பாட்டுக்காகவும் ஒரு திட்டம் தயாரித்திடலாம்.

அப்படித் திட்டம் தயாரிக்கும் போது, கிராம மக்களின் தேவை களைப் பூர்த்தி செய்ய எல்லாத் துறைகளில் நடைமுறைப்படுத்தும் திட்டச் செயல்பாடுகளைக் கிராமத் திட்டத்தில் இணைத்து 37 துறை களின் செயல்பாடுகளையும் இணைத்து விடலாம்.

அதுமட்டுமல்ல, கிராமத்தில் மிகவும் பொரு ளாதாரத்தில் பின் தங் கியுள்ள குடும்பங் களைத் தொடர்ந்து கண்காணித்து, அரசின் நலத் திட்டங்களை அந்தக் குடும்பங்களுக்குச் சென்றடையு மாறு பார்த்து, வறுமையற்ற கிராமமா கவும், எல்லா அடிப்படை வசதிகளை யும் பல்துறைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி, அனைத்துத் தரப்பு மக்களும் அமைதியாகவும் சுதந் திரமாகவும், அறிவியல் ரீதியாகவும் மறியாதையுடனும் மானுட வாழ்க் கையை எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழப் பஞ்சாயத்துக்கள் வழி வகை காண வேண்டும்.

எனவே, இவ்வளவு வாய்ப்புக்கள் உள்ள பஞ்சாயத்து அரசாங்கத்தை முறையாக நிர்வகிக்கத் தேவை – நம் தலைவர்கள் தங்களுக்குத் தந்த மூன்று புத்தகங்களையும் படிக்க வேண்டும். அந்த மூன்று புத்தகங்களையும் நன்குப் படித்துப் புரிந்து கொண்டு விட்டால், ஆளுகையும் நிர்வாகமும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் கையில். இல்லையென்றால், இவர்கள் அதிகாரிகள் கையில் என்பதை மட் டும் நினைவில் வைத்து வாசிக்கத் தயாராக வேண்டும். ●

கட்டுரை

தெ. முருகசாமி

படைக்கப்படும் இலக்கியங்கள் யாவும் மனித வாழ்விலிருந்து முகிழ்க் கப்படுவனவேயாகும் என்றால், அவற்றை ஒரு நுண்கலைப் (Fine Art) படைப்பு எனலாம். அவை பற்றிய ஆராய்ச்சியான கல்வியை அறிவியல் (Science) எனலாம். இவற்றுள் கவிதை, உரைநடை என்ற பாகுபாடும் முதல் நூல், மொழிபெயர்ப்பு நூல் என்ற வேறுபாடுகள் இருப்பினும் அவை யாவும் மானுடத்தை நோக்கிப் பயணித்தவை என்ற கருத்தின் பொது மையே இலக்கிய உயிர்ப்பாக உள்ளது எனலாம்.

இந்த இலக்கிய உயிர்ப்புக்குப் பலதரப்பட்ட விளக்கங்கள் உலகிய லாக, உளவியலாக அமைந்த தக்க எடுத்துக்காட்டுடன் உணரும்போது தான் மெய், பொய் (நிஜம், நிழல்) எனப் பிரித்தறிய முடியும். அங்ஙனம் இலக்கியம் தரம் பிரிக்கப்படும்போது மெய் நிற்க, பொய் விழுந்து படுவதை இலக்கிய வாசிப்பால் தெளிவாக உணர முடியும். அந்த வகையில், இலக்கிய வீதியில் புலவர்கள் விளை யாடிய பல்வேறு இலக்கிய விளை யாட்டில் கிளிச் சிறையாக அறியப் பட்ட ஒன்றுதான் "என் நெஞ்சை உன் நெஞ்சாய் ஆக்கிப் பார்" என்றதொரு வரிப் பந்தாகும்.

இத்தொடர் – பாவேந்தர் பாரதி தாசன் படைத்த சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற குறுங்காவியத்தில் காதல னாம் குப்பன் தன் காதலியாம் வஞ்சியிடம் காதல் என்னும் பெரு மூச்சுத் திணறலாக வெளிப்படுத்திய திருவாசகமோ, திருவாய் மொழியோ ஏதோ ஒன்று எனலாம்.

சஞ்சீவி மலையேறி மூலிகை பறிக்கத்தேடும் முயற்சியில் அவ்வப் போது மின்னல் வெட்டாக வரும் காதல் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள, கரைபுரண்ட காதல் உரையாடலில் காதலன், காதலியிடம், "மூலிகை கொய்து தருவேன், நீ என்ன தரு வாய்?" என்றான்.

இதற்கு வஞ்சி, "இலை கொடுத் தால் முத்தம் தருவேன்" என்றாள்.



"அப்படியானால் ஒரு முத்தம் அச்சார மாய்ப் போடேன்" என்றான் குப்பன்.

மூலிகைக்குப் பக்கத்தில் முத்தம் கிடைக்கும் என வஞ்சி சொன்னதும் அவன் விட்டெறியும் கல் வேகத்தில் மூலிகையைத் தேடிக்கொண்டு வந்ததும் – வஞ்சி முத்தம் தரத் தாமதித்ததால் துடிதுடித்த குப்பன், "என் நெஞ்சை உன் நெஞ்சம் ஆக்கிப்பார்" என்றுரைத்தான்.

ஒருவர் அடையும் துன்பத்தை மற்றவர் அடைய வேண்டியதில்லையானாலும் ஓரளவேனும் அத்துன்பத்திற்காக இரங்குவதாய் இருந்தால்தான் ஒரோ வழி உதவ முடியும். அஃதில்லையேல் அறிவினால் பெற்ற பயன்தான் யாது என வினவுகிறார் வள்ளுவர்.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை."

மற்றவரின் துன்பத்தைத் தன்னுடைய துன்பம்போல் கருத முன்வராவிட்டால், மானுடன் ஒருவன் பெற்ற அறிவினால் ஆகும் பயன்தான் உண்டோ? இல்லை என்ற கருத்தின் வழிதான் கண்ணோட்டத்து உள்ளது உலகியல் (572) என்ற உண்மையை உணரமுடிகின்றது.

மேற்கண்ட குப்பனின் குரல் குறுங்காவியத்துக்கு மட்டும் அன்று. தொல்லுலகக் குரல்! பரிவும் இரக்கமும்தான் உலகை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன. இதைத்தான் இளங்கோவடிகளின் குரலாகக் கேட்க முடிகிறது. பிறர் படும் துன்பத்திற்கு இரங்கி, அதைப் போக்கச் சும்மா இராமல், இடம் பெயர்ந்து நீங்கிச் சென்று உதவுங்கள் என்பதற்காக, "பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்" எனக் குரல் கொடுத்தார் இளங்கோ!

இராமானுஜரைப் பார்த்து "காயப் பட்டவரைக் கண்டால் நீங்கள் இரங்குவீர் களா?" என்று கேட்டதோடு "மருத்துவ உதவி செய்வீர்களா?" – என்றார் களாம்! சீடர்கள்.

அதற்கு அவர் "நான் காயப்பட்டவராகவே மாறி விடுவேன்" என்றாராம்.

அப்படித்தான் அன்னை தெரசாவின் தொண்டு இருந்தது. நாம் நமக்காக மட்டுமன்று, பிறருக்காகவும்தான் என்று எண்ணிச் செயல்படும்போதுதான் மானுடம் வென்றதாகப் பிரகடனப் படுத்த முடியும்.

தன்னை அடைக்கலம் அடைந்த புறாவின் துன்பத்தைத் தன் துன்பமாக நேர்ந்து தனது உடல் தசையையே அரிந்து தராசுத் தட்டில் வைத்தான் சிபி என்னும் மன்னன்.

கன்றினை இழந்த பசுவின் கண்ணீரானது தன் நெஞ்சைச் சுட்டதால், அப் பசுவின் துன்பத்தைத் தன் துன்பமாக நேர்ந்து, அமைச்சர்கள் சொன்ன சடங்குகளை (பரிகாரங்களை) எல்லாம் முற்றத்தள்ளி, ஒரே மகனைத் தேர்க்காலில் இட்டு நீதியை நிலை நாட்டினான் மனுநீதிச்சோழன்.

சிபியும் மனுவும் பிறிதின் நோயைத் தம் நோய்போல் போற்றியதால், இரக்கத்திற்கும் பரிவுக்கும் சுட்டி உணர்த்தும் எடுத்துக்காட்டுகளாக உள்ளனர். இவர்கள் பற்றிச் சங்க நூல்களும் சிலப்பதிகாரக் காப்பியமும் கலிங்கத்துப் பரணியும் தமிழ்ப் பண்பாட்டின் சின்னங்களாக அடையாளப்படுத்தியுள்ளன.

ஆக, ஒருவர் துடிப்பைத் தன் துடிப்பாக மற்றொருவர் உள் வாங்கும் போது தான் உலகம் உயிரோடு பயணிக்கும் எனத் தெரிகிறது. அத்தகையோனை "மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வான்" (233) என்கிறார் வள்ளுவர்.

குறுங்காவியத்தின்படிக் குப்பனின் தவிப்பை வஞ்சி வஞ்சிக்காமல் நிறைவேற்றியதென்பது, உலகம் இப்படிப் பட்ட இரக்கக் குணத்தோடு இருக்க வேண்டும் எனச் சுட்டாமல், சுட்டவந்த பொதுமை வாசகமாகக் கொள்வது தான் பகுத்தறிவாகும்.

பாவேந்தர் பாரதிதாசன்

இலக்கியக் கலை வரலாற்றில் இலக்கியப் படைப்பு இலக்கியத்திற்கன்று; அது சமுதாயத்திற்கு என்ற உணர்வோடேதான் படைப்பாளன் அதைப் படைக்கின்றான். அப்படைப்பைச் சமூகத்திற்கு அளிக்கும்போது, அவனது கொடை பொதுவுடையாகி விடுகிறது.

இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அவன் ஒரு படைப்பாளி. அவன் எழுதிக் காட்டுபவை யாவும் பிற எந்த மனிதனுடைய வாழ்விலும் நேர்சீராக எதிரொலித்தாலும் இவற்றையும் தாண்டிய ஒரு நிலைப்பாடு – வழிவழியாக வருவோரை உணரச் செய்யத் தூண்டிய பொதுமைதான், படைத்தோனின் ஆன்மாவைவிட இலக்கியத்தின் ஆன்மாவாகச் சாகா வரம் பெற்றதாகி விடுகிறது. இந்த அழியா வரம் பெற்ற இலக்கிய ஆன்மாவைத்தான் மறுவாசிப்புச் சொற்களாக,

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு"

என்றார் வள்ளுவர். இதில் படைப்பாளி மாய்ந்துவிட்டான்; படைப்பு உள்ளது என்ற கருத்தை எல்லாக் காலத்திற்கும் உதவும் பொதுமை என்ற தைலத்தோணியில் காக்கப் படுவதான உண்மைச் செய்தி, இலக்கியப் படைப்பின் முடிமணியான முடிவுரை எனலாம்.

ஒவ்வொரு படைப்பாளியும் ஒரு சமூக உறுப்பினன். அவன் சமூகத்தைக் கற்றதன் பயனாய்ச் சொல்லில் வடித்தளிப்பதே இலக்கியம். அதில் கற்பனை ஒரு கூறு. அதன்படிச் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் படைப்பில் உலவும் கதாபாத்திரங்களான குப்பனும் வஞ்சியும் கற்பனையானவர்களேயானாலும் அவர்கள் காதல் விளையாட்டில் வீசி எறிந்த "என் நெஞ்சை உன் நெஞ்சாய் ஆக்கிப்பார்" என்ற பொது வாக்கியம் கல்லுக்குள் தேரை ஜீவிப்பது போன்றது.

காதல் வம்புக்குரிய அவ்வரிகளைப் படைத்த படைப்பாளி இல்லை. ஆனால் அப்படைப்பாளியோடு காலங் கடந்த வாசகர்களின் உறவோடு பயணம் செய்கின்ற அளவிற்கு அப்படைப்பாளி தந்த பொதுமையான வாசகம், சமூகத்தையே புரட்டிப் போடும் நெம்புகோலாய் நங்கூரம் பாய்ச்சி விட்டது என்பதே உண்மை!

கட்டுரை

படமுடியாது இனித்துயரம் படமுடியாது அரசே!

வள்ளற் பெருமான்



உலகம் இதுவரை காணாத கொலைபெரும் பாதகத்தை, இன்று கண்டு கொண்டிருக்கிறது. புல், பூண்டு, புழு எனும் நிலைகளிலிருந்து படிப்படியாகப் பரிணாம முறையில், பல்லாண்டுகளில் எய்திய மனித உயிர்களை, இன்று கொரோனா எனும் கிருமிகள் மென்று தின்று கொண்டிருக்கின்றன.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலக் கவிஞன் ஜான் மில்டன், ''பிரபஞ்சத்தில் வாழும் மக்களுக்கு ஒரு பேரழிவு – ஒரு பேரிடர் வரப் போகிறது'' (இழந்த சொர்க்கம் – 4–ஆம் பாகம்) என்று சொல்லியது, இன்று கொரோனாவிற்கும் பொருத்தமாக இருக்கிறது.

இன்றைக்குக் கொரானாவால் உருவாகியிருக்கும் சூழலையும் விளைவுகளையும், அன்றைக்கே மயர்வற மதிநலம் பெற்றமையால் ஊகித்துப் பாடியிருக்கிறார், வடலூர் வள்ளற் பெருமானார். ''படமுடியாது இனித்துயரம் – படமுடியாது அரசே! பட்டதெல்லாம் போதும்'' என அன்று அடிகளார், சிற்றம்பலத்தானிடம் போட்ட விண்ணப்பத்தை, இன்று நாம் மக்களாட்சி அரசர்களிடம் போட்டுக் கொண்டிருக்கிறோம்.

கொரோனா கிருமிகளை உற்பத்தி செய்தவர்களுக்கே, அவற்றை எப்படி அடக்குவது என்று தெரியவில்லை. ஆனால், கிருமிகளால் ஏற்படும் விளைவுகளையும், அவை உற்பத்தியாகும் விதங்களையும் அதிஅற்புதமாகத் தனித் திருமாலையில் விளக்கியிருக்கிறார், வள்ளற் பெருமான். மூட்டைப் பூச்சிகளை 'வன்மூட்டைப் பூச்சி' என்கிறார். ஏனென்றால், அது கடித்தவுடன் அதனை அடிப்பதற்கு நாம் முயலுவதற்குள் அது விரைந்து ஓடிவிடுவதால், வன்மூட்டைப்பூச்சி என்றார்.

மூட்டைப்பூச்சியின் கால்களும் உணரிகளும் மிகச் சின்னதாக இருந்தாலும், அதன் வயிறு மூட்டை போல் பெருத்து இருப்பதால், ''வன்மூட்டைப் பூச்சி'' என்றார். அது எவ்வாறு விரைந்து செல்லும் என்பதை, உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை நுணுக்கமாக விளக்குகின்றார். மிகப்பெரிய மூட்டையை முதுகிலே சுமந்த தொழிலாளி எவ்வளவு விரைந்து ஓடுவாரோ, அப்படி ஓடுமாம்! அதனாலும், மூட்டைப்பூச்சி ஆயிற்று.

அடுத்து, மூட்டைப்பூச்சியைப் போல் இரவு முழுவதும் தீயால் சுடுவது போல் கடித்துக் குதறக்கூடியது சீலைப்பேன். இந்தச் சீலைப்பேன் எப்படி உற்பத்தியாகின்றது என்பதையும் வள்ளலார் இயம்பியிருக்கிறார். பல நாள்கள் துவைக்காத துணிகளை அணிவதாலும், பல நாள்கள் அழுக்கான படுக்கையிலே படுப்பதாலும் உருவாகின்றது என்கிறார். தலையிலே உற்பத்தியாகும் பேனிலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்ட, ''புன்சீலைப் பேன்'' என்றார்.

நரிக்குறவர்களிடம் இந்தச் சீலைப்பேன் ஆதிக்கம் கொண்டிருக்கிறது. அவர்களுடைய பாடல்களிலேயே 'சீலைப்பேன்' எனும் தொடர் அடிக்கடி இடம்பெறுகிறது. மூட்டைப்பூச்சியும் சீலைப்பேனும் கொள்ளிவாய்ப் பிசாசுகளைப் போல, தம்மை இரவு முழுவதும் கடித்துத் தம் இரத்தத்தைக் குடித்ததாக வள்ளலார் விளக்கியதோடு, அவற்றிடம் இருந்து

பேரா. தி. இராசகோபாலன்

தம்மைக் காக்குமாறு முக்கட் பெருமானை வேண்டுகிறார். இன்று நாம் கொரோனா விடமிருந்து காக்குமாறு வேண்டிக் கொண்டி ருக்கிறோம்.

“வன்மூட்டைப் பூச்சியும் புன்சீலைப் பேனும்
தம் வாய்க்கொள்ளியால்
என்மூட்டைத் தேகம் சுறுக்கிடவே சுட்டி ராமுழுதும்
தொன்மூட்டை யினும் துணியிலும்,
பாயினும் சூழ்கின்றதோர்
பொன்மூட்டை வேண்டி என்செய்கேன்,
அருள் முக்கட் புண்ணியனே”
(1487 - தனித்திருமாலை)

ஏற்கனவே பன்றிக்காய்ச்சல், எபோலா முத லிய நோய்கள் வந்திருந்தாலும், அவை மக் களுக்கு மரண பயத்தை ஏற்படுத்தவில்லை;



எதற்குமோர் சிகிச்சையுண்டு; மருந்துண்டு என்று இருந்துவிட்டனர்.

ஆனால், இன்றைக்கு வந்திருக்கும் கொரோனா மரண பயத்தை ஏற்படுத்தியிருப் பதோடு, அந்நோய்க்குரிய சிகிச்சையிலும் ஓர் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால், உல கம் முழுமையிலுள்ள மக்களுக்குக் கொரோனா மீது ஒரு தீராத கோபம் ஏற்பட்டிருக்கிறது. இச்சூழ்நிலையைத் திரிகாலஞானியாகிய வள்ளலார் அப்படியே படம் பிடித்துள்ளார்.

“உடல் உயிர் பற்றி எனக்கேற்பட்டிருக்கும் அச்சத்தை நீக்குவாய்! பழுது பார்க்க முடியாத இவ்வுடலையும் உயிரையும் நீ எடுத்துக்கொண்டு, உன்னுடைய உடலையும், உயிரையும் எனக்குத் தா’’ என நடராசப் பெருமானை வேண்டுகின்றார்.



‘‘பட்டதெல்லாம் போதும் இந்தப் பயம் தீர்த்து, இப்பொழுது என் உடல், உயிராகிய எல்லாம் நீ எடுத்துக்கொண்டுன் உடல், உயிர் ஆதியெல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்’’ என்பது 3202–வது பாசுரம் ஆகும். பாதிக்கப்பட்ட அவருடைய உடலையும் உயிரையும் அவரால் காப்பாற்ற முடியாது. எனவே, இறைவனுடைய உடலையும் உயிரையும் மாற்றாக வேண்டுகின்றார்.

பொதுவாக அருளாளர்கள் ‘‘காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா!’’ என நிலையாமைச் சிந்தனையோடுதான் பாடுவார்கள். ஆனால், வள்ளலார் ஆரோக்கியமான உடலையும் உயிரையும் ஆண்டவனிடம் வேண்டுகின்றார். ஏனென்றால், ‘‘மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே’’ என நம்முடைய திருமுறையாசிரி யர்கள் பாடியிருக்கிறார்கள். உடலுயிரை ஓம்பாமல் இன்று கொரோனாவைக் கண்டு அதிர்ந்து நிற்கும் நமக்கு, வள்ளலார் அன்றே ஓர் எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்.

கொரோனாவால் ஏற்பட்டிருக்கும் மரணத்தை



இன்று உலகவர் சபித்துக் கொட்டிக் கொண்டிருப்பதுபோல், வள்ளலார் முன்கூட்டியே அதனைச் செய்திருக்கிறார்.

"மரணம் எனும் பெருந்திருட்டுப் பாவிப் பயலே!
வையகமும் வானகமும் மற்றகமும் கடந்தே
பரணமுறுபேர் இருட்டுப் பெருநிலமும் தாண்டிப்
பசையற நீ ஒழிந்திடுக! இங்கிருந்தாய் எனிலோ
இரணமுற உனைமுழுதும் மடித்திடுவேன்...
அரண் உறும் என்தனை விடுத்தே ஓடுக"

எனத் 'தத்துவ வெற்றி' 4853–ஆம் பாசுரத்தில் அடிகளார் அருளிச் செய்திருக்கிறார்.

நாற்பது நாள்களுக்கு மேலாக ஊரடங்கு, வீடடங்குச் சட்டத்தால் உறைந்துபோய்க் கிடக்கும் மானிடவர்க்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டிருக்கின்றது. வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டாலும், அதற்காக இவ்வுலக வாழ்க்கையை நீக்கவும் ஆசையற்று இருக்கின்றனர். இந்த நிலையை வள்ளற்பெருமான், 'இறக்கவும் ஆசையில்லை; இப்படி நான் இருக்கவும் ஆசையில்லை' என முத்தாய்ப்பாகப் பாடியிருக்கிறார்.

இதுவரை நம் உடலிலே ஏதாவதொரு உறுப்பிலே நோய் வந்தால்தான், அதைப் பற்றிக் கவலைப்பட்டு மருத்துவரிடம் செல்லுகின்றோம். ஆனால், நம்முடைய உயிருக்கும் நோய் வரும் என்று நாம் எண்ணிப் பார்த்ததில்லை. இன்றைக்கு வந்திருக்கும் கொரோனா நம் உயிருக்கு வந்திருக்கும் நோயாகும். இதனை அன்றைக்கே உணர்ந்த அருட்பெருஞ்சோதி அடிகளார், "உடற்பிணி அனைத்தையும், உயிர்ப்பிணி அனைத்தையும் அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே" என அகவலில் (1322) மொழிந்திருக்கிறார்.

இப்பொழுது உருவாகியிருக்கும் தொற்று நோய் எப்படித் தொற்றி வந்தது என்பதை இன்று வரை, யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. மனிதரைத் தொற்றிக் கொண்டு வந்ததா அல்லது காற்றைத் தொற்றிக்கொண்டு வந்ததா அல்லது தண்ணீரைத் தொற்றிக் கொண்டு வந்ததா என்பதை, இன்றும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், எந்தெந்த வகையில் எல்லாம் பேரழிவு நோய் தொற்றிக்கொண்டு வரும் என்பதை வள்ளலார் பட்டியலிடுகிறார். வல்லரசுகள் முனைந்திருக்கும் உயிரிப்போரைக் (Bio-war) கூடத் தொலைவில் உணர்ந்து, "பிற இயற்றும் கொடுஞ்செயல்களாலே" எனச் சுட்டியிருக்கிறார்.

"காற்றாலே புவியாலே ககனம் அதனாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிற இயற்றும் கொடுஞ்செயல் களாலே"

எனத் தனித்திருவலங்கலில் 5450–இல் பதிவு செய்திருக்கிறார்.

மூன்று முறை ஊரடங்கை அரசு அறிவிப்பதற்குக் காரணமே, நம்முடைய சராசரி மக்கள் மருத்துவ விதிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்காமையே! எப்பொழுதும் வீட்டிற்கு அடங்காத பிள்ளைகள், இப்பொழுதும் வீட்டிற்குள் அடங்கவில்லை.

ஒரு மீட்டருக்கு ஒருவராக வரிசையிலே நிற்க வேண்டும் என்பதை மறந்து, மறுத்து, ஆட்டு மந்தைகளைப் போல் ஒருவர்மேல் ஒருவர் உரசிக் கொண்டு போனார்கள். இச்சூழ்நிலையை வரு முன்னர் அறிந்த வள்ளலார், அவசியமில்லாமல் வீதிகளிலே கூட்டம் போட்டுத் திரிந்த மனிதர்களைப் பித்தர்கள் என ஏசுகின்றார்.

"ஆறாமல் அவியாமல் அடைந்த கோபத்தீர்!
அடர்வுற உலகிடை அஞ்சாது திரிவீர்
மாறாமல் மனஞ்சென்ற வழிச்சென்று திகைப்பீர்
வழிதுறை காண்கிலீர்! பழிபடும் படிக்கே
நாறாத மலர்போலும் வாழ்கின்றீர்; மூப்பு
நரைதிரை மரணத்துக்கு என்செயக் கடவீர்?
ஏறாமல் வீணிலே இறங்கு கின்றீரே
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே"

என்பது ஆறாம் திருமுறையில் 5557–ஆம் பாசுரம் ஆகும்.

இப்பாடலில் எதிர்ப்புச் சக்தி இல்லாதவர்களையும் மூத்த குடிமக்களையும் கோடிட்டுக் காட்டுகிறார்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் தீராத் துயரத் துக்குக் காரணம், எழுத்தறிவுள்ள மக்கள், அத்துமீறி நடந்தமையே ஆகும். படிப்பறிவு இல்

லாத மக்கள் வாழ்ந்த காலத்தில், ஊர்விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து, பேரிடர்களை வென்றி ருக்கிறார்கள். பெரியம்மையும் தொற்றுநோய்தான்! ஒரு காலத் தில் ஒரு வீட்டில் ஒருவருக்குப் பெரிய அம்மைப் போட்டு விட்டால், வீட்டு வாசலில் ஒரு கொத்து வேப் பிலையைச் சொருகி வைத்துவிடு வார்கள். வேப்பிலைக் கொத்தைப் பார்த்தவுடனேயே வெளியார்கள் யாரும் வீட்டிற் குள் நுழைய மாட்டார்கள். நோயாளியை வேப் பிலையிலும், வாழையிலையிலும் படுக்க வைத்திருப்பார்கள்.

ஜான் மில்டன்

ஒரு வீட்டில் பெரியம்மை போட்டுவிட்டால், அந்த வீட்டுக்காரார்கள் அடுத்த ஊருக்குப் போக மாட்டார்கள்; வெளியூரிலிருந்து வரும் உறவினர் களும் செய்தி தெரிந்தவுடன், ஊர் முனையிலேயே திரும்பிப் போய்விடுவார்கள். பக்தியின் பெயரால் தொற்றின் தீமையை உணர்ந்திருந்தார்கள்.

பெரியம்மை கண்டவரின் உடலிலுள்ள கொப்புளங்கள் வடிக்கும் நீர், தொற்றுக்கு முக்கிய காரணம் என்பதால், மூன்றுமுறை தலைக்கு ஊற்றுகின்ற வரையில் வெளியில் வரமாட்டார்கள். நோய் கண்டவரின் உடலை வேப்பிலையால் தடவி விடுவார்களே தவிர, தொட்டு அன்பைக் காட்ட மாட்டார்கள். வீட்டிலுள்ள அனைவரும் கடுமை யாக விரத நிலையில் இருப்பார்கள்.

இப்படிப் பாமர மக்கள் அனைவரும் பயந்து, அடங்கி வாழ்ந்ததால், இன்று பெரியம்மை என்ற நோயே அடையாளம் தெரியாமல் அழிந்துவிட்டது. படித்த மக்கள் பாடறிந்து ஒழுகாததால், இன்று கொரோனா பூமிப்பந்தைப் புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைய உலகத்தவர் பல பலகீனங்களை உடையவர்கள்தாம்! ஆனாலும், கொரோனாவில் கொடுத்துவரும் தண்டனை, நுனிக்கொம்பில் ஏறி நிற்கிறது. கொரோனா என்ற ஏவுகணையை ஏவியவர் யாரென்று தெரியவில்லை. அந்த ஏவுகணையினால், பச்சிளங் குழந்தையிலிருந்து, பல்லிழந்த முதியவர்கள் வரை பெரும்பாதிப்புக்கு உள்ளாகி யிருக்கின்றனர்.



நோய்க்கு மருத்துவம் செய்ய வந்த மருத்துவரையும், செவிலியரை யுமே, நோய்ப்படுக்கையில் படுக்க வைத்திருக்கும் கொடும்பாவி, கொரோனா. கைவருந்தி உழைப் பவர்களை எல்லாம் நடுத் தெருவில் நிறுத்திக் கையேந்த வைத்திருக்கும், அரக்கன் கொரோனா! புலம் பெயர்ந்த மனி தர்களை எல்லாம், கலங்கிப் புலம்ப வைத்திருக்கின்ற கொடிய பேய் கொரோனா!

இந்த நோயின் கொடூரங்களை எல்லாம் முன்பே உற்றறிந்த வள்ளல் பெருந்தகை, பாடியிருக் கின்ற வசை, படிப்போரைச் சிலிர்க்க வைக்கக் கூடியது. கொடிய நோயைச் 'சனி' என அழைக் கும் வள்ளலார், அதன் ஆட்டம் ஓய்ந்ததற்குப் பின், ஒழிந்ததற்குப்பின், பூப்பது வசந்தமே என வரவேற் பும் சொல்லியிருக்கிறார், அந்தத் திரிகாலஞானி!

பெரிய அம்மையால் பாதிக்கப்பட்ட சிறுவன்

"சனி தொலைந்தது, தடை தவிர்ந்தது,
தயை மிகுந்தது, சலமொடே
துனி தொலைந்தது, சுமை தவிர்ந்தது,
சுபமிருந்து சுகமொடு
கனி எதிர்ந்தது, களை தவிர்ந்தது
கனிமிகுந்தது கனிவொடே
புனித மன்றிறை நடமலிந்தது, புகழ்
உயர்ந்தது புவியிலே"

என்பது ஆறாம் திருமுறையில் 5434–வது பாசுரம்.

வள்ளற்பெருமான் தாம் வாழ்ந்த காலத்தில் இச்சமூகத்து மக்கள் பட்ட பாடுகளையும், வேத னைகளையும், தாம் அனுபவித்ததாக நினைத்துச் சிற்றம்பலத்தானிடம் வேண்டுகோள் வைக்கிறார். "படமுடியாது இனித் துயரம் படமுடியாது அரசே! பட்டதெல்லாம் போதும்" என வள்ளலார்; வேண்டி யதுபோல், நாம் இப்பொழுது படமுடியாது இனித் துயரம், படமுடியாது, பட்டதெல்லாம் போதும் என்று வள்ளற்பெருமானை வேண்டுவோமாக! ●

Sri Chamundeswari Sugars Limited

Regd. Office :

88/5, Richmond Road, Bangalore - 560 025

Tel : 080-25002500, Fax : 080-25002510

Email : ho@chamundisugars.com

கட்டுரை

புதுக்கோட்டை நகரில் உள்ள திலகவதியார் திருவருள் ஆதீனம், அதன் திருப்பெயருக்கு ஏற்ப அதனை நிறுவியவர் ஒரு மங்கையர் திலகம். அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவிதான் அவர்கள்.

பெண்களின் பிறவி மீது ஆதிகாலம் முதல் ஆதிக்கம் செலுத்தி வந்தது ஆண் வர்க்கம். ஆண்களுக்கே கல்வி. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. ‘கொழுநன் தொழுதெழுவாள்’ எனப் பேசிய வள்ளுவர் காலத்தில், கணவனைக்

அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவி

குன்றக்குடி அடிகளாருடன் சிவ பிருந்தாதேவி...

கடவுளாக வணங்குவதுதான் மனைவிக்குப் பெருமை எனப்பட்டது. கணவனைத் தெய்வமாக வணங்கும் மனைவி, கணவனுக்குப் பக்தையாகி விடுகிறார் என்பதே மறைமுகமான ஆணாதிக்கம் தான்.

ஆணுக்குப் பெண் எல்லா வகையிலும் சமமானவள் என்கிற இந்த நவீனக் காலத்தில் கூட, அச்சமத்துவக் கோட்பாடு முழுமையாக இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்பதே உண்மை.

கல்வியில் மட்டுமல்ல, துறவு பூணுவதில்கூட சைவ சமயத்தில் பேதங்கள் உள்ளன. சமண மதத்தில் பெண்கள் துறவு மேற்கொள்வதை குஜராத்திய சமண சமுதாயம் இன்றைக்கும் வரவேற்கிறது. புத்த மதத்தில் புத்தப் பிட்சுகள் போல, புத்தப் பிக்குணிகள் உண்டு. வைணவத்தில் பேசப்படுகிற 12 ஆழ்வார்களில் ஆண்டாள் நாச்சியார் ஒரே பெண் ஆழ்வார். பெண் துறவியல்ல.

ஆனால், சைவத்தில் பேசப்படுகிற காரைக் கால் அம்மையாரை முதல் பெண் துறவி எனலாம். திலகவதியார்கூட, துறவியாக சிறுபிராயத்தில் நமக்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. எதிர்பாராது சம்பவித்த சோகத்தால், துறவு வாழ்க்கையை மேற்கொண்டு ஞானத்தாய் ஆகிறார்.

அவர் மட்டும் இல்லையேல் நமக்கு நாவுக்கரசர் கிடைத்திருக்க மாட்டார். இது எல்லாம் நடந்தது 1400 ஆண்டுகளுக்கு முன்பு.

இந்தப் புரிதலோடு திலகவதியார் திருப் பெயரில் புதுக்கோட்டையில் ஒரு திருமடத்தை நிறுவியவர் திலகவதியாரைப் போன்ற ஞானத்தாய் சாயிபிருந்தாதேவி அவர்கள். அவருடைய

வாழ்க்கை வரலாற்றைத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

1927–ஆம் ஆண்டு புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள திருக்கோகர்ணம் எனும் சிவத்தலத்தில், பரதநாட்டிய மேதை சிவராம நட்டுவனார் – நல்லம்மாள் ஆகியோருக்கு ஏழாவது மகளாக அவதரித்தவர் நமது அன்னையார்.

புதுக்கோட்டை இராணியார் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை நிறைவு செய்தார். பள்ளியில் நடைபெறும் இலக்கிய, பேச்சுப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுச் சிறந்தவர்.

இவரது பள்ளிப் படிப்புக் காலத்தில் இந்திய விடுதலைப் போராட்டம் நடந்து வந்தது. பள்ளியில் இவர் நடத்திய நாடகங்களின் ஊடே சுதந்திரப் போராட்டத் தீரர்களையும், மகாகவி பாரதியாரின் பாடல்களையும் மாணவி பிருந்தாதேவி காட்சிப் படுத்துவாராம்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய இசை மேதை சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் வளர்ப்பு மகளாகி, பி.ஒ.எல். படித்தார். நாடு விடுதலையடைந்து முதலாமாண்டு நிறைவை 1948–இல் கொண்டாட விரும்பிய அப்பகுதி இளைஞர்கள், புதுக்கோட்டை பிரபல வழக்குரைஞர் வல்லத்தரசு தலைமையில் நடத்திய நிகழ்ச்சியில் செல்வி பிருந்தாதேவியின் கன்னிப்பேச்சு அனைவரையும் ஈர்த்தது.

பி.ஒ.எல். படிப்பினை நிறைவு செய்தவுடன் தருமையாதீன சந்நிதானத்தின் நாற்பது தம்பிரான்களுடன் பிருந்தாதேவியைப் பதிவாளர் சச்சிதானந்தம்பிள்ளை சேர்த்துவிட்டுச் சாத்திர, தோத்திரப் பயிற்சி பெறச் செய்தார். பிறகு மகா வித்வான் தண்டபாணி தேசிகர் இல்லத்தில் தங்கியிருந்து சித்தாந்தச் சாத்திரப் பயிற்சி வகுப்பிலும் பயின்றார். இவ்வாறு அவர், தமிழைக் கற்பதற்காகவே கடுமையான விரதம் பூண்டவராக இருந்தார்.

அங்கு வந்த காஞ்சி காமகோடி பீடாதிபதி, பரமாச்சார்யார் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆசிகளைப் பெற்றார்.

தூத்துக்குடி சைவ சித்தாந்தக் கழகத்தில்

பேசிய இவருடைய பேச்சு இவருக்குச் 'சித்தாந்த செல்வமணி' பட்டத்தினைப் பெற்றுத் தந்தது.

1952–இல் அருட்பிரகாச வள்ளலார் பெயரில் 'வார வழிபாட்டுக் கழகத்தை' நடத்தினார்.

தமிழ்ப் பணியைப் போலத் தேசப்பணி புரியவும் இவருடைய மனம் ஏங்கியது. அதற்காக இளைஞர் காங்கிரசில் சேர்ந்தார். கட்சிக் கூட்டத்தில் ஆற்றிய உரையைக் கேட்ட பெருந்தலைவர் காமராஜர், **"சகோதரி பிருந்தாதேவி நன்றாகப் பேசுகிறார். அவரது சேவை காங்கிரசிற்குத் தேவை"** எனப் பாராட்டி, அவரைக் காங்கிரஸ் பேரியக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டார். இதேபோலத்தான் சுதந்திரப் போராட்டக் காலத்தில் கொடுமுடிக் கோகிலம் கே.பி. சுந்தராம்பாள் அவர்களையும் காமராஜர் ஈடுபடுத்தியது நினைவுகூரத் தக்கது. மாநில மாதர் காங்கிரசில் குறிப்பிடத்தக்க பிரமுகராக விளங்கினார்.

பெருந்தலைவர் காமராஜ், டி.டி.கே.,

பக்தவத்சலம், கக்கன், இராமையா முதலிய காங்கிரஸ் தலைவர்கள் போட்டியிட்ட தொகுதி களில், தேர்தலில் அவர்களின் வெற்றிக்காக இலக்கிய நயங்களோடு பேசி மக்களை ஈர்த்தார்.

1956–ஆம் ஆண்டு சென்னை லேடி வெலிங்டன் கல்லூரியில் உரையாற்றியபோது, அவர் பேசிய தமிழ் அழகைக் கண்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவரைப் பாராட்டித் தன்னுடனேயே அழைத்துச் சென்றார்.

முத்துலட்சுமி ரெட்டி அம்மையார்தான் தமிழகத்தின் முதல் பெண் டாக்டர். அப்போது பெண்கள் கல்வி கற்பதே அபூர்வம். அதுவும் டாக்டருக்குப் படிப்பது இரு மடங்கு அபூர்வம்.

1957 பிப்ரவரியில் 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகளிர் இல்லம்' என்ற அமைப்பில் இணைந்து 25 பெண் குழந்தைகளைப் பேணிக் காக்கும் பொறுப்பை ஏற்றார்.

அந்த மகளிர் இல்லத்தின் வழியே, ஆதர வற்ற அபலைகளுக்குப் புது வாழ்வு அளிக்கவும், பெற்றோரை இழந்த பெண் குழந்தைகளைப் பேணிக் காத்து அவர்களின் எதிர்கால வாழ்வை உயர்த்திடவும் அவர் சிறப்பாகச் சேவை செய்து வந்தார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் திருப் பெயரில் உள்ள மகளிர் இல்லத்திற்கு, 1959–ஆம் ஆண்டு, தமிழக முதலமைச்சர் காமராஜர் வருகை தந்து சிறப்பித்தார். அங்கு பேசிய முதலமைச்சர் காமராஜர், "பெண்களோட நலத்திலே ஆர்வம் கொண்டு உழைச்சு வருகிற, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பெயராலே நடந்து வருகிற இந்த நிறுவனத்தை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். குறிப்பா, நம்ம பிருந்தாதேவியோட தொண்டுக்கு வணங்கறேன்'' என மகிழ்வோடு கூறினார்.

தந்தை பெரியாருடன்...

பெருந்தலைவர் காமராஜருடன்...

1960–ஆம் ஆண்டு, சென்னை கலாக்ஷேத்ரா நிறுவனர் ருக்மணி அருண்டேல் இந்நிறுவனத் திற்கு வருகை தந்து சிறப்பித்தார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இல்லம் குளக் கரையில் இருந்ததால், குழந்தைகள் அதில் தவறி விழுந்துவிடும் வாய்ப்புகள் அதிகம். அதனைத் தவிர்க்க, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார், தனது பெரியப்பா மகன் ராமுவின் புதல்வர் ஜெமினிகணேசனிடம் பேசி, அவருடைய பூர்வீக வீட்டில் மகளிர் இல்லம் அமைய உதவினார்.

1960–ஆம் ஆண்டு அன்னையார் முதல்முறையாக அயல்நாட்டுப் பயணம் சென்றார். அன்னையாரை மலேசியாவில் ஒரு மாதம் தங்கிச் சொற்பொழிவாற்றத் தமிழர்கள் வேண்டினர். மலேசியாப் பத்திரிகைகள் சகோதரி சிவ பிருந்தா தேவியின் சொல்லாற்றலையும், சேவைத் திறனையும் பற்றிச் செய்திகள் வெளியிட்டன.

இவருடைய முதல் மலேசிய வெற்றிப் பயணம், தொடர்ந்து சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குப் பலமுறை சென்று வரும் சூழ்நிலையை உருவாக்கியது.

1962–ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமிழ் அறிஞர் கி.வா.ஜ., அறிவாளர் ந.ரா. முருகவேள் ஆகியோ ருடன் ஒரே விமானத்தில் கொழும்பு நிகழ்ச்சிக்கு

தொடர்ச்சி : 95–ம் பக்கம்

உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
FORCE GURKHA E.O.V. 4.4.4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

ஆதலையூர் சூரியகுமார்

சிறுகதை

இங்கேயும் பாயும் கங்கை

கதிர் அறுத்துப் போர் அடிக்கிற கல்லில் கவலையோடு அமர்ந்திருந்தான் பாஸ்கர். அவனுக்கு நேர் எதிரே வானத்தைப் பார்த்தபடி எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தாள் மாலதி.

தலைக்கு மேலே வானம் வெளிறிப்போய்க் கிடந்தது. கறுத்திருந்த வானம் பார்த்துக் காலங்கள் ஆகியிருந்ததாக ஒரு நினைவு, மாலதியின் மனசுக்குள் கவலையை இன்னும் அடர்த்தியாக்கிக் கொண்டிருந்தது.

பாஸ்கர்தான் மௌனத்தைக் கலைத்தான்.

“வெண்ணெய் திரண்டு வர்ற நேரத்துல தாழி உடைஞ்ச மாதிரி ஆயிடுச்சே மாலதி.”

“இப்படி ஒரு பிரச்சனை வரும்னு நான் நெனச்சுக்கூடப் பார்க்கல பாஸ்கர்.”

விம்மி வெடிக்கிற அழுகையை அடக்க முடியாமல் பேசினாள் மாலதி.

“தண்ணீர்ப் பிரச்சனையால நம்ம கல்யாணம் நின்னு போயிடும்னு நான் எதிர்பார்க்கல மாலதி.”

“... ... ...”

“தண்ணீர்”ப் பிரச்சனை இது வரை நாட்டை பாதிச்சது... மாநிலத்தைப் பாதிச்சது... மாவட்டத்தைப் பாதிச்சது... இப்போ தனிமனித வாழ்க்கையையே பாதிக்கிற அளவுக்கு வந்திடுச்சி பாத்தியா...?”

தண்ணீர்ப் பிரச்சனையின் கோரமுகம் தொடங்க வேண்டிய ஒரு வாழ்க்கையை முடித்து விடும் மும்முரத்தில் முன்னேறிக் கொண்டிருந்தது.

“என்ன பண்ணலாம்னு நினைக்கிற பாஸ்கர்...?” நிதானமாகக் கேட்டாள் மாலதி...

பாஸ்கருக்குப் பழைய நாட்களின் நினைவுகள் மனசுக்குள் திரையிட்டன.

மாலதியைப் பார்க்கிற போதெல்லாம் அவன் மனசு மலர்ந்துவிடும். வாழ்க்கைத் துணையாகப் போகிறவளைப் பார்ப்பதற்கு எந்த இளைஞனுக்குத்தான் ஆர்வம் இருக்காது.

“முயற்சியை விடக்கூடாது பாஸ்கர், இது ஒரு நல்ல ப்ளான்... நாம அவங்களுக்குப் புரியற மாதிரிச் சொல்லுவோம்.. ஒண்ணு பண்ணலாம்...”

“மாலதி காத்துக் கொண்டிருப்பாள். கோயில் பிரசாதத்தைக் கொடுத்துவிட்டு உடனே அவளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். பொழுது சாயப் போகிறது. அவன் மனசு பரபரத்தது.

மாலதி இவனது முறைப்பெண். சின்ன வயதிலிருந்தே இதுதான் பொண்ணு, இதுதான் மாப்பிள்ளை என்று வளர்ந்திருந்தார்கள். இரண்டு குடும்பமும் மிகவும் ஆச்சாரமான குடும்பம். என்னதான் முறைப் பெண், முறைப் பையன், என்று வளர்ந்தாலும். தங்கள் குடும்ப கௌரவத்திற்கு ஏற்ப மிகவும் கட்டுக் கோப்பாகவே பழகி வந்தார்கள். தேசம் பற்றியும், அதன் பொருளாதார முன்னேற்றம் பற்றியும்தான் அடிக்கடி பேசிக் கொண்டு இருப்பார்கள்.

ரகசியச் சந்திப்போ, பேச்சுக்களோ, அவர்களுக்கிடையே இருந்ததில்லை. அவர்கள் அதிகம் சந்தித்துக் கொண்டது இந்த ஐயனார் கோயில் திடல்தான்.

கல்லூரி விடுமுறை நாட்களில் மாடுகளைப் பார்த்துக் கொள்ளவும், நடவு செய்யப்பட்ட வயல்களைக் காவல் காக்கவும் அவர்கள் இந்த ஐயனார் கோயில் திடலில்தான் வந்து அமர்ந்திருப்பார்கள். அப்போதுகூட, அவர்கள் கைகளில் பாடப்புத்தகம் படபடத்துக் கொண்டிருக்கும்.

ஊரறிந்து முடிவு செய்யப்பட்ட கல்யாண மாகத்தான் இவர்களுடைய காதல் இருந்தது. படிப்பை முடிக்கட்டுமே என்றுதான் இத்தனை வருடம் பெற்றோர்களும் காத்திருந்தார்கள். பாஸ்கர். எம்.எஸ்சி. புவியியல் முடித்திருந்தான். மாலதி பி.எஸ்சி. பிஸிக்ஸ் என்று இதோ படிப்பும் முடிந்துவிட்டது.

இரண்டொரு நாட்களில் தேதி குறித்துவிடுவார்கள் என்ற சந்தோஷத்தில்தான் காமாட்சியம்மன் பிரசாதத்துடன் களத்து மேடு நோக்கி வந்து கொண்டிருந்தான் பாஸ்கர்.

பெரிய வாய்க்கால் தாண்டினால் ஐயனார் கோயில் திடலை அடைந்து விடலாம். அதற்குள் நான்கு முறை மிஸ்டு கால் கொடுத்திருந்தாள் மாலதி.

'இதோ வந்துட்டேன். பெரிய வாய்க்கால் தாண்டிட்டேன்' என்று கட்டை விரல்களால் வாட்சப் தட்டிக் கொண்டே நடந்தான்.

இந்த பெரிய வாய்க்கால்தான் பெரிய பிரச்சனையாக இருக்கப் போகிறது என்று அப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஒரு காலத்தில் ஒரு நதி போலப் பிரவாகம் எடுத்து ஓடிக்கொண்டிருந்தது பெரிய வாய்க்கால். அது அந்தக் காலம் என்று ஒற்றை வரியில் புதைந்து போன எத்தனையோ புனிதங்களில் பெரிய வாய்க்காலும் ஒன்று.

விசலூர் முழுக்கப் பாய்ந்து மூன்று போகம் சாகுபடி செய்து விளைச்சலைக் குவித்த வாய்க்கால் இன்று கழிவு நீர்; சாக்கடை மாதிரிக் காணச் சகிக்காமல் கிடக்கிறது. எல்லாம் மனிதர்களின் சுயநலம்தான். தூர் வாராமல் விட்டதும், வாய்க்கால் தலைப்புகளில் ப்ளாட்டுகளைப் போட்டுக் குடியிருப்பு மனைகளாக்கியதும், தொழிற்சாலையின் கழிவு நீரும் இந்தப் பெரிய வாய்க்காலைச் சின்னக் கூவம் மாதிரிச் செய்திருந்தன.

அவ்வளவு தண்ணீரும் கழிவு நீராக மாறி, விவசாயிகளின் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தது. சில நிமிடங்கள் அவன் மனசுக்குள் பெரிய வாய்க்கால் பற்றிய கவலைகள் பெரிதாகத் தோன்றி மறைந்தது.

"பத்து தடவை தோப்புக் கரணம் போடுங்க... ஏன்... லேட்...?" பொய்க் கோபத்தில் பொங்கினாள் மாலதி.

"ஸாரி... மாலு... நம்ம கல்யாணத் தேதி குறிக்கப் போறாங்க இல்லையா, அதான் காமாட்சியம்மன் கோயிலுக்குப் போய் ரொம்ப சீக்கிரமா கல்யாணம் நடக்கணும்னு வேண்டிக்கிட்டு வந்தேன்... அதான் லேட்..."

வெட்கம் கலந்த புன்னகையுடன் பாஸ்கர் தந்த குங்குமப் பிரசாதத்தை எடுத்துக்கொண்டாள் மாலதி.

"எந்தப் பிரச்சனையும் இல்லாம, சீக்கிரமா கல்யாணம் நடந்து முடியணும் பாஸ்கர். எனக்கு மட்டும் ஆசையிருக்காதா என்ன?" விழிகளை விரித்துப் புன்னகை சிந்தினாள் மாலதி.

ஆனால் அன்று இரவே பிரச்சனை வந்து விட்டது.

"சரிதான்... போங்கப்பா... இப்படி வாய்க்காத் தண்ணிக்காகச் சம்பந்தியாகப் போறவங்க சண்டை போட்டுக்கலாமா...?" மாரிமுத்துப் பெரியப்பா, கலியமூர்த்தியையும், ரங்கனாதனையும் விலக்கி விட்டுக் கொண்டிருந்தார்.

"ஏம்பா... கலியமூர்த்தி உன் பொண்ணுக்கும், ரங்கனாதன் பையனுக்கும் கல்யாணம் முடிவாகித் தேதி குறிக்கற வரைக்கும் வந்துடுச்சி... இப்பப் போய் இப்படியொரு சண்டை தேவையா. பொண்ணு இருந்து வாழப்போற இடம் சண்டை சச்சரவு இல்லாமப் போங்கப்பா..."

மாரிமுத்துப் பெரியப்பா வறண்ட தொண்டையோடு கத்திக் கொண்டிருந்தார்.

"மாரிமுத்து அண்ணே... நான் ஒண்ணும் அநாவசியச் சண்டைக்குப் போகலியே... சின்ன வாய்க்கால்ல இருந்து தண்ணி பாய்ச்சறதுக்கு நாம ஒரு முறை வச்சிதானே போய்க்கிட்டு இருக்கோம்... இன்னைக்கு என்னோட நிலத்துக்குத் தண்ணி பாய்ச்சற முறை... ஆனா என் வயலுக்குத் தண்ணி விடாம, அந்த ரங்கனாதன் மடையைப் போட்டு, அவன் நிலத்துக்குப் பாய்ச்சுக்கிட்டு இருக்கான்... மாப்ள வீட்டுக்காரன்னு முறுக்கா...? என் பொண்ணை வேற எடத்துல கட்டிக் கொடுக்க முடியாதா... என்ன?"

"ஏய் கலியமூர்த்தி, ஆத்திர அவசரத்துல வார்த்தையை விட்டுடாதப்பா..."

மாரிமுத்துப் பெரியப்பா பதறினார்.

“தண்ணியால இன்னும் எத்தனை பிரச்சனை வரப்போகுதோ... அந்த மாரியாத்தாளுக்கே வெளிச்சம்...” பெரிய வாய்க்கால்ல ஆறு மாதிரி தண்ணி ஓடுனது... அப்போதெல்லாம் ஒரு பிரச்சனையும் இல்ல... பெரிய வாய்க்கால் சீரழிஞ்சது லேந்து இந்த ஊருக்கும் சீரழிவுதான்.

மாரிமுத்துப் பெரியப்பா பெரிதாக அங்கலாய்த்துக் கொண்டார். ஆனால் இந்தச் சண்டை, கைகலப்பு வரை போய்... பாஸ்கருக்கும், மாலதிக்கும் நடக்க இருந்த கல்யாணம் நின்று போய் விடும் என்று மாரிமுத்து பெரியப்பா நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

ஆறுதல் சொல்ல முடியாமல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள் மாலதி.

“எமோஷனாகாத மாலதி...” ஆறுதல் சொன்னான் பாஸ்கர்.

“கைகலப்பு வரைக்கும் வந்துடுச்சி. இனிமே எப்படி நம்ம கல்யாணம் நடக்கும்...?” வானமே இடிந்து விழுந்த மாதிரி பேசிக் கொண்டிருந்தாள் மாலதி.

“பிரச்சனை நம்ம மேல இல்ல மாலதி... பிரச்சனைக்குக் காரணம் தண்ணிதான்... ஊர்ல இருக்கற தண்ணீர்ப் பிரச்சனையைத் தீத்துட்டோம்னா... இந்த ஊரே ஒண்ணா நின்னு நம்ம கல்யாணத்தை நடத்தி வைக்கும்.”

“ஸாரி... புரியல பாஸ்கர்... நீங்க என்ன சொல்ல வர்றீங்க...?”

“நாம மட்டும்... பெரிய வாய்க்கால்ல ஓடற கழிவுநீரை, விவசாயத்திற்கு ஏத்த மாதிரி நல்ல தண்ணீரா மாத்திட்டோம்னா... நம்ம ஊர்த் தண்ணீர்ப் பிரச்சனையும் தீர்ந்திடும்... நம்ம கல்யாணமும் நடந்திடும்...” பாஸ்கர் தெளிவாகச் சொன்னான்.

மாலதி, பாஸ்கரை அதிசயமாகப் பார்த்தாள்.

“இந்தச் சாக்கடைத் தண்ணிய நல்ல தண்ணியா மாத்த முடியுமா...? இது நடக்கற காரியமா பாஸ்கர்...?”

“ஏன் முடியாது... பிரச்சனைன்னு வந்த பிறகுதான் தீர்வு தெரியுது மாலதி... நான் படிச்சது புவியியல். இந்த மண்ணைப் பத்தியும், பூமியைப் பத்தியும் நல்லாத் தெரியும்...”

“... ... ...”

“ஸாண்ட் ஃபில்டர்”னு ஒரு சிஸ்டம்... இயற்கையான முறையில் கழிவு நீரைச் சுத்தப்படுத்தற திட்டம். கழிவுநீர் வாய்க்கால்ல ஒவ்வொரு கிலோ மீட்டர் இடைவெளியிலயும், ஒன்றரை ஜல்லி, ஆற்று மணல், கரித்துண்டு, செங்கல், கூழாங்கல் இதையெல்லாம் வச்சி... மடைத்தடுப்பு போடறோம். ஒவ்வொரு தடுப்புலயும் கழிவு நீர்; கொஞ்சம், கொஞ்சமா சுத்தமாகிட்டே வரும். ஐந்தாவது மடைக்குப் பிறகு தண்ணீர் எழுபது சதவீதம் சுத்தமாயிடும்.

“இதற்கு அப்புறம், தண்ணீர் ஓடுற திசையிலேயே கல்வாழை, நாணல் பயிர் ரெண்டையும் கால்வாய் நடுவுலயே வளர்க்கறோம். இந்தக் கல்வாழையும் நாணல் பயிரும் கழிவுநீர்ல உள்ள அழுக்கைச் சாப்பிட்டு வளரும்... அதனால நமக்கு ஆறாவது கிலோ மீட்டர்ல இருந்து பாசனத்துக்குத் தேவையான சுத்தமான தண்ணீர் கெடைச்சிடும்.

“அதாவது ஐயாயிரம் டி.டி.எஸ். அளவுல இருக்கற கழிவுநீர், தடுப்பணைகள் தாண்டி ஆறாவது கிலோ மீட்டர்ல வர்றப்ப வெறும் எழுபது டி.டி.எஸ். அளவுக்குச் சுத்தமாயிடும். நூறு டி.டி.எஸ். முதல் முந்நூறு டி.டி.எஸ். வரைக்கும் இருக்கற தண்ணீரை நாம குடிநீராப் பயன்படுத்தலாம். இந்த நிலைமையில நமக்குக் கிடைக்கிற எழுபது டி.டி.எஸ். தண்ணீர் ரொம்ப ரொம்ப சுத்தமான குடிநீர்.”

பாஸ்கர் பேசப் பேச... மாலதியின் கண்களில் ஆச்சரியமும் திகைப்பும் மின்னியது.

“இதுக்கே ஆச்சரியப்பட்டா எப்படி... இன்னும் மெயின் பிக்சர் இருக்கு மாலதி.

“ஐந்து தடுப்பணைகள் தாண்டி, ஆறாவது கிலோ மீட்டர்ல கல்வாழையும், நாணல் பயிரையும் தாண்டி வர்ற தண்ணீர்ல ஒரு பகுதியைப் பிரிச்சு, ஒரு குளம் வெட்டிச் சேகரிக்கலாம். அதை மோட்டார் பம்ப் வெச்சி பம்ப் செய்யணும். இந்தச் சமயத்துல குளோரின் ப்யூரிபிகேசன் பண்ணலாம். அப்படிப் பண்ணும்போது, அந்தத் தண்ணீர் பாதுகாப்பான குடிதண்ணீராக் கூட மாறிடும்.”

“ஏய்... பாஸ்கர், இவ்வளவு விஷயத்தையும் எங்கிருந்துப்பா கத்துகிட்ட?”

“இப்பதான், ஒரு வருசத்துக்கு முன்னாடி ஃபீல்டு ஸ்டடிக்காக விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டைக்குப் போயிருந்தேன். அங்க ஆத்திப்பட்டிங்கிற ஊராட்சியில, இந்தத் திட்டத்தை அந்த ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் வெற்றிகரமாகச் செஞ்சிட்டு இருக்காரு. கடந்த பத்து வருசமா தண்ணீர்ப் பஞ்சத்தில் காஞ்சி கிடந்த ஊரு. இன்னைக்கு உபரித் தண்ணியைப் பக்கத்து ஊருக்கு லாரில விக்கிறாங்க...”

“ரொம்ப சந்தோஷமா இருக்கு பாஸ்கர். நம்ம ஊர்ல உடனே இதைச் செய்தாகணும்... ஏன்... இத்தனை நாளா... இதை என்கிட்ட சொல்லல...?”

“நமக்குக் கல்யாணம் நடக்கட்டும்னு காத்து கிட்டிருந்தேன் மாலதி. இதுக்கு இப்பதான் நேரம் வந்திருக்கு...”

“சரி, இப்ப என்ன பண்ணலாம்...” மாலதி ஆர்வமாகக் கேட்டாள்.

“அஞ்சு லட்சம் வரைக்கும் செலவாகும் மாலதி.”

“நம்ம பஞ்சாயத்துத் தலைவர்கிட்டே போய்ச் சொல்லுவோம். நம்ம பஞ்சாயத்துக்காக வர்ற வளர்ச்சி நிதியை இதுக்குப் பயன்படுத்தச் சொல்லுவோம். காசு பத்தலைண்ணா, ஊர்க்காரங்க கிட்ட கொஞ்சம் வசூல் பண்ணிச் செய்யச் சொல்லுவோம்.”

“வா... பாஸ்கர், இன்னைக்கே பஞ்சாயத்துத் தலைவரைப் போய்ப் பார்க்கலாம்...”

“இதெல்லாம் நடக்கற காரியமா தம்பி... வாய்ப்பே இல்லை... அதுவுமில்லாம, பஞ்சாயத்துக்கு அவ்வளவு நிதியெல்லாம் வர்றதில்லே... தெருவிளக்குப் போடறதுக்கே காசு இல்லாமத் திண்டாடறோம்...” பஞ்சாயத்துத் தலைவர் எடுத்த எடுப்பிலேயே மறுத்தார்.

“இல்லீங்க ஐயா... இந்தத் திட்டத்தை மட்டும் நிறைவேத்திட்டா, நம்ம ஊருக்குத் தண்ணீர்ப் பஞ்சமே வராது... நீங்கதான் கொஞ்சம் நம்பி இறங்கணும்...” பாஸ்கர் சன்னமான குரலில் கெஞ்சினான்.

“ஏதோ படிச்ச தம்பியா இருக்கீங்களேன்னு கேட்டுகிட்டு இருந்தேன்... என்னை வற்புறுத்தாதீங்க... நீங்க சொல்ற மாதிரி சாக்கடைத் தண்ணீரை நல்ல தண்ணீரா மாத்த முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. இப்படி ஒரு திட்டத்தை நான் கேள்விப்பட்டதும் கிடையாது...” சலித்துக் கொண்டே பேசினார் பஞ்சாயத்துத் தலைவர்.

பஞ்சாயத்துத் தலைவர் மட்டுமில்லை. பலபேர் இந்தத் திட்டத்தைக் கேலியும், கிண்டலுமாகத் தான் பார்த்தார்கள்.

சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தான் பாஸ்கர், மாலதிதான் உற்சாகப்படுத்தினாள். “முயற்சியை விடக்கூடாது பாஸ்கர், இது ஒரு நல்ல ப்ளான்... நாம அவங்களுக்குப் புரியற மாதிரிச் சொல்லுவோம்.. ஒண்ணு பண்ணலாம்... இந்த “ஸாண்ட் ஃபில்டர்” சிஸ்டத்தைச் சின்னதா ஒரு மாதிரி வடிவம் பண்ணி அதான்... ஒரு மினியேச்சர் மாதிரி பண்ணி எடுத்துக்கிட்டுப் போவோம்.. ஒரு பாட்டில் கழிவு நீர்; எப்படி சுத்தமான தண்ணீரா மாறுதுன்னு காட்டுவோம்... இந்தத் தடவை பஞ்சாயத்துத் தலைவருக்கு மட்டும் செஞ்சு காட்டாம... ஊர் மக்களுக்கும் சேர்த்துச் செஞ்சு காட்டுவோம்...”

மாலதி சொன்ன யோசனை பாஸ்கருக்குச் சரியாகவேப் பட்டது.

“ஸாண்ட் ஃபில்டர்” சிஸ்டம் மாதிரி வடிவம் கொண்டு வந்து செய்து காட்டியபோது, ஊரே கூடி வேடிக்கைப் பார்த்தது.

மாலதி ஓரமாக நின்று கொண்டு அவனுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள்.

“தம்பி... நிச்சயமா இந்தத் திட்டத்துக்கு நான் உதவி செய்யறேன் தம்பி... ஒண்ணுமே பண்ணாம இருக்கறதுக்கு இதைத்தான் செஞ்சு பாப்போமே... ஊர்க்காரங்க ஆளுக்கு ஆயிரம் ரூபாய் போட்டாப் போதும்... இந்தத் திட்டத்தை நிறைவேத்திடலாம்... தண்ணீர்ப் பிரச்சனையும் தீரும்... உருக்கொலைஞ்சி கிடக்கிற ஊரும் உருப்படும்...”

காசி தலையாரி முதல் ஆளாக பாஸ்கரின் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, ஆயிரம் ரூபாய் பணத்தையும் எடுத்து நீட்டினார். உடனே ஆளுக்கு ஆயிரம், ரெண்டாயிரம் என்று எடுத்துக் கொடுக்க, ஒரு மணி நேரத்தில் மூன்று லட்ச ரூபாய் வரை சேர்ந்துவிட்டது.

“நானும் இந்தத் திட்டத்துல ரொம்ப ஆர்வமாயிட்டேன் தம்பி. என் கைப்பணம் ஒரு லட்ச ரூபாய் தாறேன். உங்களை முழுசா நம்பி இந்தக் காரியத்துல இறங்கறேன் தம்பி... எனக்கென்னமோ இன்னமும் சந்தேகமாத்தான் இருக்கு...” பயந்து கொண்டேதான் பணத்தைக் கொடுத்தார் பஞ்சாயத்துத் தலைவர்.

அவருடைய பயத்தைப் போக்குவதற்கு ஆறு மாதங்களாகிவிட்டன.

கழிவுநீர்க் கால்வாயில் ஐந்து இடங்களில் “ஸாண்ட் ஃபில்டர்” சிஸ்டம் அமைத்திருந்தார்கள். ஐந்தாவது ஃபில்டருக்குப் பிறகு நீர் கல்வாழையையும், நாணல் பயிரையும் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது.

நகரத் தொழிற்சாலைகளின் நச்சுப்பொருள்கள் கலந்து பயிர் சாகுபடிக்கு உபயோகம் இல்லாமல் கழிவுநீரைச் சுமந்த பெரிய வாய்க்கால், இப்போது தெளிந்த நீரைச் சுமந்து, மறுபிறவி எடுத்துப் புனிதநதி போல ஓடிக் கொண்டிருந்தது. கால்வாயின் இரு கரைகளிலும் பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தன.

ஆறே மாதங்களில் பெரிய வாய்க்கால் வற்றாத ஜீவ நதி மாதிரி மாறிப் போயிருந்தது.

ஐயனார் கோயில் களத்துத் திடலில் அமர்ந்து ஓடுகிற தண்ணீரின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

“எப்படியோ, வாய்க்கால்ல நல்ல தண்ணீர் கொண்டு வந்து, ஊரைச் செழிக்கவச்சி,

மாமனாரை மடக்கி, இந்த மாலதியையும் மடக் கிட்டீங்க...” வெட்கத்தில் சிரித்தாள் மாலதி.

“நம்ம ஊருக்கு மட்டும் இல்ல மாலதி... வறட்சியில சிக்கியிருக்கிற ஒவ்வொரு ஊருக்கும் இந்த சிஸ்டத்தைக் கொண்டு போகணும். அது தான் என் திட்டம்...”

அவன் குறும்பாக இரு கைகளாலும் பெரிய வாய்க்கால் நீரை அள்ளி அவள் மீது தெளித்தான்.

அது, அவள் கட்டியிருந்த புதுத் தாலியில் பட்டு ஜொலித்தது.

கோவை பாரதிய வித்யா பவன் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர், எதையும் புதுமையாகச் சிந்திப்பவர். இந்த நூற்றாண்டையே உலுக்கிய கொரோனா வைரஸ் தொற்று நோயின் தாக்கத்தால் ஏற்பட்ட அதிர்ச்சிகளைச் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

'முற்போக்கு,' 'பிற்போக்கு' என்று பேசப்படுகிற இன்றைய சமுதாயத்தில், வாணவராயர் 'நற்போக்கு' என்ற புதிய பாதையை நமக்குக் காட்டியிருக்கிறார்.

– இ.ஆர்.

ஒரு புதிய இயல்பை நோக்கி...

“இன்று நாம் 21–ஆம் நூற்றாண்டில் இருக்கின்றோம். இந்த நூற்றாண்டு பல வகையிலும் ஓர் உன்னதமான நூற்றாண்டாகும். இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு மகத்தான முன்னேற்றம் அறிவியல் தொழில் நுட்பத்தின் ஓர் அபரிமிதமான வளர்ச்சி, அறிவு யுகத்தின் தொடக்கமாகவும் கொள்ளலாம். இதுவே மனித சமுதாயத்தின்மீது ஏற்படுத்திய ஒரு மிகப்பெரிய தாக்கமாகும்.

நிமிடம் உயர்ந்து, இன்று அனைத்து ஆடம்பரங்களும் அத்தியாவசியங்கள் ஆகிவிட்டன.

உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கைகள், வரம்பை மீறிய நுகர்வியல் கலாச் சாரத்தைத் தோற்றுவித்துள்ளன. பெரும் மனித உழைப்பைக் கொண்டு உருவாக்கிய உற்பத்தி, இன்று முழுவதும் இயந்திரமயமாகி விட்டது. நம் தேவைக்குப்

கடந்த நூறு ஆண்டுகளில் இல்லாத ஒரு வளர்ச்சியை அறிவியல் கண்டது. மனித நாகரிகம் தோன்றிய காலந்தொட்டு ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியைக் காட்டிலும், அண்மைக்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி அதிகமானதாகும். இன்று, இந்த அறிவின் தாக்கத்தை எதிர்கொள்ள முடியாத நிலையில் மனித சமுதாயமும் சிக்கித் தவிக்கின்றது. இனி வரும் காலங்களில் அறிவின் வளர்ச்சி, எத்தகையதாக இருக்கும் என்பதைக் கணிப்பது சாத்தியமில்லை.

மேலே குறிப்பிட்டுள்ள மிக வேகமான மாற்றங்கள் மனிதனுடைய வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, அவனுடைய முன்னுரிமைகளை மாற்றி அமைத்துள்ளன. இதன் காரணமாக, மனிதன் வாழ்க்கை முறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியதோடு, அவனது எதிர்பார்ப்புகளும் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளன. மனிதனின் தேவைகள், நிமிடத்திற்கு

பொருள்களை உற்பத்தி செய்கிறோமா அல்லது உற்பத்திக்கேற்பத் தேவைகளைப் பெருக்கிக் கொள்கிறோமா என்பது விடைகாண முடியாத ஒரு விந்தையாக உள்ளது.

போலித்தனமும், பகட்டுமே இன்றைய எதார்த்தங்கள் ஆகிவிட்டன. இலக்கு மட்டுமே முக்கியம். அதை அடையும் மார்க்கங்களைப் பற்றி இன்றைய மனிதன் கவலைப்படுவதாக இல்லை. அபரிமிதமான உற்பத்தியும், போட்டிகள் நிறைந்த பொருளாதாரச் சூழ்நிலையும் காலங்காலமாகக் கடைப்பிடித்து வந்த வர்த்தக நெறிகள் மறைந்து போயின. இதற்கு மனிதன் தந்த விலை, அவனுள் இருந்த மனநிறைவையும், நிம்மதியையும் இழந்ததே ஆகும்.

வல்லமை படைத்தவனே வாழ்வான் என்று சொல்லுவது இன்றைய சந்தைப் பொருளாதாரம். மாறாக, அனைவரையும் வல்லமை பெறச்செய்ய வேண்டும் என்பதே காந்தியப் பொருளாதாரமாகும்.

டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர்

மனிதன் தன்னுடைய தவறான போக்கின் காரணமாக இன்று வலுவிழந்து, தனிமைப்பட்டு நிற்கின்றான். வீட்டிலும், வெளியிலும் பாது காப்பற்ற ஒரு தன்மையை இன்று அவன் உணர் கின்றான். தெய்வீகத்தையே தன்னுடைய உண்மையான சொரூபமாகக் கொண்ட மனிதன், இன்று மிருக உணர்வுகளுக்கு ஆட்பட்டு, தன்னு டைய எண்ணத்திற்கும், சொல்லுக்கும், செய லுக்கும் வேறுபட்டு, ஒரு பிளவுபட்ட அவல நிலைக்கு உள்ளாகி உள்ளான்.

மனிதன் தன்னுடைய சுயத்தைவிட்டு விலகி வெகுதூரம் கடந்து வந்துவிட்டான். அறிவிற்கும், ஞானத்திற்கும் இடையே பெரும் இடைவெளியை இன்று உணர்கின்றோம். வெறும் உடல் உறுதியை யும் மனவளத்தையும் மட்டுமே நம்பியிருந்தால், சில நேரங்களில் விபரீதமாகப் போக வாய்ப்புண்டு. ஆகவே, ஆன்மிக அறிவும் அவசியம் என்று சொன்னார் தத்துவப் பேரறிஞர் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

“பழைமையை நோக்கி” என்று சொல்வதும், அனைத்தும் மாறவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் வாதத்திற்குப் பொருத்தமாக இருந்தாலும், நடை முறைக்குச் சாத்தியமில்லை. புவியைக் காப்போம் என்பது வெறும் சுலோகமாக இல்லாமல், மனிதன் தன்னுடைய தேவைகளை வரையறை செய்து கொள்ளுவதன் மூலமாக மட்டுமே சாத்தியமாகும்.

எளிமையான வாழ்வு, உயர்வான சிந்தனை என்பதே காந்தியடிகள் போதித்த வாழ்க்கை முறையாகும். மேலும் மனித னுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயற்கையால் முடியுமே அல்லாமல், அவனது பேராசையைப் பார்த்துக்கொள்ள இயலாது.

இன்று கொரோனா தொற்று நோய் காரணமாக உலகமே ஸ்தம்பித்துப் போய் உள்ளது. மனிதன் செயலிழந்து, செய்வத றியாது அவரவர் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கின்றார்கள்.

கண்டறியாத, கேட்டறி யாத இந்த மாபெரும் அவலத் திலிருந்து மனிதன் பாடங்கள் கற்றுக் கொண்டு அவன் தனது வாழ்வைப் புரிந்து கொள்வதிலும், அறிந்து கொள்வ திலும், எதிர்கொள்வ திலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு ஒரு ‘புதிய இயல்புக்குத்’ தயாராக வேண்டும்.



சுவாமி விவேகானந்தர்

ஒரு புதிய இயல்பு என்கின்ற ஓர் இலக்கை எதிர்கொள்வதற்கு, வீரத்துறவி விவேகானந்தர் கூறிய விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இணைந்து ஒன்றோடு ஒன்று அனுசரித்துச் செல்வதே தீர்வாகும்.

இதற்கேற்ப மனிதன் தன் கண்ணோட்டத்தை மாற்றிக்கொண்டு, அதற்கான கொள்கைகளை உருவாக்கி, இயற்கையோடு இசைபட வாழ்ந்து பொருளாதார மேம்பாட்டைப் பெற, உறுதி பூண வேண்டும்.

மொத்தத்தில் மனித நேயமும், ஆன்ம நேயத் தையும் உள்ளடக்கிய ஒரு மனித மேம்பாடே அனைத்திற்கும் தீர்வாகும். வெறும் பொருளாதார மேம்பாடு மட்டுமே இலக்காகக் கொண்டால், மனிதனுள் உறங்கிக் கொண்டிருக்கும் சுயநலம், பேராசை, போட்டி, பொறாமை ஆகிய மிருக உணர் வுகளைத் தட்டி எழுப்பும் பேராபத்தில் முடியும்.

சுவாமி விவேகானந்தரின் கூற்றின்படி மனிதன் மகத்தானவன். இறைவனின் படைப்பி லேயே உயர்வானவன். அவன் விதியை அவனே நிர்ணயிக்கின்றான். அனைத்துத் திறன்களும் அவனுள் ஏற்கனவே உள்ளன. அவன் எதுவாக விரும்புகின்றானோ, அது வாகவே ஆகின்றான்.

அரிதான இம்மனிதப் பிறப்பை அலட்சி யம் செய்யாமல், பொறுப்போடு வாழ்ந்து தன் னையும் உயர்த்திக் கொண்டு, தன் னைச் சுற்றியுள்ள இயற்கையை யும் பேணிக்காத்து, ‘ஒரு புதிய இயல்பு’ உருவாகக் காரண மாக இருப்பதே விவேக மாகும்.”

நடமாடும் தெய்வங்கள்

கதிரவனுக்கும் உண்டு
இரவில் ஓய்வு!
கவின்மிகு நிலவுக்கும் உண்டு
பகலில் ஓய்வு!
கடமையே கண்ணாகக்
கொண்ட மருத்துவருக்கோ
செவிலியர்க்கோ
இல்லை ஓய்வு இன்று!
மொத்த உலகத்தையே தாக்கி
கொத்துக் கொத்தாக உயிர் பறிக்கும்
கொள்ளை நோய் கொரோனாவால்...
பீதியில் உறைந்ததே மக்கள் கூட்டம்!
கதிகலங்கிப் போனதே இவ்வுலகம்!

தன் வலி மறந்து
தன் விருப்பம் துறந்து
அல்லும் பகலும்
அயராது விழித்திருந்து
நோயாளிகளின் உயிர் காக்கும்
மகத்தான பணிசெய்யும்
மருத்துவர்கள்...

வெ.ஜெயலட்சுமி

எவ்விடம் சென்றாலும்
நடமாடும் தெய்வங்கள்தான் !

உண்ண நேரமின்றி
உறங்க நேரமின்றி
அன்பை மட்டுமே அகத்தில் ஏந்தி
புன்னகையை முகத்தில் ஏந்தி
புத்துணர்ச்சியுடன் வலம் வரும்
புனித ஆத்மாக்கள்...

சுத்தம் என்ற
தாரக மந்திரம் சுமந்து
தன்னலம் கருதாது
அனுதினமும்
குவிந்திருக்கும்
குப்பைகளைக் கூட்டி அள்ளி
மண்ணின் அழுக்கை அழிக்கப்
பணி புரியும்
துப்புரவுப் பணியாளர்கள்...

ஆரவாரமின்றி
அருவருப்பின்றி
அர்ப்பணிப்புடன்
நோயுற்றோரைக் காக்க
வாழ்ந்து கொண்டிருக்கும்
அன்னை தெரசாக்கள்...

விண்ணிலோ அன்றி
மண்ணிலோ வாழும்
கண்ணுக்குத் தெரியாத
எதிரியுடன் போராடும்
போராளிகள் இவர்கள்...
மனித நேயம் சுமக்கும்
மாமனிதர்கள்!

இரவு பகல் பாராது
இயங்கும் இவர் கண்டு
நெஞ்சில் ஈரம் கொண்டு
கொஞ்ச நேரமாவது நினைப்போம் !
இவர்கள் வாழ வேண்டுவோம்
நலமாக நாளும் !
இதயம் கனிந்து நவில்வோம்.
நன்றி! நன்றி! நன்றி!

85–ம் பக்கத் தொடர்ச்சி

அன்னையும் சென்றார்.

யாழ்ப்பாணத்தில் சிவ பிருந்தா தேவியின் சொற்பொழிவு, சைவ சமயத்தில் பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. நூற்றுக்கணக்கான அன்பர்கள்

சிவ பிருந்தாதேவி

வைர நகைகள் அணிந்து, வாசனைத் திரவியங்கள் கமகமக்க வலம் வந்தவர் இவர். அவருடைய செயல்கள் மற்றவர்களுக்கு ஆடம்பரமாகக் காட்சியளித்தன.

பின்னர், திருமந்திரம், திருவருட்பா, திருவாசகம், பெரியபுராணம் ஆகிய சமய

பேரூர் & கௌமாரம் ஆதீனங்களுடன்...

சிவ பிருந்தாதேவியின் சீடர்களாக மாறினர் எனலாம். அத்தகைய சிறப்பு வாய்ந்ததாக இலங்கைப் பயணம் அமைந்தது. அதன் விளைவு, பல முறை இலங்கைக்குச் சென்று நமது சமய, பண்பாட்டு நெறிகளைப் பரப்பி வந்தார்.

சுவாமி தயானந்த சந்திரசேகரா

இளமை முதலே சாரணர் இயக்கத்தின்மீது நம்பிக்கை கொண்டிருந்த சிவ பிருந்தா தேவி, புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள இளைய சமுதாயத்தினர் விரும்பிச் சேரும் இயக்கமாக அதனை வளர்த்து எடுத்தார். சாரணர் இயக்கத்தின் மாவட்ட ஆணையராக அவர் பெருமைப் படுத்தப்பட்டார்.

இளமைக் காலத்தில் பட்டாடைகள், பளபளக்கும்

நூல்களை இரவு முழுவதும் உறக்கமின்றிப் படிப்பதும், பகல் வேளையில் திருக்கோயில்களுக்குச் சென்று அங்கு அமர்ந்திருப்பதும் அவருடைய பணிகளாகின. இம்மாற்றத்தைக் கண்ட அவருடைய உறவினர்களும், இல்லத்துக் குழந்தைகளும் ஆச்சரியப்பட்டனர்.

1971–இல் லௌகீக வாழ்வை முழுமையாக விடுத்துத் தமிழுக்கும், தவத்திற்கும், சிவப் பணிக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

அப்போது ஆந்திர மாநிலத்திலிருந்து வருகை புரிந்த அருளாளர் விபூதி சாயிபாபாவைத் தரிசிக்கச் சென்ற பிருந்தாதேவி, விபூதி பாபாவை வணங்கினார்.

பவத்திறம் அறும்படியாக, தவத்திறம் பூண்டொழுகிய சிவபிருந்தாதேவி, அன்று முதல் சாயிமாதா எனும் அடைமொழியோடு அழைக்கப்பட்டார்.

திருச்சிக்குச் செல்லும்போது புதுக்கோட்டை நகரத்திற்கு வருகை தந்த பெரியார் ஈ.வெ.ரா.,

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகளிர் இல்லத்தைக் காணவும், சிவ பிருந்தாதேவி அவர்களைச் சந்திக்கவும் விருப்பம் கொண்டார். அன்னையாருக்கு இன்ப அதிர்ச்சியைத் தந்தது.

அங்கு பேசிய தந்தை பெரியார், “இங்கு வருகை புரியக் காரணம், சாயிமாதா பெண்களுக்குச் செய்து வருகிற சேவைகளைப் பற்றிப் பலர் என்னிடம் சொல்லியிருக்காங்க. அதுவும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பரம்பரையிலே வந்தவங்க சாயிமாதா. சாமியார்களுக்கு அளிப்பதைப் போல, எனக்கும் பூர்ணகும்ப மரியாதை கொடுத்து விபூதிகூடப் பூசி விட்டாங்க! அது அவங்களோட நம்பிக்கை. என் நம்பிக்கையைப் பற்றி நான் சொல்ல வேண்டாம். அது அனைவருக்கும் தெரிஞ்சதுதான். அதைப்பற்றிப் பேசுவதற்கு இது இடமில்லை.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பேராலே ஓர் அமைப்பை உருவாக்கி, பெண்களுக்கு நல்ல சேவை செய்து வருகிற அம்மாவைப் பார்த்து வாழ்த்திட்டுப் போகலாமின்னுதான் காசு வாங்காம இங்கே வந்தேன். நான் இங்கே வந்து போறதுனாலே அம்மா இன்னும் கொஞ்சம் தைரியமா, காரியங்களைச் செய்யலாம்... செய்ய வேணும்... செய்வாங்கன்னு நம்பறேன்” என்றார்.

1972 ஜூலை 12–ஆம் நாள், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் இங்கு வருகை தந்து சிறப்பித்தார்.

சாயிமாதா சேவைகளில் சிறப்பாக ஈடுபட்டு வந்ததைப்போல, எழுத்துப் பணியிலும் ஈடுபட்டு வந்தார். அவர் எழுதிய மூன்று நூல்களும் முக்கியமானவை. “மனிதன் எங்கேயோ போகிறான்” எனும் தத்துவ ஞான நூல் மிகச் சிறந்த நூல். யாழ்ப்பாணத்தில் அது வெளியிடப் பட்டது.

தென்னிந்தியத் திருக்கோயில்களைத் தேடித் தேடிச் சென்று வழிபாடு செய்ததைப்போல, வட இந்தியப் பயணத்தையும் அன்னை அவர்கள் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் விளைவாக, **‘சேத்ராடனம்’** எனும் வடநாட்டுப் பயணங்களைப் பற்றிய நூலையும் எழுதி முடித்தார்.

இளையாத்தங்குடியில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், இந் நூலை வெளியிட்டு அருளாசி வழங்கிச் சிறப்பித்தார்.

இவருடைய மூன்றாம் நூல் ‘இந்து மதம்.’ இதனை மதுரையில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வெளியிட்டு அருளாசி வழங்கினார்.

ஈழ மண்ணில் வெளியிடப்பட்ட **‘மனிதன் எங்கேயோ போகிறான்?’** நூலின் இரண்டாம் பதிப்பு, சென்னை மயிலாப்பூர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் 1978–ஆம் ஆண்டு நடைபெற்றது. இதுவும் ஒரு வரலாற்று நிகழ்வாக அமைந்தது.

இந்நிகழ்வில் தமிழக முன்னாள் முதல்வர் கனம் பக்தவத்சலம், அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., நீதியரசர் கிருஷ்ணசாமி ரெட்டியார், “ஞானபீடம்” அகிலன், பத்மஸ்ரீ சரோஜினி வரதப்பன், பத்மஸ்ரீ அம்புஜத்தம்மாள், எழுத்தாளர் வசுமதி இராமசாமி, பித்துக்குளி முருகதாஸ், வாசகம் இ.ஆ.ப. எனப் பல்துறைகள் சார்ந்த பெருமக்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

பிருந்தாதேவிக்கு இந்தி நன்றாகத் தெரியும். அமெரிக்காவிற்கும் சென்று அரும்பணி ஆற்றினார். அங்கு இரு மாதங்கள்

அமெரிக்காவில் பிருந்தாதேவி உரையை ஆங்கிலத்தில் கூறிய டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி



இந்துக்களின் பல்வேறு அமைப்புகளிலும் அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் இந்துமதம் பற்றியும், இந்தியக் கலாச்சாரம் பற்றியும் உரை ஆற்றினார். இவருடைய உரையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உதவியவர் இவருடனிருந்த எழுத்தாளர் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி அவர்கள்.

1979–ஆம் ஆண்டு, தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (Divine Life Society) மலேசிய நாட்டில் நடத்திய சமய மாநாட்டில் பங்கேற்றார்.

அன்னை அவர்கள் 1998–ஆம் ஆண்டு தமது 71–வது வயதில் சிவபதம் அடைந்தார்.

புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம், மங்கையர்க்கரசியின் திருப்பெயரில் தொடங்கப்பட்ட ஒரு மகத்தான சைவ சமய ஆதீனம். அதைத் தொடங்கியவர், துறவு வாழ்க்கை மேற்கொண்ட ஸ்ரீ சாயிமாதா சிவ பிருந்தாதேவி அம்மையார்.

அதன் பிறகு அந்த ஆதீனம் தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகளின் நிர்வாகத்தில் இயங்கி வருகிறது. திலகவதியார் திருவருள் ஆதீனம், தொய்வின்றித் தொடர்ந்து செயல்படுவது மகளிருக்குப் பெருமை.

இந்த ஆதீனம், சைவ சமயத்தில் பெண் துறவிகளை உருவாக்கும் பெரும் பணியில் ஈடுபட வேண்டும் என்பது பலரது எதிர்பார்ப்பு. கிறிஸ்தவ மதத்தில் பெண் துறவிகளான கன்னியாஸ்திரீகளை உருவாக்குவதிலும், அவர்களைச் சேவைத் துறையில் ஈடுபடுத்துவதிலும் கத்தோலிக்கத் திருச்சபை சிறப்பாகச் செயல்பட்டு வருவது நம் எல்லோருக்கும் தெரியும்.

சமண மதத்திலும் பெண் சமணத் துறவிகள் ஞானச் சேவை செய்கிறார்கள்.

இதுபோல சைவ சமயத்தில் பெண்பாற் துறவிகளை உரிய பயிற்சி மூலமாக உருவாக்குவதற்கும் ஓர் அமைப்புத் தேவை. அந்த அமைப்பைத் தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், மயிலை பொம்மபுரம் ஆதீனம், பேரூராதீனம், கௌமார ஆதீனம் முதலிய எந்த ஆதீனமும், பெண் துறவிகளை உருவாக்குவதற்கானப் பயிற்சித் திட்டத்தோடு செயல்படுவதாகத் தெரியவில்லை.

ஆணுக்குப் பெண் சமம் என்ற இந்த நவீன காலத்தில் ஆண் துறவிகளைப் போலவே, பெண் துறவிகளுக்கும் சமூகத்திற்குத் தொண்டு செய்ய வாய்ப்பிருக்க வேண்டும்.

அந்த வாய்ப்பிற்கான வாசலைத் தமிழ்நாட்டில் அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவியின் திருக்கரங்கள்தான் திறந்து வைத்துள்ளன. அந்தத் திருமடத்தில் பெண் துறவிகளுக்கான பயிற்சித்திட்டமும் உருவாக்கப்படுமானால், பெண் துறவிகள் உருவாக முடியும்.

துறவும் ஒரு வாழ்க்கை முறைதான் என்று பெண் துறவிகள் பெருமையாக இதில் பயிற்சி பெற முன்வருவார்கள். அதில் சந்தேகமில்லை.

அந்த வகையில், புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம், பெண் துறவிகளுக்கான திசை காட்டும் தீபமாக விளங்கும் என்று நம்புவோம்.

– நாதன்

செங்காளியப்பன் மருத்துவமனை டாக்டர் கே. சண்முகசுந்தரம் மறைவு

கோவையில் பழமை வாய்ந்த செங்காளியப்பன் மக்கள் மருத்துவமனையின் உரிமையாளர் டாக்டர் கே. சண்முகசுந்தரம் மறைவு பாமர மக்களுக்குப் பெரிய நஷ்டமாகும்.

இந்த மருத்துவமனைக்குப் பெருந்தலைவர் காமராஜர் ஒருமுறை தனது தொண்டரைப் பார்க்க வந்திருந்தது இன்றைக்கும் பலருக்குப் பசுமையான நினைவில் இருக்கிறது.

கோவை அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைப் பிரிவின் தலைவராகப் பதவி வகித்துப் புகழ் பெற்றவர் டாக்டர் கே. சண்முகசுந்தரம்.

இவருடைய அடக்கத்தையும், ஆளுமையையும் அறிந்து, இவரைச் சிறப்பிக்க வேண்டும் என்று அருட்செல்வர் பொள்ளாச்சியில் அவருடைய நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி நிறுவனர் விழாவில் டாக்டர் சண்முகசுந்தரத்திற்கு "கொங்கு நாட்டுச் சாதனையாளர்" விருதை (2014) வழங்கிச் சிறப்பித்தார்.

88–ஆவது வயதில் கடந்த மே மாதம் அவரை நாம் இழந்துவிட்டோம்.

அவருடைய ஆன்மா சாந்தியடைய 'ஓம் சக்தி' சார்பாக எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

– இ.ஆர்.

பேரா. எழுத்தாளர் அய்க்கண் மறைவு

எழுத்தாளர் அய்க்கண் சிறந்த படைப்பாளிக்கு உரிய இளகிய மனம் உடையவர். துன்ப, துயரங்களுக்கு உட்பட்ட மக்களிடம் அளப்பரிய இரக்கம் கொண்டவர். 800–க்கும் அதிகமான சிறுகதைகளை எழுதியவர்.

'ஓம் சக்தி'யில் அவருடைய கதைகள் ஒவ்வொரு தீபாவளி மலரிலும் மாத இதழ்களிலும் இடம்பெற்று வந்தன. அருட்செல்வரிடம் மிகுந்த பக்தி கொண்டவர்.

அன்பும், பண்பும் கொண்ட படைப்பாளி அய்க்கண் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. இலக்கியத் தமிழுக்கு இது ஒரு சரிவுதான். சென்ற ஏப்ரல் மாதம் இயற்கை எய்திய மனித நேயரும், படைப்பாளியுமாகிய எழுத்தாளர் அய்க்கண் அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

– இ.ஆர்.

LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கன்டிஷனர், வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.

- Easy Finance Options BAJAJ Finance
- Exchange offer
- Gift Coupons Available
- *Free gift with every purchase
- *Free delivery with in city Limits
- Open on Sundays

வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

NM

*For purchase above RS.8000/- condition apply

LG	SAMSUNG	SONY	PHILIPS	VIDEOCON	ONIDA
Godrej	Whirlpool	SIEMENS	IFB		Prestige
ELGI ULTRA	Preethi	V-GUARD	BOSCH	Micromax nothing like anything	HAVELLS
VOLTAS LIMITED	Butterfly®	TATA Sky	Crompton Greaves	USHA	
BPL EMERGENCY LIGHT	Preethi INDUCTION COOK TOP	EUREKA FORBES Your friend for life		CASCADE	VENUS WATER HEATER

D by sr printes 9843110277

நா. மகாலிங்கம் & கம்பெனி

68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.6.2020

Regd.No.CB/016/2018-20
OM SAKTHI - JULY - 2020

Dr. MAHALINGAM MCET COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
Enlightening Technical Minds Estd. 1998
An Autonomous Institution (Since 2011)

Dr. MAHALINGAM
COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY

Affiliated to Anna University, Chennai; Approved by AICTE ; Accredited by NAAC with Grade 'A++'
Accredited by NBA - Tier1 (Mech, Auto, Civil, EEE, ECE, E&I and CSE)
Udumalai Road, Pollachi - 642 003 Tel: 04259-236030/40/50 Fax: 04259-236070 www.mcet.in

COUNSELLING CODE
2706

MCET has been recognised by MHRD to establish "Institution Innovation Council (IIC)"

MIC

NBA NATIONAL BOARD OF ACCREDITATION
TIER 1 ACCREDITED COURSES*

nirf
NIRF INDIA RANKINGS 2019:
MCET Ranked 184th in Engineering Category

Empowering Students to accomplish their dreams

Dr. Mahalingam College of Engineering & Technology (MCET), an engineering institution with two decades of service offers quality education and training.

Programmes

B.E. / B.Tech
(*Tier 1 - Accredited by NBA)

Mechanical Engg.*
Automobile Engg.*
Mechatronics Engg.
Civil Engg.*
Electrical & Electronics Engg.*
Electronics & Communication Engg.*
Electronics & Instrumentation Engg.*
Computer Science & Engg.*
Information Technology

M.E / MCA

CAD / CAM
Computer Science & Engg.
Embedded System Technologies**
Communication Systems
Structural Engg.
Master of Computer Application

Ph.D

Mechanical Engg.
Electronics & Communication Engg.
Computer Science & Engg.
Civil Engg.
Physics

**awaiting approval

MCET has the unique position of being the only **Autonomous (since 2011)** Engineering College in Tamil Nadu till date to have been conferred with the **highest grade of A++** by National Assessment and Accreditation Council (NAAC)

MCET has secured Platinum Ranking in 2019 for the Second Consecutive Year in the AICTE-CII Survey of Industry Linked Technical Institutions 2019.

18 CENTERS OF EXCELLENCE
90% STUDENTS OFFERED PLACEMENTS
1309 STUDENTS UNDERWENT INTERNSHIP
MCET CONNECT – INTERACTIVE LEARNING EXPERIENCE THROUGH TABLETS

On Campus Techno-Commercial Ventures (Caresoft Global Pvt. Ltd., VVDN Technologies, ABT Info.net - An Internet Data Centre, ABT Maruti Ltd.)

International Collaboration with Canadian & Australian University

NIA